விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: இருபது

சங்கு 12 வள்ளுவர் ஆண்டு 2042 ஆவணி 13 செவ்வாய்க்கிழமை (30.08.2011) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 254

ரா ம் கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) றாம்கோ சீமெந்து

## ஆளுநரின் செயலாளராக இளங்கோவன் நியமனம்

### நியமனக் கடிதம் அனுப்பிவைப்பு

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளராக எல்.இளங்கோவன் நியமிக்கப்பட்டுள்ளார். அத்துடன் வட மாகாணக் கல்வி, பண்பாட்டலுவல்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளராகவும் அவர் நீடிப்பார் என ஆளுநரின் அலுவலகத் தகவல்கள் தெரிவித்தன.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வடக்கு மாகாணக் கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் எல்.இளங்கோவன் கடந்த ஒரு மாதத்திற்கும் மேலாக வடக்கு மாகாண ஆளுநரின் பதில் செயலாளராக கடமை வகித்தார்.

இந்நிலையில் வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளராக நியமனம் வழங்கப்படுவதாக எல்.இளங்கோவனுக்கு நேற்று ஆளுநரினால் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அத்துடன் (20ஆம் பக்கம் பார்க்க)

## நடுக்கடலில் படகு கவிழ்ந்தது மீனவர் ஒருவர் உயிரிழப்பு!

### மற்றொருவரின் நிலை கவலைக்கிடம்

(மண்டைதீவு)

நடுக்கடலில் படகு கவிழ்ந்து மீனவர் ஒருவர் பரிதாபமாக உயிரிழந்ததோடு மற்றுமொருவர் கவலைக்கிடமான நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் கற்கடதீவு பகுதியில் இடம் பெற்றுள்ளது.

இதில் மண்டைதீவு ஐந்தாம் வட்டாரத்தைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான யாக்கோப்பு நிலானியஸ் (நிக்ஷன்) (வயது 32) என்பவரே உயிரிழந்தவராவார்.

அத்தோடு அதேயிடத்தைச் சேர்ந்த அன்ரனி லியூக்ஸ் என்பவர் ஆபத்தான நிலையில் மீட்கப்பட்டு யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

குறித்த நபர்கள் இருவரும் நேற்று முன்தினம் பிற்பகல் (20ஆம் பக்கம் பார்க்க)

## சுழிபுரத்தில் நேற்றிரவு மர்ம மனிதர் நடமாட்டம்

### துரத்திச் சென்றபோது தப்பி ஓட்டம்

(சுழிபுரம்)

சுழிபுரத்தில் மர்ம மனிதரின் நடமாட்டம் காணப்பட்டதை அடுத்து அப்பகுதி மக்கள் அச்சத்தில் உறைந்து போயுள்ளனர்.

சுழிபுரம் மேற்கு குடாக்கனைப் பிரதேசத்தில் நேற்று இரவு 8.40 மணியளவில் 4 மர்ம மனிதர்கள் நடமாடியுள்ளனர். இதனை அவதானித்த மக்கள் அவர்களைத் துரத்திச் சென்றுள்ளனர். எனினும் அம் மர்ம மனிதர்கள் தப்பிச் சென்றுள்ளனர். இதனையடுத்து சம்பவ இடத்திற்குச் சென்ற இராணுவத்தினர் வீதிச் சோதனையில் ஈடுபட்டனர். (ச-9,46)

## கைதான மாணவன் விடுதலையானான்

(யாழ்ப்பாணம்)

பதினொரு வயதில் ஒருவரை படுகொலை செய்ததாக குற்றஞ்சாட்டி பாடசாலை மாணவன் ஒருவர் ஊர்காவற்றுறை தம்பாட்டிப் பகுதியில் கைது செய்யப்பட்டுள்ளார்.

எனினும் ஊர் மக்களிடையே எழுந்த கடும் எதிர்ப்பினையடுத்து கைது செய்யப்பட்ட மாணவர் நேற்று விடுவிக்கப்பட்டுள்ளார்.

ஊர்காவற்றுறை பொலிஸ்நிலையத்தில் இருந்து சென்ற குற்றப்புலனாய் (20ஆம் பக்கம் பார்க்க)

## சிறுமியை காணவில்லை உடுப்பிட்டியில் பரபரப்பு

(உடுப்பிட்டி)

உடுப்பிட்டியில் 13 வயதுச் சிறுமி காணாமல் போனதால் அப்பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

உடுப்பிட்டி இமையாணன் பகுதியைச் சேர்ந்த கனகரட்ணம் லக்சிகா (வயது 13) என்பவரே காணாமல் போயுள்ளதாக வல்வெட்டித்துறை காவல் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவரு (20ஆம் பக்கம் பார்க்க)

## மர்ம மனிதன் என்ற பீதியை தூண்டிவிட்டது கூட்டமைப்பே!

### கருணாவின் குற்றச்சாட்டிற்கு மறுப்பு

(மட்டக்களப்பு)

**மட்டக்களப்பு மாவட்டத்தில் மக்களிடையே மர்ம மனிதன் என்ற பீதியை மாவட்டத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களே தூண்டிவிட்டதாக மீள்குடியேற்ற பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் கூறியிருப்பது அரசியலில் அவரது முதிர்ச்சியற்ற தன்மையைக் காட்டுவதாக மட்டக்களப்பு மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.**

நேற்று பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் களுவாஞ்சிக்குடி, கொக்கட்டிச்சோலை மற்றும் வெல்லாவெளி ஆகிய பொலிஸ் பிரிவுகளுக்கான சிவில் பாதுகாப்பு குழுக் கூட்டத்தில் வெளியிட்ட இக் கருத்துத் தொடர்பாக தமது அதிருப்தியையும், கண்டனத்தையும் வெளியிட்டுள்ள மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர்களான பொன்.செல்வராசா, பா.அரியநேத்திரன் மற்றும் சீ.யோகேஸ்வரன் ஆகியோர் கூட்டாக அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளனர்.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

மர்ம மனிதன் பீதி காரணமாக மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழ் பேசும் மக்கள் கடந்த இரு வாரங்களுக்கு மேலாக அச்சமும் பீதியும் நிறைந்த சூழலில் வாழ்ந்தார்கள் என்பதை அந்நேரத்தில் மக்களோடு மக்களாக இங்கு இருந்திருந்தால் இக் கருத்துக் கூறிய பிரதியமைச்சர் உண்மை (20ஆம் பக்கம் பார்க்க)

## ஜெனீவா கூட்டத்திற்கு முன் பிளேக் இலங்கை வருவார்

(கொழும்பு)

இலங்கைக்கு நேற்று பயணத்தை மேற்கொள்ளவிருந்த அமெரிக்க இராஜாங்க திணைக்கள உதவிச் செயலர் றொபேர்ட் ஓ பிளேக் கடைசி நேரத்தில் தனது பயணத்தை இடைநிறுத்தியுள்ளார்.

அமெரிக்காவை தாக்கியுள்ள சூறாவளியினால் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமைகளை அடுத்தே அவர் இலங்கைக்கான பயணத்தை பிற்போட் (20ஆம் பக்கம் பார்க்க)

## இடம் பெயர்ந்தோர் தொகை குறைந்தது

(கொழும்பு)

உள்நாட்டில்இடம்பெயர்ந்தோர் தொகை 7422 ஆக குறைவடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இதன்படி மனிக்பாம் நிவாரணக் கிராமத்திலுள்ள ஆனந்தகுமாரசாமி முகாமில் 4103 பேரும் மற்றும் கதிர்காமர்முகாமில் 3319 பேரும் உள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

துரித மீள்குடியேற்றம் என்ற திட்டத்தின் (20ஆம் பக்கம் பார்க்க)

## வேலூர் சிறையில் தூக்கு ஒத்திகை

(சென்னை)

முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் கொலை வழக்கில் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டுள்ள முருகன், சாந்தன், பேரறிவாளன் ஆகியோர் வேலூர் மத்திய சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். இவர்களது கருணை மனுவை ஜனாதிபதி நிராகரித்து விட்டதால், மூவரையும் செப்டெம்பர் 09 ஆம் திகதி தூக்கிலிட சிறைத்துறை முடிபு செய்துள்ளது. இதற்கிடையே தங்களுக்கு விதிக்கப்பட்டுள்ள தூக்குத் தண்டனையை ரத்துச் செய்யக் கோரி கைதிகள் சார்பில் சென்னை உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்வதற்கான பணிகள் தொடங்கியுள்ளன. தூக்குத்தண்டனையை ரத்துச் செய்யக் கோரி தமிழகத்தின் பல்வேறு இடங்களில் அரசியல் கட்சியினர், அமைப்புக்கள், கல்லூரி மாணவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். இருப்பினும் கைதிகளைத் தூக்கிலிடுவதற்கான முன்னேற்பாடுகளை சிறைத்துறை அதிகாரிகள் மேற்கொண்டுள்ளனர்.

தூக்குத் தண்டனையை நிறைவேற்றும் நடைமுறைகள் குறித்து சிறைத்துறை அதிகாரிகள் கூறியதாவது,

தூக்குத் தண்டனை உறுதி செய்யப்பட்ட கைதிகள், சிறையில் தனித்தனிச் செல்லுக்கு மாற்றப்பட்டுள்ளனர். முன்பிருந்ததை விட மிகத் தீவிர கண்காணிப்பின் கீழ் கொண்டுவரப்பட்டு பாதுகாப்புக்கு கூடுதல் எண்ணிக்கையில் காவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். (20ஆம் பக்கம் பார்க்க)

## ராஜீவ் கொலைக்குற்ற விவகாரம் கைவிரித்தார் தமிழக முதலமைச்சர்



(சென்னை)

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டுள்ள பேரறிவாளன், முருகன், சாந்தன் ஆகியோரின் கருணை மனுக்களை குடியரசுத் தலைவர் நிராகரித்துள்ளதால் அதில் தலையிடும் அதிகாரம் தனக்கு இல்லை என்று தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா தெரிவித்துள்ளார்.

பேரறிவாளன், முருகன், சாந்தன் ஆகியோரின் தூக்குத் தண்டனையை இரத்துச் செய்வதற்கு முதலமைச்சர் ஜெயலிலதாவுக்கு அதிகாரம் உள்ளது. எனவே அந்த அதிகாரத்தைப் பயன்படுத்தி அவர் இம் மூவரையும் காப்பாற்ற வேண்டும் என பல்வேறு கட்சிகள், மனிதவுரிமை ஆர்வலர்கள் மற்றும் தமிழ் அமைப்புக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

அத்துடன் தூக்குத்தண்டனை விதிக்கப்பட்ட இம் மூவரையும் காப்பாற்றுவதற்கு தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா நடவடிக்கை எடுக்க வேண்டும் என பேரறிவாளனின் தாயார் அற்புதம் அம்மா மற்றும் முருகனின் தாயார் சோமணி அம்மா ஆகியோரும் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

அதேபோன்று தங்களின் உயிரைக் காப்பாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கும்படி தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவுக்கு பேரறிவாளன், முருகன், சாந்தன் ஆகியோரும் கடிதம் மூலம் வேண்டுகோள் விடுத்திருந்தனர்.

இந்நிலையில் இவ் விவகாரம் குறித்து நேற்று சட்டசபையில் முதலமைச்சர் ஜெயலலிதா விளக்கமளித்து உரையாற்றியுள்ளார். இவ் விவகாரம் தொடர்பில் அவர் தனதுரையில் தெரிவித்துள்ளதாவது, 1991 ஆம் ஆண்டு மே மாதம் 21 (19ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# குடும்பஸ்தர் மீது தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

கொக்குவிலில் நேற்றிரவு குடும்பஸ்தர் ஒருவர்மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நேற்றிரவு 6.00 மணியளவில் அவர் வீட்டில் இருந்த போதே இத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதில் கே.ரங்கராஜ் (வயது 40) என்பவரே காயமடைந்தவராவார். காயமடைந்த அவர் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ச)

# பொலிஸாரின் துணையுடன் பெண்ணின் மீது தாக்குதல்

## அராலியில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

பரம்பரையாக வாழ்ந்த காணியை விட்டு வெளியேறுமாறு பொலிஸாரின் துணையுடன் பெண்ணின் மீது சரமாரியாக தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த தாக்குதல் சம்பவம் கடந்த 27ஆம் திகதி பிற்பகல் 3.30 மணியளவில் அராலி மேற்கு வட்டுக்கோட்டையில் உள்ள வீட்டில் இடம்பெற்றுள்ளது.

இந்த தாக்குதல் அப்பகுதியைச் சேர்ந்த திருநாவுக்கரசு சரோஜினி (வயது 28) என்ற ஒரு பிள்ளையின் தாயின் மீது மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பாக பாதிக்கப்பட்ட பெண் கூறுகையில், கடந்த 28 வருடங்களாக இந்தக் காணியிலேயே நாம் வசித்து வருகின்றோம். இது எங்களுடைய பரம்பரைக் காணி. ஆனால் சில மாதங்களாக கொழும்பிலிருந்து வந்த ஒருவர் வட்டுக்கோட்டைப் பொலிஸாரின் உதவியுடன் எம்மைக் காணியைவிட்டு வெளியேறுமாறு அச்சுறுத்தி வருகிறார்.

சம்பவ தினத்தன்று பிற்பகல் மூன்று மணியளவில் எனது வீட்டுக்கு வந்த அந்நபர் அருகில் இருந்த வெற்றுக்காணிக்கு அழைத்துச் சென்று இருவரின் உதவியுடன் என்னை அடித்தார். அத்தோடு அவர்களை அடிக்கச் சொல்லிவிட்டு கமரா மூலம் என்னை படம் எடுத்தார்.

அத்தோடு எனது கழுத்தில் அணிந்திருந்த ஒன்றரைப்பவுண் தங்கச் சங்கிலியையும் அவர் அபகரித்துக் கொண்டார். இது தொடர்பாக வட்டுக்கோட்டை பொலிஸில் அன்றைய தினமே முறைப்பாடு செய்தேன்.

இருப்பினும் பொலிஸார் என் மீது தாக் குதல் செய்தவர்களை இதுவரை கைது செய்யவில்லை.

அதேவேளை முறைப்பாடு செய்ய நான் பொலிஸ் நிலையம் சென்றிருந்தபோது அங்கே என்னைத் தாக்கியவர்களும் வந்திருந்தனர்.

இவர்கள் தான் என்னைத் தாக்கியவர்கள் என்று நான் கூறியும் எந்தவித நடவடிக்கையும் பொலிஸார் எடுக்கவில்லை.

இதுதவிர என்னை தாக்கியவர் பொலிஸ் நிலையத்தில் வைத்து நீதிமன்றம் சென்றால் என்ன? பொலிஸ் நிலையம் சென்றால் என்ன? என்னை ஒன்றும் செய்துவிட முடியாது என்று கூறினார்.

அப்போது பொலிஸார் அருகில் நின்றனர் என அந்த பெண் தெரிவித்தார். ஏற்கனவே இந்தக் காணிப்பிரச்சினை தொடர்பாக மல்லாகம் நீதிமன்றில் வழக்கு நடந்து கொண்டிருக்கும் போது பொலிஸாரின் துணையுடன் பெண்ணின் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவத்தில் காயமடைந்த பெண் தற்போது யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. (எ-6)

# தூக்குத் தண்டனையில் குறுக்கிடக் கூடாது!

## சுப்பிரமணிய சுவாமி கோரிக்கை

(சென்னை)

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி படுகொலை செய்யப்பட்ட வழக்கில் 3 பேரை தூக்கிலிடும் முடிபில் யாரும் குறுக்கிடக் கூடாது என ஜனதா கட்சித் தலைவர் சுப்பிரமணிய சுவாமி தெரிவித்தார்.

கருணை மனு நிராகரிக்கப்பட்டுள்ள நிலையில் 3 குற்றவாளிகளையும் தூக்கிலிடுவதை இப்போது தடுத்து நிறுத்துவதற்கு அரசியலமைப்பு சட்டப்படி அதிகாரம் இல்லை.

எனவே நான் குறுக்கிட முடியாது என்று முதல்வர் ஜெயலலிதா சரியாகத்தான் கூறியுள்ளார் என்று அவர் வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட வில்லை என்றால் ஆகஸ்ட்15க்குப் பிறகு உச்ச நீதிமன்றத்தில் பொதுநலன் மனுத் தாக்கல் செய்வேன் என்ற எனது அச்சுறுத்தலின் காரணமாக 12 ஆண்டுகளாக செயலற்று இருந்த மத்திய அரசு இறுதியாக ஒரு முடிபெடுத்துள்ளது என அவர் கூறினார்.

செப்ரம்பர் 9ஆம் திகதி இவர்கள் மூவரையும் தூக்கிலிடும் முடிபில் இதற்கு மேலும் குறுக்கீடு இருக்கக்கூடாது.

மற்றொரு குற்றவாளியான நளினிக்கு தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டு பின்னர் ஆயுள் தண்டனையாக குறைக்கப்பட்டதை நீதிமன்றம் ரத்து செய்ய முடியும் என்றும் அவர் தெரிவித்தார். (ச-5)

# பாதுகாப்பு அமைச்சிடம் ஆயுதம் கேட்கும் பொலிஸார்

(கொழும்பு)

ஆயுதங்கள் இன்றி தங்களது உத்தியோக பூர்வ கடமைகளுக்குச் செல்வது தற்போது ஆபத்துக்களை எதிர்நோக்குவதாகவும் இதன் காரணமாக ஆயுதங்களைக் (துப்பாக்கிகள்) கொண்டு செல்வதற்கான அனுமதியை தமக்கு மீண்டும் வழங்குமாறு பொலிஸார் பாதுகாப்பு அமைச்சிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர் என தகவல் அறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள கிறீஸ் பூதவிவகாரத்தால் இதுவரை 15 பொலிஸ் அதிகாரிகள் பொதுமக்களின் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளனர். ஒருவர் உயிரிழந்துள்ளார் என்றும் இதற்காண காரணம் தாம் ஆயுதங்களின்றி சென்றமையே எனவும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இரும்புகள், பொல்லுகள் மற்றும் கூரிய ஆயுதங்களுடன் எம்மை சூழ்ந்துகொள்ளும் 200 க்கும் மேற்பட்ட மக்களால் நிராயுதபாணிகளான எம்மால் எப்படி போராட முடியும் எனவும் அவர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர் எனத் தகவல்கள் வெளிவந்துள்ளன. (ச-5)


Alliance Francaise de Jaffna cordially invites you for a literary meeting in English:

**PUBLIC READING & DISCUSSION**

With

**SHYAM SELVADURAI**

Author of *Funny Boy.*

Venue: Alliance Francaise de Jaffna
Day : Tuesday 30 th August
Time : 3 to 5 pm.
All are welcome.

(6019)

**ALLIANCE FRANCAISE DE JAFFNA**

61, Kachcheri-Nallur Road, Jaffna. Phone:0212228093
E-mail: alliancejaffna@yahoo. com


## மரண அறிவித்தல்

### யாக்கோப்பு நிலானியஸ் (நிக்ஷன்)



5ஆம் வட்டாரம் மண்டைதீவைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட யாக்கோப்பு நிலானியஸ் 29.08.2011 (திங்கட்கிழமை) அகால மரணமானார்.

அன்னார் யாக்கோப்பு-டொன் மெரியாவின் (லிமிட்டா) அன்பு மகனும், சியாமிளசின் அன்புக் கணவரும், தனுசியா, தனுசனின் பாசமிகு தந்தையும், தோமஸ் டானியல், தோமஸ் டெனிசியஸ், மெலானியஸ், ஜெனிற் ஆகியோரின் சகோதரனும் மற்றும் ரஞ்சன், ராகேஸ்வரி(குருநகர்) ஆகியோரின் அன்பு மருமகனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 30.08.2011 (செவ்வாய்க்கிழமை) மண்டைதீவு புனித பேதுருவானவர் ஆலயத்தில் இரங்கல் திருப்பலியுடன் பி.ப. 3.00 மணியளவில் மண்டைதீவு சேமக் காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

05-ம் வட்டாரம்,
மண்டைதீவு. (இ)

தகவல்:
குடும்பத்தினர்


**வேலையாள் தேவை**

இணுவில்வீதி மானிப்பாயில் அமைந்துள்ள நியூ குறிஞ்சி தையல்நிலையத்திற்கு தையல் தெரிந்த பெண் வேலையாள் தேவை. 31.08-ம் திகதி காலை 10 மணியில் இருந்து மாலை 4 வரையும் நேரில் வரவும்.
தொடர்புகளுக்கு: 0779678682

(ச-4249)

**தவறிவிட்டது**

மோட்டார் சைக்கிளின் பின்புற இலக்கத்தகடு (NP-VO-3186) பிறவுண் வீதியில் கடந்த 23-ம் திகதி காணாமல் போயுள்ளது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து வலம்புரி காரியாலயத்தில் ஒப்படைத்துதவவும்.

(ச-4253)

வாழ்வின் சகல சௌபாக்கியங்களும் தரும்

**சோ.கூ.றே.மணிமேர்க்கஸ் பெட்டகம்**

கடன் தொல்லை, கல்வியில் முன்னேற்றமின்மை, வேலையின்மையும் பணக்கஷ்டமும், திருமணத் தடை, கொடிய நோய்களின் அவஸ்தை போன்ற வாழ்வின் மிக முக்கிய 5 பிரச்சினைகளுக்கு ஒரே தீர்வு.

**மனை, கடை மற்றும் சகல வியாபார ஸ்தாபனங்களிலும் வைக்க உன்னத பலன் கிடைக்கும்.**

**விலை ரூபா 5100.00 மட்டும்**

எமது வாடிக்கையாளர்கள் தங்கள் வாழ்வில் ஏற்பட்ட மாற்றங்களுக்காகவும் வெற்றிகளுக்காகவும் எமக்கு நன்றி தெரிவித்து வருகின்றனர். அச்சான்றுகளை நாம் ஆதாரபூர்வமாக பதிவு செய்து வருகின்றோம். அதேபோல் உங்கள் வாழ்விலும் ஏற்பட்ட மாற்றங்களை எமக்குத் தெரியப்படுத்துமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

உங்கள் இருப்பிடங்களுக்குத் தருவிப்பதற்கு அழையுங்கள்: 0771399950

கடந்த 8 மாதங்களாக எனது கணவர் என்னை விட்டுப்பிரிந்து எதுவித தொடர்புகளும் இல்லாமல் கஷ்டப்பட்டு வாழ்ந்துவந்தேன். சோ.கூ.றே. மணிமேர்க்ஸ் பெட்டகம் பற்றி அறிந்து வாங்கி நம்பிக்கையோடு வழிபட்டு வந்தேன். எனது கணவர் என்னைத் தேடி வந்து என்னுடன் சேர்ந்து கொண் டார். நான் இப்பொழுது எதுவித பிரச்சினைகளும் இல்லாமல் மிகவும் சந்தோஷமாக வாழ்கிறேன்.

K.உஷாந்தினி
கரவெட்டி

(6020)

உங்கள் கல்வித்தகைமையை அதிகரித்திட

**BE A 'CERTIFIED MEDICAL ASSISTANT'**

பயிற்சி நெறி ஆரம்பம் : 17/09/2011
A pathway for Nursing/Medical Field
கொட்டிக்கிடக்கும் வேலைவாய்ப்புகள்.

மருத்துவ உதவியாளர் பயிற்சி நெறி (பிரிவு05)

CMA US Curriculum

**Lava Hospitals**

வேலைவாய்ப்புடனான கற்கை நெறி.

After O/L



(O/L ஏதாவது நான்கு பாடங்களில் சித்தியுடன் கற்கலாம்.)

MBBS வைத்திய விரிவுரையாளர்களால் பிரபல வைத்தியசாலையில் செயல்முறையுடன் கற்பிக்கப்பட்டு தொழில் வழங்கப்படும் மருத்துவ பயிற்சி நெறி.

உங்கள் வாழ்வு மேம்பட கற்பீர்

City & Guilds Qualified

பதிவுகள் தற்போது மேற்கொள்ளப்படுகின்றன.

**Knowledge Universe**
Malaysian College of Business and IT

Tel: 0776458253 | # 75,Temple Road,Jaffna | www.kugroup.info

## இன்று ஒரு தகவல்

# தியாகம்

ஒரு குடும்பத்தில் கணவன், மனைவி, மகன், மருமகள் என நான்கு பேர் இருந்தார்கள்.

அக் குடும்பம் மிகவும் வறுமைக்கோட்டின் கீழ் வாழ்ந்து வந்தது. அன்றாடம் உணவு உண்பதற்கே மிகவும் கஷ்டமான நிலை இருந்தாலும் பெரிய மனம் படைத்தவர்கள். அடுத்தவர்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்று நினைப்பவர்கள்.

அவ்வூரில் ஒரு சமயம் திடீரென கடுமையான பஞ்சம் ஏற்பட்டது. அவ்வேளையில் ஏதோ கிடைத்த உணவை சாப்பிட்டு உயிர் வாழ்ந்தார்கள்.

ஒரு சமயம் பஞ்சம் மூன்று நாட்கள் நீடித்தது. குடும்பத்தலைவன் எங்கேயோ போய் சிறிது தினை மா வாங்கிக்கொண்டு வந்தார்.

குடும்பத்தில் இருந்த நான்கு பேரும் அதனை நான்கு பாகமாகப் பிரித்து உண்பதற்கு உட்கார்ந்தார்கள். அந்த வேளையில் அவ் வீட்டினுள் பசியுடன் ஒருவர் உள் நுழைந்தார். அவர் முகத்தைப் பார்த்ததும் இவருக்கு நிலைமை புரிந்து விட்டது.

"வந்து உட்காருங்கள்" என்றார்கள்.

தன்னுடைய பங்கு தினை மாவை எடுத்து அவரிடம் கொடுத்து "சாப்பிடுங்கள்" என்று கூறினார்.

அவரும் ஆவலோடு வாங்கி அதைச் சாப்பிட்டார். அதன் பின்பும் அவனுடைய பசி தீரவில்லை! என்பது இவருக்குப் புரிந்து விட்டது. செய்வதறியாது நின்றார்.

இந்தச் சமயத்தில் அவருடைய மனைவியும் தன்னுடைய பங்கு தினை மாவை எடுத்து அவரிடமே கொடுத்து விட்டார்.

"நான் இந்தக் குடும்பத்தின் தலைவன்... வருகிற விருந்தாளிக்கு உணவு அளிக்க வேண்டியது என் கடமை! என்னால் என் மனைவியும் பசி பொறுக்க வேண்டிய நிலை ஏற்பட்டு விட்டது என்று நினைத்து கவலைப்பட்டார்.

மனைவி கொடுத்த பங்கும் முடிந்தது. ஆனால், ஏழையின் பசி தீரவில்லை!

பின் அவருடைய மகனும் தனது பங்கை அந்த நபரிடம் கொடுத்தார்.

"இளம் வயது மகன் பசி பொறுக்கமாட்டானே" என்று நினைத்தார். இருந்தாலும் விருந்தாளிக்கு உதவ வேண்டிய கடமையை நினைத்தார்.

மகன் கொடுத்த பங்கும் முடிந்தது. அப்படியும் அந்த நபரின் பசி தீரவில்லை! மருமகளும் தன்னுடைய பங்கை எடுத்துக் கொடுத்தான்.

"அம்மா! நாங்கள் தான் உங்களைக் காப்பாற்றக் கடமைப்பட்டவர்கள். புகுந்த வீட்டிலே உங்களை என் மகள் மாதிரி வளர்க்கிறேன். எங்களால் நீ இப்படி வாடலாமா? அது அதர்மம் என்றார்.

"ஐயா! எப்போது நான் உங்கள் மகனைத் திருமணம் செய்தேனோ அன்றில் இருந்து நான் உங்கள் குடும்பத்தில் ஒருத்தியாக மாறிவிட்டேன். உங்கள் சுகதுக்கத்தில் எனக்கும் பங்குண்டு! நான் என் பங்கை மனமுவந்து கொடுக்கிறேன். இதை வாங்கி அந்த விருந்தாளிக்கு கொடுங்கள்!" என்று சொன்னாள்.

வாங்கிக் கொடுத்தார். அவருடைய பசி தீர்ந்தது.

"இதோ பார்... உன்னை சோதிப்பதற்காகத்தான் இப்படி வந்தேன். பொருள் படைத்தவன் தர்மம் செய்கிறது அதிசயம் இல்லை. ஆனால், பட்டினி கிடக்கிறவன் தர்மம் எசய்வது பெரிய விடயம். பட்டினி இருப்பவன் தன் கையிலே உள்ள உணவைத்தானமாக வழங்குவது தியாகத்திலேயும் பெரிய தியாகம்... உங்கள் எல்லோரையும் நான் பாராட்டி ஆசீர்வதிக்கிறேன். சுவர்க்கம் உங்களுக்காக காத்திருக்கிறது என்று கூறிவிட்டு எமதர்மன் மறைந்துவிட்டார்.

தியாகத்தின் பெருமையைப் புரிந்து கொள்வதற்காகவே கூறப்பட்ட கதை இது.

"தியாகம்" என்பதை இந்தக் காலத்தில் யாரும் செய்வதில்லை.

இருக்கிறவன் செய்கிற தர்மத்தைவிட இல்லாதவன் செய்கிற தர்மம் பெரியது.

*தென்கச்சி கோ. சுவாமிநாதன்*

# கிளிநொச்சி மாவட்டத்தில் சிறுபோக நெற்செய்கை மூலம் அமோக விளைச்சல்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் இம்முறை 14 ஆயிரத்து 537 ஏக்கரில் சிறுபோக நெற்பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்பட்டு தற்பொழுது அறுவடை செய்யப்பட்டுவருவதாக கிளிநொச்சிமாவட்ட விவசாயத்திணைக்களத்தினர் தெரிவித்துள்ளனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

இதில் இரணைமடுக்குளத்தின் நீரைப்பயன்படுத்தி 13 ஆயிரத்து 35 ஏக்கரிலும் கரிநாகபடுவான் குள நீரைப்பயன்படுத்தி 500 ஏக்கரிலும் வன்னேரிக்குள நீரைப் பயன்படுத்தி 130 ஏக்கரிலும் புதுமுறிப்புக்குள நீரைப் பயன்படுத்தி 470 ஏக்கரிலும் சிறுபோக நெற்பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அத்தோடு சிறுகுளங்களான சின்னப் பல்லவராயன்கட்டு, கந்தன் குளம் ,கனகபுரம் குளம், புதுஜயன் குளம் ஆகியவற்றை பயன்படுத்தி 402 ஏக்கரிலும் சிறுபோக நெற் செய்கை மேற்கொள்ளப்பட்டது.

கடந்த காலபோகத்தில் வைக்கோல் வயல்களிலேயே சீராக பரவப்பட்டு மண்ணுடன் கலந்து சேதனப் பசளையாக மாற்றம் பெற்றதோடு நீர்ப்பாசனத் திணைக்களத்தினரது சிறந்த நீர் விநியோக முகாமைத்துவமும் விவசாயிகளுக்கு அதிகளவு அறுவடையைப் பெற்றுக் கொள்ள முடிந்தது.

அத்தோடு கிளிநொச்சி மாவட்ட விவசாயத் திணைக்களத்தினரால் சிபார்சு செய்யப்பட் அசேதனப் பசளைகள் கமநல சேவைத் திணைக்களத்தினரால் வழங்கப்பட்டதோடு வைக்கோல் மூலம் பெறப்பட்ட மாபோஷன மூலகங்கள், சுவட்டு மூல கிடைக்கப் பெற்றதால் 60-70 வரை பெறப்படும் பசளையை விட 90 இற்கு மேற்பட்ட புசல் பெறக் கூடியதாய் இருந்தது.

கிளிநொச்சி மாவட்ட விவசாயத் திணைக்களத்தால் பி.ஜி.358, பி.ஜி. 300, ஏரி. 308 ஆகிய நெல்வகைகள் இலவசமாக விவசாயிகளுக்கு வழங்கி 100 ஏக்கரில் விதை நெல் உற்பத்தித் திட்டம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தின்மூலம் தரமான நெல்களை அறுவடை செய்து மீண்டும் தரமான நெல்களை பயிர்ச் செய்கைக்கு விவசாயிகளுக்கு வழங்கி ஊக்குவிப்பதாகும்.

எனவே இச்சிறு போகத்தின் மூலம் பெறப்பட்ட வைக்கோலை பேணி அடுத்த கால போகத்திற்கு சேதனப் பசளையாக பயன்படுத்துவதற்கு அனைத்து விவசாயிகளும் ஒத்துழைக்க வேண்டும் எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர். (ஸ்ரீ-3)

# பொதுக்கூட்டம்

(துனாங்கிளப்பு)

மறவன்புலோ கமக்கார எல்லைக்குட்பட்ட விவசாயிகளுக்கான விசேட பொதுக்கூட்டம் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 3 ஆம் திகதி சனிக்கிழமை காலை 10 மணிக்கு யாழ்.மறவன்புலோ சகலகலா வித்தியாலயத்தில் கமக்கார அமைப்பின் தலைவர் சி.திருஞானசம்பந்தர் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் உரமானியங்கள் வழங்குவதற்கான பதிவுகள் மேற்கொள்ளப்படவுள்ளதெனவும் பின்னர் இதற்கான பதிவுகள் மேற்கொள்ளப்படமாட்டாது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இக்கூட்டம் கடந்த 22 ஆம் திகதி நடைபெறவிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-12-37)

## குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி |
|---|---|---|
| | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 80 |
| உருளைக்கிழங்கு | 85 | 80 |
| பச்சைமிளகாய் | 80 | 70 |
| தக்காளி | 30 | 40 |
| மரவள்ளிக் கிழங்கு | 45 | 50 |
| கோவா | 30 | 60 |
| கரட் | 50 | 80 |
| பூசணி | 25 | 40 |
| புடோல் | 30 | 80 |
| வாழைக்காய் | 40 | 40 |
| சின்ன வெங்காயம் | 75 | 90 |
| பெரிய வெங்காயம் | 80 | 60 |
| பாகற்காய் | 80 | 90 |
| வெண்டிக்காய் | 70 | 70 |
| கருணைக் கிழங்கு | -- | 90 |
| பயற்றங்காய் | 80 | 120 |
| லீக்ஸ் | 50 | 40 |
| பீற்றூட் | 20 | 30 |
| கறிமிளகாய் | 35 | 80 |
| முருங்கைக்காய் | 90 | 120 |
| போஞ்சி | -- | 90 |
| கத்தரிதம்புள்ள | 40 | 20 |
| கீரை - 1 பிடி | 8-10 | 20 |
| தேசிக்காய் | 120 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 20-40 | 30 |

## இராசி பலன்

30.08.2011
(ஆவணி 13, செவ்வாய்க்கிழமை)
சூரிய உதயம் காலை 6.04மணிக்கு
பிரதமை காலை 7.12 மணிவரை
துதியை பின்னிரவு 4.56 மணிவரை
பூரம் முற்பகல் 11.49 மணிவரை
இராகுகாலம் 3.05-4.35 மணிவரை
சுபநேரம் 10.35-12.05 மணிவரை
சித்தாமிர்தம்.

**மேடம்** தொழிலில் எடுத்த முயற்சி வெற்றி பெறும், சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும் நாள், பிள்ளைகளால் உதிரி வருமானங்கள் வந்து சேரலாம், அம்பிகை வழிபாடு ஆனந்தம் தரும்.

**இடபம்** வாகன சுகமுண்டு, பெற்றோரின் தேவைகளைப் பூர்த்தி செய்து மகிழ்வீர்கள், சுப செய்திகள் வந்து சேரும் நாள், நண்பர்கள் வருகையுண்டு.

**மிதுனம்** எடுத்த காரியம் கைகூடும், பொதுப்பணிகளில் ஆர்வம் கூடும், சுப நிகழ்வுகளில் புதியவர்களின் சந்திப்பு இடம்பெறும், பொருளாதார நிலை மேம்படும்.

**கடகம்** நன்மைகள் நடைபெறும் நாள், குடும்பத்தினர் பெருமைப்படும் வகையில் சில சம்பவங்கள் நடைபெறலாம், தொழிலில் எதிர்பார்த்த முன்னேற்றம் வந்து சேரும்.

**சிங்கம்** விருப்பங்கள் நிறைவேற கணபதியை வழிபட வேண்டிய நாள், அனுபவத்தின் வாயிலாக பல தகவல்களை அறிந்து கொள்வீர்கள், ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**கன்னி** சுப விரயங்கள் அதிகரிக்கும், வெளியூர் பயணங்களால் அலைச்சல் அதிகரித்தாலும் சிறு ஆதாயமும் கிடைக்கலாம், சுப நிகழ்வுகளில் கலந்து கொண்டு மகிழ்வீர்கள்.

**துலாம்** அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், விரதம், வழிபாடுகளில் ஆர்வம் கூடும், தொழிலில் ஆர்வத்துடன் செயற்படுவீர்கள், வருமானம் திருப்தி தரும்.

**விருச்சிகம்** சுப காரிய பேச்சுக்கள் நல்ல முடிவுக்கு வரும், உற்சாகமான நாள், பணத்தேவைகள் பூர்த்தியாகும், மதிப்பும் மரியாதையும் உயரும் நாள்.

**தனுசு** சாமர்த்தியமான பேச்சுக்களால் சாதனை படைக்கும் நாள், குடும்பத்தினரிடையே ஏற்பட்ட மனஸ்தாபங்கள் அகலும், புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள்.

**மகரம்** சிலர் பாராட்டுவது போல உங்களை விமர்சிக்கலாம், பிரயாணத்தில் கவனம் தேவை, எடுத்த காரியங்கள் தாமதமாகும்.

**கும்பம்** இல்லத் தேவைகளை பூர்த்தி செய்து மகிழும் வாய்ப்புண்டு, இனிய அனுபவங்கள் ஏற்படும் நாள், நண்பரின் சந்திப்பு உண்டு, கௌரவமான நாள்.

**மீனம்** சச்சரவை விட்டு சாதித்துக் காட்டும் நாள், உடல் நலம் சீராகும், தொழில் முன்னேற்றத்திற்காக பாடுபடுவீர்கள், விருந்து விழாக்களில் கலந்து மகிழ்வீர்கள்.

வளவன்

## மின்குமிழ்கள் இருந்தும் இரவில் இருளில் மூழ்கும் பஸ்தரிப்பு நிலையம்

(அச்சுவேலி)

மின்குமிழ்கள் இருந்தும் இரவு நேரத்தில் அச்சுவேலி பஸ்தரிப்பு நிலையம் இருளில் மூழ்கிக் காணப்படுவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதனால் இரவு, அதிகாலை வேளைகளில் பயணங்களை மேற்கொள்ளும் பயணிகள், பஸ் சாரதிகள் ஆகியோர் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

அத்துடன் தற்போதைய மர்ம மனிதர் பீதியினால் பயணிகள் வியாபார நிலையங்களின் வெளிச்சத்தின் முன்பாகவே பஸ்ஸிற்கு காத்திருக்க வேண்டியுள்ளதெனவும் தெரிவிக்கின்றனர்.

மேலும் செல்வச் சந்நிதி ஆலய வருடாந்த திருவிழா ஆரம்பித்துள்ளதால் தொண்டைமானாறு வீதியை அதிகளவான மக்கள் பயன்படுத்திக் கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுவதினாலும் உரிய தரப்பினர் இதனைக் கருத்திற் கொண்டு வெகுவிரைவில் பஸ் நிலையத்தை ஒளியூட்ட நடவடிக்கை எடுக்க வேண்டுமென மக்கள் கோருகின்றனர்.

(ஸ்ரீ-12-70)

## தீர்த்தக்காவடி உழவியந்திரப்பெட்டி சரிந்ததில் இளைஞன் காயம்

(யாழ்ப்பாணம்)

தூக்குக்காவடி சென்று கொண்டிருந்த உழவியந்திரப்பெட்டி சரிந்ததில் இளைஞன் ஒருவர் காயங்களுக்கு உள்ளாகிய நிலையில் யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச் சம்பவம் நேற்று முன்தினம் மதியம் நல்லூர் ஆலய முன் வீதியில் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் பற்றி தெரியவருவதாவது, நல்லூர் ஆலயத் தீர்த்தத்திருவிழாவான நேற்று முன்தினம் தூக்குக்காவடியுடன் நல்லூர் நோக்கி சென்று கொண்டிருந்த போது உழவு இயந்திரப்பெட்டி சரிந்ததில் தூக்கு காவடியின் துலாவில் நின்று காவடியை இயக்கிய இளைஞரே மேற்படிகாயங்களுக்குள்ளான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவத்தில் திருநெல்வேலி அம்மன் கோவிலடியைச் சேர்ந்த ஆர்.மதிச்சந்திரன் (வயது 24) என்பவரே காயங்களுக்குள்ளாகியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-4-2)




## கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

ஊரெழ வடக்கு சக்திபுரம் வேல் முருகன் திருக்கோவில் மஹா கும்பாபிஷேகம் நாளை புதன்கிழமை நடைபெறவுள்ளது.

இதில் அதிகாலை 3 மணி முதல் விநாயகர் வழிபாடு 4 ஆம் கால யாகபூசை மஹா பூர்ணாமுகி, அந்தர்பலி, பகிர் பலி, வேதபாராயணம், திருமுறை ஓதுதல் என்பனவும் அதனைத் தொடர்ந்து காலை 6.05 மணி தொடக்கம் 7.09 மணிவரையுள்ள சுபமுகூர்த்த வேளையில் ஸ்தூபி அபிஷேக மஹா கும்பாபிஷேகம் , ஜெமான் அபிஷேகம் தசதர்சனம் என்பவும் நடைபெறும்.

அதன் பின்னர் ஆசியுரை இடம்பெற்று மஹா அபிஷேகம் பாலமுருகன் திருவீதியுலா, மகேஸ்வரபூசை என்பன நடைபெறும்.

(ஸ்ரீ-12)

## கைதடியிலுள்ள வறிய மாணவர்களுக்கு கல்விக்கான உதவித்தொகை கையளிப்பு

(நல்லூர்)

கைதடியிலுள்ள வறிய மாணவர்களுக்கு கைதடி மக்கள் நலன் பேணும் நட்புறவுக் கழகத்தால் கல்விக்கான உதவிகள் வழங்கும் நிகழ்வு அண்மையில் நட்புறவுக் கழகத் தலைவர் லயன் ப.செல்லத்துரை தலைமையில் கைதடி கலைவாணி வித்தியாலய மண்டபத்தில் நடைபெற்றது.

இக்கழகம் வறிய மாணவர்களுக்கான கல்வி உதவித் தொகை வழங்கியதுடன் கடந்த ஆண்டு 5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களையும் கௌரவித்தது.

மற்றும் பல்கலைக்கழகங்களுக்கு தெரிவானவர்களுக்கும், தொழிநுட்பக் கல்லூரியில் கல்வி கற்று சித்தியடைந்தோருக்கும் வெளிவாரியாக பட்டம் பெற்றோரையும் கௌரவித்து நினைவுப் பரிசில்களும் வழங்கியது.

இந்நிகழ்வில் பிரதம விருந்திராக பிரான்சில் வாழும் கைதடி ஒன்றியத்தின் உறுப்பினர் கே.ஜெயந்தனும் சிறப்பு விருந்தினர்களாக சுவிஸ் வாழ் ஒன்றியப் பொருளாளர் ஆர். பரமசாமி தம்பதிகள் மற்றும் சுவிஸ் வாழ் ஒன்றிய உறுப்பினர்களான என்.விஜயகுமார் தம்ப்திகள் ஜெனிதாமதி மற்றும் பிரான்ஸ் வாழ் கைதடி ஒன்றிய உறுப்பினர் ஆகியோரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

(ஸ்ரீ-12-134)

## உள்ளூராட்சி உறுப்பினர்களின் முதலாவது அமர்வு

(வடமராட்சி)

நடைபெற்று முடிந்த உள்ளூர் அதிகார சபைகள் தேர்தலில் வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபைக்கு மக்களால் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களுடனான முதலாவது அமர்வுக் கூட்டம் இன்று செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபை மாநாட்டு மண்டபத்தில் தவிசாளர் பொன்னையா வியாகேசு தலைமையில் நடைபெறவுள்ளது. (ஸ்ரீ-3)

## மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறை நாரந்தனை வடக்கு பண்டாரப்புலம் தான்தோன்றி ஸ்ரீ மனோண்மணி அம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 2 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

இதில் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 10 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு வேட்டைத்திருவிழாவும் இரவு 9 மணிக்கு சப்பறத்திருவிழாவும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை காலை 11 மணிக்கு தேர்த்திருவிழாவும் 12 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 10 மணிக்கு நாக சமுர்த்திர தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும் (ஸ்ரீ-12)

## புத்தூரிலும் மர்ம மனிதன்

(அச்சுவேலி)

புத்தூர் மேற்கு சிவன் கோவிலடியில் நேற்று முன்தினம் மர்ம மனிதன் சென்றதால் அப்பகுதி மக்கள் பெரும் பீதியடைந்துள்ளனர்.

இது தொடர்பாக தெரிய வருவதாவது, மேற்படி மர்ம மனிதன் வீட்டு முற்றத்திலுள்ள வேப்ப மரத்திலிருந்து பாய்ந்து சென்று மக்களுக்கு அச்சமூட்டியுள்ளான்.

இதனால் அப்பகுதி மக்கள் ஒன்று திரண்டு அவனை துரத்திச் சென்ற வேளை இராணுவ காலவரண் பக்கமாக ஓடிச் சென்று மறைந்ததாக மக்கள் கூறுகின்றனர்.

(ஸ்ரீ-12-70)

## வட அல்வை இளங்கோ சனசமூக நிலையத்தின் முத்தமிழ் விழா

(யாழ்ப்பாணம்)

வட அல்வை இளங்கோ சனசமூக நிலையத்தின் 79 ஆவது ஆண்டு நிறைவையொட்டிய முத்தமிழ் விழா எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 3,4 ஆம் திகதிகளில் பிற்பகல் 5.15 மணிக்கு அல்வாய் ஸ்ரீலங்கா வித்தியாசாலை பா.ஜெயபாலன் அரங்கில் நடைபெறவுள்ளது.

இதில் முதலாம் நாள் நிகழ்வு இளங்கோ சனசமூக நிலையத் தலைவர் ந.நிர்மலன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பருத்தித்துறை பிரதேச செயலர் ஐ.வரதீஸ்வரன், சிறப்பு விருந்தினர்களாக மூத்த எழுத்தாளர் க.தெணியான், யாழ்ப்பாணம் முறைசாராக் கல்விப் பிரிவு உதவிக் கல்விப் பணிப்பாளர் மு.அநாதரட்சகன், வ/சேமமடு சண்முகானந்தா மகாவித்தியாலய ஆசிரியர் சு.குணேஸ்வரன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

இதில் மாலை 7.30 மணிக்கு கர்நாடக இசை விருந்தும் 8.30 மணிக்கு அகில இலங்கை அமுதசுரபி கலாமன்றம் வழங்கும் வழக்காடு மன்றமும் 10.30 மணிக்கு அமரர் நடிகமணி வி.வி.வைரமுத்துவின் வசந்த கான சபா வழங்கும் அரிச்சந்திர மயான காண்டமும் இடம்பெறும்.

மறுநாள் நிகழ்வு பிற்பகல் 5.15 மணிக்கு இளங்கோ சனசமூக நிலைய போஷகர் வே.சிவயோகன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக சட்டத்துறை தலைவர் கலாநிதி த.கலாமணி, சிறப்பு விருந்தினர்களாக திருகோணமலை சண்முகா இந்து மகளிர் கல்லூரி ஆசிரியர் த.வாகீசன், வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பணிமனை கலாசார உத்தியோகத்தர் தி.கார்த்திகேயன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

இதில் 6.30 மணிக்கு பட்டிமன்றமும் 8.30 மணிக்கு கவியரங்கமும் 9.30 மணிக்கு நட்பு சிறுவர் நாடகமும் 10 மணிக்கு பூதத்தம்பி இசை நாடகமும் இடம்பெறும்.

(ஸ்ரீ-12)

## விரிவுரைகள் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக கலைப்பீடத்தின் 2009/2010 இற்கான இரண்டாம் அரையாண்டு விரிவுரைகள் அனைத்தும் நேற்று ஆரம்பமாகியுள்ளன.

இதில் கலைமாணி,நுண் கலைமாணி, சித்திரமும் வடிவமைப்பிற்கான விரிவுரைகள் இடம்பெற்று வருகின்றன என கலைப் பீடாதிபதி பேராசிரியர் நா.ஞானகுமரன் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-12)

## மயானத்தை திருத்தி தருமாறு கோரிக்கை

(நல்லூர்)

வலி.கிழக்கு பிரதேச செயலர் பிரிவிலுள்ள புத்தூர் மேற்கு கிந்து சிட்டி இந்து மயானவளாகம் திருத்தப்படாது .கவனிப்பாரற்ற நிலையில் காணப்படுகிறது.

அத்துடன் தகனக்கிரியைகளுக்காக வருவோர் நிற்கும் மண்டபமும் உடைந்த நிலையில் காணப்படுகின்றது.

இதனால் தகனக்கிரியைக்காக வருபவர்கள் பல சிரமங்களை எதிர்நோக்குவதாக தெரிவிக்கின்றனர்.

எனவே, சம்பந்தப்பட்ட்வர்கள் இதனைக் கவனத்தில் கொண்டு இம்மயானத்தைத் திருத்தித் தருமாறு கேட்டுக் கொள்கின்றனர்.

(ஸ்ரீ-12-134)

## ஜெய்ப்பூர் செயற்கை அவயவம் பொருத்தும் விசேட சிகிச்சை முகாம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள இந்திய துணைத்தூதரகத்தின் ஏற்பாட்டில் வடமாகாண சுகாதார அமைச்சின் ஒருங்கிணைப்புடன் செயற்கை அவயவங்களை பொருத்தும் விசேட சிகிச்சை முகாம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இம்முகாமில் சேவையினை வழங்க இந்திய ஜெய்ப்பூர் நகரத்தில் இருந்து விசேட நிபுணர் குழுவொன்றுவருகைதரவுள்ளது.

இச்சிகிச்சை முகாம் நாளை மறுதினம் முதல் ஒருமாதகாலத்திற்கு கோண்டாவில் பிரதேச வைத்திசாலையில் இடம்பெறவுள்ளது. வடமாகாணத்தைச் சேர்ந்த செயற்கை அவயவங்கள் பொருத்தப்பட வேண்டியவர்கள் இச்சேவையைப் பெற்றுக் கொள்ளலாம்.

இச்சேவையைப் பெற விரும்புவர்களின் பட்டியல் ஏற்கனவே வடமாகாணத்தை சேர்ந்த ஐந்து மாவட்டங்களிலும் உள்ள சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைகள் மூலம் தயாரிக்கப்பட்டுள்ளன.

ஏற்கனவே தமது பெயர்களை பதிவு செய்தவர்களுக்கு அந்தந்த பிரதேசத்திற்குரிய சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை மூலம் இச் சேவையை பெறுவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்படும்.

இச்சேவை தேவைப்படுபவர்கள் இதுவரை தமது பெயர்களை பதிவு செய்யத் தவறியிருப்பின் உடனடியாக உங்கள் அருகில் உள்ள சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் தங்கள் பெயர்களை பதிவு செய்து கொள்ளலாம் என யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார். (ஸ்ரீ)

## பொதுக்கூட்டம்

(நல்லூர்)

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். மாவட்ட கிளையின் வருடாந்த பொதுக்கூட்டம் எதிர்வரும் 25 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் யாழ். மாவட்டத்திலுள்ள ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவுகளில் இயங்கும் இலங்கை செஞ்சிலுவைச் சங்க பிரிவுக்களைகளிலிருந்து தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் கலந்து கொள்ளவுள்ளனர்.

ஒவ்வொரு பிரிவிலிருந்தும் யாழ். மாவட்ட கிளையின் வருடாந்த பொதுக்கூட்டத்தில் கலந்து கொள்ளும் பிரதிநிதிகளின் பெயர்கள் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 5 ஆம் திகதிக்கு முன்னர் யாழ். மாவட்ட கிளைக்கு அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

(ஸ்ரீ-12-134)

# யுத்தத்தின்போது காணாமல்போன ஆயிரத்துக்கும் மேற்பட்ட சிறுவர்கள் தொடர்பில் தகவலில்லை

(கொழும்பு)

நாட்டில் யுத்தம் முடிவடைந்து இரண்டு ஆண்டுகளுக்கு மேலாகின்ற நிலையில் இறுதி யுத்தத்தின்போது காணாமல்போயுள்ளதாக தெரிவிக்கப்படுகின்ற சிறுவர்களில் ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் தொடர்பான விபரங்கள் இதுவரை தெரியவரவில்லை.

காணாமல்போனவர்களை தேடிக் கண்டுபிடிப்பதற்கான நடவடிக்கைகள் தொடர்ந்து இடம்பெற்று வருவதாக அரச அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

காணாமல்போன சிறார்களில் ஐ.நா.வின் சிறார்கள் நல அமைப்பாகிய யுனிசெப் நிறுவனம் மற்றும் பல்வேறு அரச அமைப்புக்களின் உதவியோடு 600 பேர் வரையில் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறார்கள்.

விடுதலைப் புலிகளினால் மேற்கொண்ட ஆட்சேர்ப்பினால் 64 வீதமானோர் காணாமல் போயிருப்பதாகவும் 30 வீதமானவர்கள் அரச கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் காணாமல் போயிருப்பதாகவும் யுனிசெப் கூறியிருக்கின்றது.

கடந்த 2009 ஆம் ஆண்டு மே மாதம்

## பெற்றோர் கண்ணீர்

யுத்தம் முடிவுக்கு வந்தபோது சுமார் 3 இலட்சம் மக்கள் வவுனியா மெனிக்பாம் இடைத்தங்கல் முகாமில் தஞ்சமடைந்தபோது இறுதி யுத்தம் நடைபெற்ற இடத்திற்கு வெளியில் இருந்த பெற்றோர்கள் பலர் காணாமல் போயிருந்த தமது பிள்ளைகளைத் தவிப்போடு தேடிக் கொண்டிருந்தார்கள்.

இவர்களில் பலர் கண்ணீரோடு வந்து தமது பிள்ளைகளைக் கண்டுபிடித்துத் தருமாறு தன்னிடம் கோரியதாக வவுனியா அரசாங்க அதிபர் திருமதி பி.எஸ்.எம்.சாள்ஸ் தெரிவித்துள்ளார்.

பெற்றோர்களின் வேண்டுகோள்களையடுத்து வவுனியா மாவட்டத்தில் ஐ.நா.வின் சிறுவர்களுக்கான நிதியம் மற்றும் சிறுவர்களின் நலன்களுக்காகச் செயற்படுகின்ற அரச திணைக்களங்களையும் இணைத்து ஹெல்ப் லைன் என்ற பெயரில் காணாமல்போன சிறுவர்களைக் கண்டுபிடிப்பதற்கான அமைப்பொன்று உருவாக்கப்பட்டதாக வவுனியா அரசாங்க அதிபர் கூறினார்.

இந்த அமைப்பிடம் ஆயிரத்துக்கும் மேற்பட்ட பெற்றோர்கள் காணாமல்போயுள்ள தமது பிள்ளைகளைத் தேடிக்கண்டுபிடித்துத் தருமாறு எழுத்து மூலமாகவும் நேரடியாகவும். தொலைபேசி மூலமாகவும் கோரிக்கை விடுத்திருக்கின்றனர்.

இவர்களில் 600 பேர் இதுவரையில் கண்டுபிடிக்கப்பட்டு பெற்றோர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருப்பதாகவும் ஏனையோரைக் கண்டுபிடிப்பதற்கான நடவடிக்கைகள் ஒருவலைப்பின்னலாகப் பாதுகாப்பு அமைச்சு உட்பட பல்வேறு பிரிவுகளின் ஒத்துழைப்போது மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் வவுனியா அரசாங்க அதிபர் மேலும் தெரிவித்தார். (ஸ்ரீ-2)

# வேலூர் சிறைந் முன்பு 8 ஆம் திகதி போராட்டம்

முருகன், சாந்தன், பேரறிவாளனின் தூக்கு தண்டனையை இரத்துச் செய்யாவிட்டால் எதிர்வரும் 8 ஆம் திகதி வேலூர் சிறை முன்பு போராட்டம் நடத்தப்படும் என்று பா.ம.க. நிறுவுனர் இராமதாஸ் தெரிவித்துள்ளார். தமிழர் பாதுகாப்பு இயக்கம் சார்பில் மரண தண்டனை ஒழிப்பு மாநாடு மறைமலை நகரில் நேற்று முன்தினம் மாலை நடந்தது. பா.ம.க. தலைவர் மணி தலைமை வகித்தார். மாநாட்டில் பா.ம.க. நிறுவுனர் இராமதாஸ் உரைநிகழ்த்துகையில்,

முருகன், சாந்தன், பேரறிவாளன் உயிரை பாதுகாக்க 2 நாட்களில் முதல்வர் ஜெயலலிதா நடவடிக்கை எடுப்பார் என்று நம்புகிறோம். தமிழக ஆளுநரை சந்தித்து இந்தத் தூக்குத் தண்டனையை இரத்துச் செய்ய வலியுறுத்த வேண்டும். தமிழக அரச நடவடிக்கை எடுக்காவிட்டால் எதிர்வரும் 6 ஆம் திகதி தமிழ் பாதுகாப்பு இயக்கம் சார்பில் 8 திசைகளில் இருந்து வேலூரை நோக்கி பயணம் மேற்கொண்டு 8 ஆம் திகதி 10 இலட்சம் பேர் வேலூர் சிறை முன்பு போராட்டம் நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது என்றார். (ஸ்ரீ-2)

# திருமுறிகண்டி மக்களை காட்டுக்குள பகுதியில் மீள்குடியேற்ற நடவடிக்கை

முல்லைத்தீவு மாவட்டம் ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்திற்குட்பட்ட திருமுறிகண்டி பகுதியிலுள்ள மக்களை சனநடமாட்டம் அற்ற காட்டுக்குளப் பகுதியில் குடியேற்றுவதற்கு இராணுவம் முயற்சிகளை மேற்கொண்டு வருவதாக மக்கள் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது.

ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்திற்குட்பட்ட ஏ-9 வீதி கிழக்காக 125 குடும்பங்களை கொக்கடம்பன் ஏ- 9 வீதியில் 3 மைல் தூரத்தில் உள்ள காட்டுக்குளப் பகுதியில் குடியமருமாறு கோரப்பட்டுள்ளது.

125 குடும்பங்களுக்கும் தலா அரை ஏக்கர் வீதம் காணிகள் இருக்கின்றன. இதில் 43 குடும்பங்கள் கதிர்காமர் முகாம், ஆனந்த குமாரசாமி முகாமிலும் உறவினர், நண்பர்களுடனும் தங்கி வாழ்ந்து வருகின்றனர்.

இம் மக்களை அங்கு குடியேற்றுவதற்காக கடந்த 23 ஆம் திகதி திருமுறிகண்டி இந்து வித்தியாலயத்தில் இரணைமடு கட்டளைத் தளபதி மற்றும் இராணுவ சிவில் அலுவலக அதிகாரிகளுடனான கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் அனைவரையும் குறித்த காட்டுப் பகுதியில் குடியேறுமாறும் அல்லாவிடின் முல்லைத்தீவு மாவட்ட கோம்பாவில் பகுதியில் இடைத்தங்கல் முகாமில் தங்க வைக்கப்பட்டு 10, 20 வருடங்களுக்குப் பின்னரே சொந்த இடத்திற்குக் குடியேற அனுமதிக்கப்படும் என எச்சரிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இப்பகுதியில் அண்மையிலேயே மீள்குடியேறி இயல்பு வாழ்க்கைக்குத் திரும்பி வருகின்ற போது எதுவும் செய்ய முடியாத நிலையில் இருப்பதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (ஸ்ரீ-2)

# பதிவு செய்யப்படாத தனியார் மருந்தகங்களை சோதனையிட சுகாதார அமைச்சு நடவடிக்கை

(கொழும்பு)

பதிவு செய்யப்படாத தனியார் மருந்தகங்களை சோதனையிடுவதற்கு சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

நாட்டில் தற்போது மூவாயிரம் தனியார் மருந்தகங்கள் காணப்படுவதாக அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

வருடாந்தம் தேசிய வாசனைத் திரவியங்கள் மற்றும் ஔதடங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையிடம் குறித்த மருந்தகங்கள் பதிவு செய்யப்பட வேண்டும்.

ஆயினும் சில மருந்தகங்கள் நீண்டகாலமாக பதிவுசெய்யப்படாது இருப்பதாக அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது. இதற்கமைய பதிவு செய்யப்படாது நடத்திச் செல்லப்படும் மருந்தகங்கள் சோதனையிட்டு அவற்றுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேனவினால் தேசிய வாசனைத் திரவியங்கள் மற்றும் ஔதடங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபைக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

மருதானை பகுதியில் பதிவு செய்யப்படாது நடத்தப்பட்ட 4 மருந்தகங்கள் அண்மையில் சுற்றிவளைப்பிற்கு உட்படுத் தப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது. (ஸ்ரீ-2)

### மர்ம மனிதன் விவகாரத்தில்

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் மக்களைத் தூண்டி விட்டனர்

### கருணா குற்றச்சாட்டு

மர்ம மனிதன் விவகாரத்தை பெரிதுபடுத்தி மக்களைத் தூண்டிவிட்டு வேடிக்கை பார்த்தவர்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களேயென மீள்குடியேற்றப் பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் பொலிஸ் பிரிவுகளின் சிவில் விழிப்புக் குழுக்கள், அரசியல் வாதிகள் கலந்துகொண்டு களுவாஞ்சிக்குடியில் நேற்று திங்கட்கிழமை நடைபெற்ற கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில்,

மர்ம மனிதன் விவகாரம் மட்டக்களப்பு மாவட்டத்தில் ஏற்பட்டமை அனைவரும் அறிந்ததே. ஆனால், இந்த மர்ம மனிதனை நேரடியாகக் கண்டவர்கள் எவரும் இல்லை. எல்லாம் வதந்தியாகும். இவற்றையெல்லாம் பெரிதுபடுத்தி மக்களைத் தூண்டி விட்டு வேடிக்கை பார்த்தவர்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் என்பதை அடித்துக் கூறுகின்றேன்.

தூண்டி விட்டு வேடிக்கை பார்த்தவர்களால் இன்று கைது செய்யப்பட்டவர்களை வெளியில் எடுக்க முடிந்ததா? தூண்டி விடப்பட்டமையினால் அப்பாவிகள் பொலிஸ் நிலையத்தை உடைத்து சட்டத்தைக் கையிலெடுத்துக் கொண்டதால் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட நிலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களின் குடும்பங்களைக் கவனிக்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களால் முடியுமா? ஜனாதிபதி அவசரகாலச் சட்டத்தை நீடிக்க இவ்வாறெல்லாம் செயற்படுத்தப்படுகின்றதென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பிரசாரம் செய்தது. இருப்பினும் ஜனாதிபதியால் அவசரகாலச் சட்டம் நீக்கப்பட்டுள்ளது. தற்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரால் என்ன கூற முடியுமென அவர் மேலும் கேள்வியெழுப்பினார். (ஸ்ரீ-4)




கனவு நனவாகிடும்
வியாபாரம் ஓங்கிடும்
செல்வம் பெருகிடும்
இவை அனைத்தும்
நேஷன்ஸ் லீஸிங் மூலம் கிடைத்திடும்

உங்கள் எண்ணங்களை நிறைவேற்றும் லீஸிங் பங்காளி

நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி வழங்கும் நேஷன்ஸ் லீஸிங் சேவையின் மூலம் உங்களுக்கு தேவையான வாகனம் அல்லது இயந்திர உபகரணங்களை இலகுவாகவும் சிறந்த கொடுப்பனவு முறையிலும் இன்றே பெற்றுக்கொள்ளுங்கள்.

அருகிலுள்ள நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கியை நாடுங்கள்

அழையுங்கள்: (011) 4 791 777
(011) 4 218 218

www.nationstrust.com

Nations Trust Bank PLC - PQ 118

Nations Trust Bank
Nations Leasing

# தேசிய அரசாங்கமொன்றை அமைப்பதற்குத் தயார்

## பிரதமர் தெரிவிப்பு



(கொழும்பு)

தேசிய அரசாங்கமொன்றை அமைப்பதற்கு தயார் என பிரதமர் டி.எம்.ஜயரட்ன தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சிகள் கோரிக்கை விடுத்தால் தேசிய அரசாங்கமொன்றை அமைப்பது குறித்து கவனம் செலுத்த முடியும் என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

மூன்று தசாப்தகாலமாக யுத்தம் இடம் பெற்று வந்த நாட்டில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த தேசிய அரசாங்கமொன்று அவசியமானது என அவர் தெரிவித்துள்ளார்.

எவ்வாறெனினும் தேசிய அரசாங்கமொன்றை அமைப்பது குறித்து அரசாங்கம் இதுவரையில் எதிர்க்கட்சிகளுக்கு எவ்வித அழைப்பையும் விடுக்கவில்லை என குறிப்பிடப்படுகிறது.

தேசிய பிரச்சினைகள் மற்றும் அபிவிருத்தித் தொடர்பில் அரசாங்கத்திற்கும் எதிர்கட்சிகளுக்கும் இடையில் பொதுவான இணக்கப்பாடு எட்டப்பட வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

தேசிய அரசாங்கமொன்றை உருவாக்குவதன்மூலம் ஆளும் கட்சிக்கும் எதிர்க்கட்சிக்கும் இடையில் வலுவான பிணைப்பை ஏற்படுத்தும் என அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

இதேவேளை புலம்பெயர் தமிழர்கள் இதுவரையில் அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்துவது குறித்து எவ்வித கருத்துக்களையும் வெளியிட்டதில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

புலம்பெயர் தமிழர்களுடன் அரசாங்கம். பேச்சுவார்த்தை நடத்தத் தயார் என அவர் அறிவித்துள்ளார்.

எனினும் பாராளுமன்றத் தெரிவுக்குழு தொடர்பிலான கருத்துக்களை முன்வைத்தால் மட்டுமே புலம்பெயர் தமிழர்களுடன் அரசாங்கம் பேச்சுவார்ததை நடத்தும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ஸ்ரீ-2)

# மேற்குலக அழுத்தங்களை சமாளிக்க பீரிஸ் வெளிநாடுகளுக்கு விஜயம்



(கொழும்பு)

சர்வதேச சமூகத்தின் ஆதரவினை திரட்டும் நோக்கில் வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் வெளிநாடுகளுக்கு விஜயம் செய்யவுள்ளார்.

இந்த திட்டத்தின் முதல் கட்டமாக அமைச்சர் பீரிஸ் நேற்று முன்தினம் வட கொரியாவிற்கு விஜயம் செய்துள்ளார்.

போர்க்குற்றச் செயல் மற்றும் மனித உரிமை மீறல் தொடர்பில் மேற்குலக நாடுகளினால் பிரயோகிக்கப்பட்டுவரும் அழுத்தங்களிலிருந்து விடு படும் நோக்கில் இந்த விஜயம் அமைந்துள்ளது என தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக, எதிர்வரும் மனித உரிமைக் கவுன்சில் கூட்டத்தில் இலங்கைக்கு வலுவான ஆதரவினை திரட்டும் வகையில் அமைச்சர் பீரிஸ் பல நாடுகளின் முக்கியஸ்தர்களை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

வெளிவிவகார அமைச்சினால் வெளியிடப்பட்ட அறிக்கையில் குறித்த விஜயம் பற்றி விபரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.பிரிட்டன், ஜோர்தான், கொரியா, சிங்கப்பூர் உள்ளிட்ட சில நாடுகளுக்கு அமைச்சர் பீரிஸ் விஜயம் செய்யவுள்ளார். (ஸ்ரீ-2)

# சிறுமிகள் காணாமல் போகும் சம்பவங்கள் அதிகரிப்பு

## தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை அறிவிப்பு

(கொழும்பு)

நாட்டில் சிறுமிகள் காணாமல் போகும் சம்பவங்களின் எண்ணிக்கை உயர்வடைந்துள்ளதாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை அறிவித்துள்ளது.

அண்மைக்காலமாக அதிகளவாக காணாமல் போயுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த சிறுமிகள் சட்டவிரோதமான முறையில் கடத்தப்பட்டிருக்கலாம் என சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.

அநேகமான சிறுமிகள் ஆண் நண்பர்களுடன் வீட்டை விட்டு வெளியேறிச் சென்றுள்ளதாக ஆய்வுகளின்மூலம் தெரியவந்துள்ளதாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவி அனோமா திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

இவ்வாறு வீட்டை விட்டு வெளியேறிச் செல்லும் யுவதிகள் பாலியல் தொழிலில் ஈடுபடுத்தப்படுவதாக சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.

பாலியல் தொழிலில் இளம் பெண்களை ஈடுபடுத்தும் நோக்கில் சில கும்பல்கள் நாட்டில் இயங்கி வருவதாக அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார். (ஸ்ரீ-2)

# ஒரே தினத்தில் இரு உயிர்களை பலி கொண்ட லொறி

(கொழும்பு)

ஒரே தினத்தில் வெவ்வேறு இடங்களில் இரண்டு உயிர்களை ஒரு லொறி காவு கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த லொறி, புத்தளம் கல்பிட்டி பிரதேசத்தில் நேற்று முன்தினம் பாதசாரி ஒருவரை மோதியதாகவும் காயமடைந்தவரை வைத்தியசாலைக்கு அழைத்துச் சென்ற போது மற்றுமொரு நபர் அதே லொறியில் மோதுண்டதாகவும் குறிப்பிடப்படுகிறது.

சைக்கிளில் பயணம் செய்தவரே மேற்படி சம்பவத்தில் இரண்டாவதாக மோதுண்டுள்ளார்.

புத்தளம் வைத்தியசாலைக்கு காயமடைந்தவர்கள் எடுத்துச் செல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. எனினும் காயமடைந்த இருவரும் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளனர்.

உயிரிழந்தவர்கள் புத்தளம் மற்றும் தலுவ ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது. சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (ஸ்ரீ-2)

# சட்டவிரோத இரத்தினக்கல் அகழ்வில் ஈடுபட்ட 43 பேர் கைதாகினர்

(கொழும்பு)

ஹத்தொடு அமுண, தகஸ்கிரிய பகுதியில் சட்டவிரோதமாக இரத்தினக்கல் அகழ்வில் ஈடுபட்ட 43 பேர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் அவர்களிடமிருந்து ஐந்து பெக்கோ இயந்திரங்களும் கைப்பற்றப்பட்டுள்ளதாக இரத்தினக்கல் மற்றும் தங்க ஆபரண அதிகாரசபை தெரிவித்துள்ளது.

விசேட அதிரடிப்படையினருடன் இணைந்து மேற்கொண்ட சுற்றிவளைப்பில் குறித்த நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக அதிகார சபையின் தலைவர் குறிப்பிடுகிறார்.

எனினும் அவர்கள் அபராதத் தொகையை செலுத்தியதன் பின்னர் விடுவிக்கப்பட்டதாக அவர் மேலும் குறிப்பிடுகிறார். (ஸ்ரீ-2)

# சேரிகளில் வசிக்கும் மக்களுக்கு கொழும்பு நகரில் நவீன வீடுகள்

## ஜனாதிபதி அறிவிப்பு

(கொழும்பு)

கொழும்பு நகரை அழகுபடுத்தும் போது அங்குள்ள சேரிவாழ் மக்களை அங்கிருந்து அப்புறப்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருவதாக சிலர் கூறுவதில் எந்த உண்மையும் இல்லை. சேரி வாழ் மக்கள் ஒருபோதும் கொழும்பில் இருந்து அப்புறப் படுத்தப்படமாட்டார்கள் என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கொழும்பு மாநகர சபை தேர்தலுக்காக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் சார்பாக போட்டியிடும் 59 பேரும் கடந்த 26 ஆம் திகதி அலரி மாளிகையில் வைத்து ஜனாதிபதி முன்னிலையில் உறுதிமொழி எடுத்துக் கொண்டனர். அச்சமயம் அவர்களிடையே உரையாற்றிய போதே ஜனாதிபதி மேற்கூறியவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் கூறியதாவது, கொழும்பு நகரை அழகுபடுத்துவதற்காக சேரிகளை அப்புறப்படுத்துவது உண்மை தான். ஆனால் அந்த சேரிகளில் வசிக்கும் மக்களுக்கு கொழும்பு நகரிலேயே மேலும் வசதிகளுடன் கூடிய வீடுகள் கட்டிக் கொடுக்கப்படும். இவ்வாறான வசதியான வீடுகளில் சேரி வாழ்மக்கள் ஏற்கனவே குடியமர்த்தப் பட்டுள்ளனர் என்று ஜனாதிபதி குறிப்பிட்டார்.

நடைபாதை வியாபாரிகளை அப்புறப் படுத்திய போதும் இதேபோன்றுதான் கூறப் பட்டது. எனினும் நடைபாதை வியாபாரிகளுக்கு இப்போது இடம் ஒதுக்கப்பட்டுள்ளது. இதேபோன்றே சேரி வாழ்மக்களுக்கும் உரிய வீட்டு வசதிகள் கொழும்பிலேயே வழங்கப் படும் என்று ஜனாதிபதி கூறினார்.

தேர்தல் பிரசார நடவடிக்கைகளின்போது கொழும்பு நகரை அசுத்தப்படுத்தாமல் சட்டத்துக்கு உட்பட்ட வகையில் பிரசாரத்தை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி கொழும்பு மாநகர சபை வேட்பாளர்களுக்கு கூறினார்.

அத்துடன் தேர்தல் வெற்றிக்காக அனைத்து வேட்பாளர்களும் வீடு வீடாகச் சென்று தமது வாக்காளர்களை சந்தித்து அவர்களுக்கு விடயங்களை தெளிவுபடுத்துமாறும் ஜனாதிபதி பணித்தார்.

கொழும்பு நகரை அழகுபடுத்த அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டுமென ஜனாதிபதி கேட்டுக்கொண்டார். (ஸ்ரீ-2)

# பாடசாலை அதிபர்கள் மற்றும் பிரிவு தலைவர்களுக்கு எதிராக அதிக முறைப்பாடு

## இலஞ்ச ஊழல் முறைப்பாட்டு ஆணைக்குழு தெரிவிப்பு

(கொழும்பு)

நாளாந்தம் கிடைக்கும் முறைப்பாடுகளில் 70 வீதமானவை அரசாங்கப் பாடசாலைகளின் அதிபர்கள் மற்றும் பிரிவுத் தலைவர்க்ளுக்கு எதிரான முறைப்பாடுகள் என இலஞ்ச ஊழல் முறைப்பாட்டு ஆணை க்குழு தெரிவித்துள்ளது.


பிள்ளைகளை பாடசாலைக்கு சேர்த்துக் கொள்ளும் போது பாடசாலைகளுடன் தொடர்புடைய பல்வேறு சங்கங்கள் இலட்சக்கணக்கில் பணத்தை பெற்றுக்கொள்வதாக முறைப்பாடுகள் கிடைத்துள்ளதென இலஞ்ச ஊழல் முறைப்பாட்டு ஆணைக்குழுவின் தலைவர் முன்னாள் உயர் நீதிமன்ற நீதியரசர் ஜகத் பால படபெத்த குறிப்பிட்டார்.

இவ்வாறு பணத்தை வழங்கியதன் பின்னர் அதிகளவான பெற்றோர்கள் அனாமதேய முறைப்பாடுகளை ஆணைக்குழுவிடம் முன்வைப்பதாகவும் அவர் கூறினார்.

பெற்றோரிடம் இருந்து இவ்வாறு பெற்றுக் கொள்ளப்படும் பணம் தொடர்பில் வெளிப்படையற்ற தன்மை உள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார். (ஸ்ரீ-2)

# எந்தவொரு சந்தர்ப்பத்திலும் ஜெனீவா மனித உரிமை அமர்வு இலங்கைக்கு சாதகமாக அமையாது

## ஜே.வி.பி. சுட்டிக்காட்டு



(கொழும்பு)

செப்டெம்பர் மாதம் நடுப்பகுதியில் ஜெனீவாவில் இடம்பெறவுள்ள சர்வதேச மனித உரிமைப்பேரவையில் இலங்கைக்கு எதிரான பிரேரணைகள் முன்வைக்கப்படுவதான அச்சுறுத்தல்கள் எழுந்துள்ள நிலையில் அதற்கு ஆதரவாக இந்தியா மற்றும் அமெரிக்கா உட்பட பல நாடுகள் செயற்பட காத்திருப்பதாக ஜே.வி. பி.எச்சரித்துள்ளது.

உள்நாட்டு மனித உரிமைகளை பாதுகாப்பதில் அரசாங்கம் தோல்வி கண்டுள்ளமையால் இலங்கை சர்வதேச தீர்ப்புகளுக்கு உட்படுத்தப்படும் அபாய நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் எதிர்காலத்தில் இலங்கை மேலும் தனிமைப்படுத்தப்படும் என்றும் அக்கட்சி குறிப்பிட்டுள்ளது.

இது தொடர்பாக ஜே.வி.பி.யின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா மேலும் கூறுகையில்,

இலங்கைக்கு எதிராக சர்வதேசத்தில் பல்வேறு குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளன. குறிப்பாக மனித உரிமைகள் போர்க் குற்றச்சாட்டுக்கள் முக்கியமானவை. இந்தக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் அரசின் செயற்பாடுகளும் அணுகுமுறைகளும் ஏற்றுக் கொள்ளக்கூடியதல்ல.

சர்வதேச நாடுகள் இலங்கைக்கு எதிராக விரல்களை நீட்டி குற்றச்சாட்டுக்களை சுமத்தும்போது அதற்கு முறையாக இராஜதந்திரீதியில் பதிலடி கொடுக்காது உள்நாட்டில் மேடைகளில் வீர வசனங்களையே அரசாங்கம் பேசி வந்தது. அண்மைக்காலமாக இலங்கையின் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக சர்வதேச நாடுகள் அழுத்தங்களை கொடுத்து வந்தன.

இதனை பொருட்படுத்தாமல் அரசாங்கம் இருந்தமையால் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் ஜெனீவா மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிரான நடவடிக்கைகளுக்கு பல நாடுகள் அழுத்தம் கொண்டு வரும் நிலை ஏற்பட்டுள்ளது.

இந்தியாவோ அமெரிக்காவோ எந்தவொரு சூழலிலும் இலங்கைக்கு உதவி செய்யாது. மாறாக அழுத்தங்களையும் பிரேரணைகளுக்கு ஆதரவையுமே வழங்கும்.

இதற்கு முன்னரும் பல சந்தர்ப்பங்களில் ஜென்மீவா மனித உரிமை பேரவையில் இலங்கைக்கு எதிரான தீர்மானங்களை நிறைவேற்ற முற்பட்ட போது அதற்கு எதிரான நாடுகள் இன்று இலங்கைக்கு எதிராக வாக்களிக்கும் நிலையே காணப்படுகின்றது. உலக நாடுகளுடன் நட்புறவை பாதுகாத்துக் கொள்ளாது அரசாங்கம் வீண் பகைகளையே தேடிக் கொண்டுள்ளது.

அவசரகாலச் சட்டம் நீக்கம், பயங்கரவாத தடைச் சட்டம் நீடிப்பு என்பன மனித உரிமைகளுடன் நேரடியாக தொடர்புபட்ட சட்டங்களாகும். அடிப்படை உரிமைகள் மீறல்கள் உட்பட உள் நாட்டில் இடம்பெறும் ஊடக அடக்குமுறை என்பன இலங்கையின் சூழலை வெளிப்படுத்தியுள்ளது.

ஏற்கனவே, சர்வதேசம் பல சந்தர்ப்பங்களை இலங்கைக்கு கொடுத்திருந்தது. மனித உரிமைகளை பாதுகாப்பது ஜனநாயக அரசின் கடமை என்றாலும் இலங்கையின் தற்போதைய அரசாங்கம் மனித உரிமைகளை பாதுகாப்பதில் அக்கறை செலுத்தவில்லை.

எவ்வாறாயினும் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் இலங்கைக்கு மேலும் அழுத்தங்களையும் சர்வதேசத்தின் குற்றச்சாட்டுக்களையும் எதிர்கொள்ள நேரிடும். எந்தவொரு சந்தர்ப்பத்திலும் ஜெனீவா மனித உரிமை பேரவையின் அமர்வு இலங்கைக்கு சாதகமாக அமையாது எனக் கூறினார். (ஸ்ரீ-2)

## சிறப்புச் சொற்பொழிவு

(மருதங்கேணி)

ஸ்ரீ வல்லிபர ஆழ்வார் ஆலய சூழலில் அமைந்திருக்கும் பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் பிரதி ஞாயிற்றுக்கிழமை தோறும் நடைபெற்று வரும் ஆன்மீக நிகழ்வுத் தொடரில் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 4 ஆம் திகதி வெள்ளிக்கிழமை 10 மணிக்கு பூசை முடிவுற்றதும் பெரியபுராணம் எனும் விடயம் பற்றி அகில இலங்கை சமாதான நீதிவான் கலாபூஷணம் செல்லத்தம்பி மாணிக்கவாசகர் சிறப்புச் சொற்பொழிவு ஆற்றவுள்ளார். (ஸ்ரீ-12-35)

## மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

மிருசுவில் வடக்கு குருக்கள் மாவடி வீரகத்தி விநாயகர் தேவஸ்தானத்தின் வருடாந்த மஹோற்சவம் கடந்த 22 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

இதில் இன்று காலை தேர்த்திருவிழா வும் நாளை புதன்கிழமை தீர்த்தத்திருவிழாவும் நடைபெறும். (ஸ்ரீ-12)

# பாராளுமன்றத் தெரிவுக்குழுவினால் எனது நடவடிக்கைகளை விசாரணை செய்யமுடியாது

## முன்னாள் பிரதம நீதியரசர் அறிவிப்பு

பாராளுமன்றத் தெரிவுக்குழுவினால் எனது நடவடிக்கைகளை விசாரணை செய்ய முடியாது என முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என் சில்வா தெரிவித்துள்ளார்.

பதவியிலிருந்து ஓய்வுபெற்று இரண்டு ஆண்டுகள்கடந்துள்ளதாகவும்தமதுசேவையை பாராட்டி ஜனாதிபதி எழுத்து மூலமான கடிதம் வழங்கியுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பிரதம நீதியரசராக நாட்டுக்கு ஆற்றிய அளப்பரிய சேவையை பாராட்டுவதாகத் தெரிவித்து இந்தக் கடிதம் வழங்கப்பட்டுள்ளது என அவர் குறிப்பிட்டுள்ளார்.


நல்லாட்சி மற்றும் ஊழல் ஒழிப்பு தொடர்பில் கண்டி திருத்துவக் கல்லூரியில் நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றில் கலந்து கொண்ட போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

மனித உரிமை மீறல்,ஊழல் ஒழிப்பு மற்றும் நல்லாட்சி தொடர்பாக குரல் கொடுத்து வரும் காரணத்தினால்,தம்மை குற்றவாளியாகச் சதித்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அதன் ஓர் அங்கமாக இந்த பாராளுமன்றத் தெரிவுக்குழு விசரணைகளை நோக்குவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பிரதம நீதியரசராக கடமையற்றிய காலத்தில் சில நீதிவான்களுக்கு அநீதி இழைக்கப்பட்டதாக ஜனாதிபதியிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. தமக்கு எதிராக விசாரணை நடத்துவதற்கு ஜனாதிபதி பாராளுமன்றத் தெரிவுக்குழு ஒன்றை நியமிக்கத் தீர்மானித்துள்ளார் என்பதனை புரிந்து கொண்டதாகக் குறிப்பிட்டுள்ளார்.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் ஓய்வு பெற்றுக் கொண்டுள்ளதாகவும் இதனால் பாராளுமன்றத் தெரிவுக்குழுவினால் தம்மை விசாரணை செய்ய முடியாது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். சாதாரண குடிமகனாகவே தாம் கருத்துக்களை முன்வைத்து வருவதாகக் குறிப்பட்டுள்ளார்.

தற்போது ஆளும்கட்சி பாராளுமன்ற உறுப்பினராக பதவி வகிக்கும் ஜனக பண்டார என்பவரினால் ஜனாதிபதியிடம் முறை



ப்பாடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

குறித்த நபர் பதில் நீதிவானாக கடமையாற்றியதாகவும் அந்தக் காலத்தில் அவருக்கு எதிராக பல்வேறு முறைப்பாடுகள் செய்யப்பட்டிருந்ததாகவும் சரத் என் சில்வா குறிப்பட்டுள்ளார். இதன் காரணமாக சுயவிருப்பின் அடிப்படையில் ஜனக பண்டார பதவியை இராஜினாமா செய்ததாகத் தெரிவித்துள்ளார்.

குறித்த நபருக்கு திறைசேரியிலும் பின்னர் மத்திய கிழக்கு நாடொன்றில் தூதுவர் பதவியும் வழங்கப்பட்டிருந்தாகவும் அவர் சட்டிக்காட்டியுள்ளார். ஜனக பண்டார தொடர்பில் ஜனாதிபதிக்கு எழுத்து மூலம் அறிவித்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார். இந்த சகல விடயங்கள் பற்றிய ஆதாரங்களும் காணப்படுவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ஸ்ரீ-2)

# வாகன இலக்கத்தகடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சி மாவட்ட செயலகத்தின் மோட்டார் போக்குவரத்துக் கிளையில் விண்ணப்பித்தவர்களுக்கான வாகன இலக்கத்தகடுகளின் (வடமாகாணம்) ஒருதொகுதி கிடைக்கப் பெற்றுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி றூ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார்.

எனவே, உரிமையாளர்கள் அலுவலக நேரத்தில் வாகனப் பதிவுச் சான்றிதழின் மூலப் பிரதி, அதன் புகைப்படப் பிரதி, தேசிய அடையாள அட்டை, பழைய இலக்கத்த தகடுகள் (பழைய பதிவேடுகளுக்கு மாத்திரம்), ஆகியற்றுடன் நேரில் சமூகம் தந்து இலக்கத்தகடுகளைப் பெற்றுக் கொள்ளுமாறு அவர் கேட்டுள்ளார்.

வாகனத் தகடுகளின் விபரம் வருமாறு,

JT-5980, YF-9456, LD-8276,LA-9370, QD-0383, YF-7970, HB-1481, KA-5867, QB-2963, JA-2668, LC-7125, HP-2070, HH-8475, YG-3221, JV-6028, RA-2726, JL-2133, GY-2135, LB-2069, LE-5685, QD-1498, YG-3474, QG-7095, JD-0011, QE-5408, HQ-8314, JO- 9418, PA-7730, HS-1310, QJ-1512, QE-7814, GC-8794, HW-9759, LA-5651, GE-1412, LA-0480, JW-2475, GO-7744, KB-3914, HV-4976, QD-9825, HF-4811, HI-5454, HG-3283, HV-9977, KA-6929, JN-4084, HC-8089, QB-8898, GL-6574, HI-9827, JP-9132, HI-5131, YC-3923, QA-0231, RA-8767, QF-8397, JP-0007, LA-9370, QG-3887, QD-9407, HB-5051, QD-7208, HF-0199, QB-4881, GB-7767, GY-0926, QG-8183, YF-6092, JH-6366, QF-8298, HS-3598, GC-6766, GN-5579, JE-4098, QG-6144, YF-6469, KC-2994, JV-5280, RA-3912.

(ஸ்ரீ-2)

# சிறுவர்களை துஷ்பிரயோகங்களுக்கு உட்படுத்துவோருக்கு கடும் தண்டனை

(கொழும்பு)

வெளிநாட்டவர்களால் இலங்கை சிறார்கள் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்படும் சந்தர்ப்பத்தில் அதற்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கு நடைமுறையிலுள்ள சட்டம் போதுமானதாக இல்லையெனவும் அதில் குறைபாடுகள் நிலவுவதாகவும் கொழும்பு பல்கலைக்கழகத்தின் சட்ட பீடத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் பேராசிரியர் பிரதீபா மஹனாம ஹேவா சுட்டிக்காட்டியுள்ளார்.

அவ்வாறு சிறுவர்களை துஷ்பிரயோகங்களுக்கு உட்படுத்தும் நபர்களுக்கு கடும் தண்டனை வழங்குவதற்கு புதிய சட்டங்களை அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென அவர் குறிப்பிடுகிறார்.

இது தொடர்பில் உடன் நடவடிக்கை எடுக்கப்படும் என சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் பிரதி அமைச்சர் எம்.எல்.ஏ. எம்.ஹிஸ்புல்லா தெரிவித்தார்.

(ஸ்ரீ-2)

# மிதிவெடிகள் அகற்றப்பட்டு ஆறு மாதமாகியும் இதுவரை மீள் குடியேற்றம் நடைபெறவில்லை

## திருக்கோவில் பிரதேசமக்கள் அவலம்

அம்பாறை மாவட்டம் திருக்கோவில் பிரதேசத்திலுள்ள கஞ்சிகுடிச்சாறு மற்றும் தங்கவேலாயுதபுரம் கிராமங்களில் போர்க் காலத்தில் புதைக்கப்பட்ட மிதிவெடிகளை அகற்றும் பணிகள் பூர்த்தியடைந்து 6 மாதங்கள் கடந்து விட்ட போதிலும் அங்கிருந்து இடம் பெயர்ந்த சுமார் ஆயிரம் குடும்பங்கள் இன்னமும் மீள்குடியேற்றப்படாத நிலையிலேயே காணப்படுகின்றன.

அரசாங்கத்தினால் இதுவரை மீள்குடியேற்றப் பணிகள் மேற்கொள்ளப்படாத நிலையில் சில குடும்பங்கள் தமது வாழ்வாதாரம் கருதி தாமாகவே அங்கு சென்று இருப்பிடம் உட்பட அடிப்படை வசதிகள் அற்ற நிலையில் மீளக்குடியேறியுள்ளன்.

இந்தக் கிராமங்களை உள்ளடக்கிய பிரதேசம், அம்பாறை மாவட்டத்தில் விடுதலைப் புலிகளின் முக்கிய பிரதான தளங்கள் அமைந்திருந்த பகுதியாக போர்க்காலத்தில் அடையாளம் காணப்பட்டிருந்தது.

கிழக்கு மாகாணத்தில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலிருந்து இறுதியாகவே இந்தப் பிரதேசம் மீட்கப்பட்டிருந்தது.

கடந்த 2006 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 5 ஆம் திகதி இந்த கிராமங்களைச் சேர்ந்த குடும்பங்கள் போர்ச் சூழல் காரணமாக அங்கிருந்து வெளியேறி அயல் கிராமங்களில் அகதிகளாக தஞ்சம் பெற்று வாழ்ந்ததாகக்கூறும் கஞ்சிகுடிச்சாறு கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் செல்வராசா கமலேஸ்வரன் மிதிவெடிகள் அகற்றப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டு 6 மாதங்கள் கடந்து விட்ட நிலையிலும் இதுவரை மீள் குடியேற்றம் நடைபெறவில்லை என்றார்.

மீள்குடியேற்றமின்றி தொடர்ந்தும் அகதிகளாகவே உள்ள தமது கிராம மக்களுக்கு உலக உணவுத் திட்டத்தினால் வழங்கப்பட்ட உணவு நிவாரணம் கூட ஒரு வருடத்திற்கு முன்னதாக நிறுத்தப்பட்டுவிட்டதாகவும் மீள் குடியேற்றம் என்பது இன்னமும் கேள்விக் குறியாகவே உள்ளது எனவும் கமலேஸ்வரன் கவலையுடன் கூறினார்.

அரசாங்கத்தினால் மீள்குடியேற்றம் செய்யப்படாத நிலையில் தன்னார்வ தொண்டர் அமைப்புக்கள் கூட தங்களுக்கு நிவாரண உதவிகளை வழங்க முன்வருவதில்லை என சமூக சேவகியான ரதிதேவி மதியழகன் சுட்டிக் காட்டினார்.

குறித்த கிராமங்களின் மீள் குடியேற்றம் தொடர்பாக கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தனிடம் கேட்ட போது,

எதிர்வரும் பருவ மழைக்கு முன்னதாக இக் குடும்பங்கள் மீள்குடியேற்ற உத்தேசிக் கப்பட்டுள்ளதாக பதிலளித்தார். (ஸ்ரீ-2)

# சதுர்த்தி விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்.வண் வடகிழக்கு கலட்டி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலய சதுர்த்தி விழா நாளை மறுதினம் வியாழக்கிழமை நடைபெறவுள்ளது.

இதில் இன்றைய தினம் பிற்பகல் 2.45 மணிக்கு அபிஷேகமும் தொடர்ந்து மூலமூர்த்தி பூஜை, வசந்த மண்டப பூசை என்பன நடைபெற்று விநாயகப் பெருமான் உள்வீதி, வெளிவீதி வலம் வருதலும் இடம்பெறும். (ஸ்ரீ-12)

* * * * * *


(யாழ்ப்பாணம்)

முல்லை. திருமுறிகண்டி அருள்மிகு முறிகண்டிப் பிள்ளையார் ஆலய ஆவணி சதுர்த்தி விழா நாளை மறுதினம் வியாழக்கிழமை நடைபெறவுள்ளது.

இதில் இன்றைய தினம் காலை ஆலயத்தில் அபிஷேக பூசைகளுடன் ஆரம்பமாகி அன்று மதியம் 12 மணியளவில் அன்னதான நிகழ்வும் இடம்பெறும். (ஸ்ரீ-12)

# புல்டோசர் பயங்கரவாதத்திற்கு எதிராக குரல் கொடுப்போம்

## மனோகணேசன் தெரிவிப்பு



(கொழும்பு)

வீடமைப்பு அமைச்சர் விமல் வீரவன்ச, பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ச ஆகியோரின் புல்டோசர் பயங்கரவாதத்திற்கு எதிராக குரல் கொடுப்போம் என ஜன நாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

அபிவிருத்தி என்ற பெயரில் ஏழை மக்களின் குடிசைகளை தரைமட்டமாக்கி அவர்களை தூர இடங்களுக்கு துரத்தும் நடவடிக்கைகளுக்கு இடமளிக்கப்படமாட்டாது.

அரசாங்கத்திற்கோ அல்லது ஐக்கிய தேசியக்கட்சிக்கு வாக்களிப்பதற்கான எந்தவொரு நியாயமான காரணங்களும் தமிழ் மக்களுக்கு கிடையாது.

எந்தக் காலத்திலும் தமிழ் மக்கள் ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆதரவளிப்பார்கள் என்ற எண்ணம் பிழையானது.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி கூட்டமைப்பினால் மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளை தமிழ்மக்கள் அறிந்திருக்கமாட்டார்கள்.

தமிழ் மக்களுக்கு நியாயம் வழங்கக்கூடிய பொன்னான சந்தர்ப்பங்களில் அரசாங்கம் மௌனம் காத்து வந்ததாக குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ-2)

# யாழிலுள்ள காணிகள் தொடர்பான விபரங்கள் அரசால் சேகரிப்பு

(கொழும்பு)

யாழ்ப்பாணத்தில் காணிகள் தொடர்பான விபரங்கள் அரசால் சேகரிக்கப்படுகின்றன.

முதற்கட்டமாக நல்லூர் பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட கிராம சேவகர்கள் பிரிவில் உள்ள குடும்பங்களுக்கு விண்ணப்பங்கள் விநியோகிக்கப்பட்டு தகவல்கள் பெறப்படுவதாக கூறப்படுகின்றது.

அரசால் விநியோகிக்கப்பட்டுள்ள விண்ணப்பத்தில் காணியின் விபரம், சொந்தக்காரர் யார், பரப்பளவு, காணி பதிவு செய்யப்பட்ட திகதி போன்ற விபரங்கள் கோரப்பட்டுள்ளதாக யாழ். மாநகர சபையின் சட்ட ஆலோசகரும் மூத்த சட்டத்தரணியுமான அருளம்பலம் ராஜரட்ணம் தெரிவித்துள்ளார்.

நாட்டின் ஏனைய பகுதிகளில் இல்லாத வகையில் யாழ்ப்பாணத்தில் மட்டும் இப்படியான விபரங்களை கோருவது அரசியல் சட்டத்துக்கு எதிரான நடவடிக்கையாகவே கருதப்படும் என்றும் அவர் கூறியுள்ளார்.

பகிரங்கமாக வெளியிடப்பட்டு தகவல்கள் கோரப்படும் நிலையில் இந்தப் படிவத்தில் குறிப்பிடப்படும் விபரங்கள் இரகசியமாக வைக்கப்படும் என்றும் அதில் கூறப்பட்டுள்ள நிலையில் காணி தொடர்பான தகவல்களை இரகசியமாக வைக்க வேண்டிய அவசியம் எதுவும் இல்லை என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ஸ்ரீ-2)

# பிரித்தானியாவில் நிர்க்கதியான இலங்கை மாணவர்களுக்கு பிற கல்லூரிகளில் வாய்ப்பு

பிரித்தானியாவில் அண்மையில் திடீரென மூடப்பட்ட கல்லூரிகளினால் பாதிக்கப்பட்ட இலங்கை மாணவர்களினை வேறு கல்லூரிகளில் சேர்த்துக் கொள்ள பிரித்தானிய அரசு உடன்பட்டுள்ளது.

பிரித்தானிய பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கும் இலங்கை உயர்ஸ்தானிகராலயத்தில் பிரதிநிதிகளுக்கும் இடையில் மேற்கொள்ளப்பட்ட கலந்துரையாடலின் பின்பு இவ்வாறான உடன்பாடொன்று கைச்சாத்திடப்பட்டுள்ளது என வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

முறைகேடுகள் காரணமாக பிரித்தானியாவில் 3 பல்கலைக்கழகங்கள் மூடப்பட்டதை அடுத்து 80 இலங்கை மாணவர்கள் செய்வதறியாது தவித்து வந்தமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

# கிறிஸ் பூத சர்ச்சையை அடுத்து கிறிஸ் விற்பனையில் நிபந்தனைகள்

இலங்கையில் கிறிஸ் விற்பனை செய்யும் போது நிபந்தனைகள் தெரிவிக்கப்படுகிறது. கடந்த காலங்களில் தேவையானளவு கிறிஸை பெற்றுக் கொள்வதற்கு எவ்வித தடையும் காணப்படவில்லை.

எனினும் தற்போது கிறிஸ் விற்பனை செய்யும் நிறுவனங்கள் கொள்வனவு செய்வோரின் அடையாள அட்டைகளை பார்வையிடுவதாகவும் அதில் பிரதிகளை எடுத்து வைத்துக் கொள்வதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கிறிஸ் பூத சர்ச்சை காரணமாக இவ்வாறான பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக குறிப்பிடப்படுகின்றது.

நாட்டின் அநேகமான பகுதிகளில் கிறிஸ் கொள்வனவின் போது சிக்கல்களை எதிர்நோக்க நேரிட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (ஸ்ரீ-2)

# இந்தியாவில் காணாமல்போன இலங்கை யாத்திரிகர்களில் ஒருவர் கண்டுபிடிப்பு

இந்தியாவில் காணாமல்போன இலங்கை யாத்திரிகர்களில் ஒருவர் கண்டுபிடிக்கப்பட்டுள்ளார்.


சில தினங்களுக்கு முன்னர் இந்தியாவிற்கு யாத்திரை மேற்கொண்ட மூன்று இலங்கையர்கள் காணாமல் போயிருந்தனர்.

காணாமல் போனவர்களைத் தேடும் நடவடிக்கைகள் இராஜதந்திர ரீதியில் மேற்கொள்ளப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

ஐந்து நாட்களுக்கு முன்னர் காணாமல் போயிருந்த ஆனந்த குணரட்ன என்ற நபர் கண்டுபிடிக்கப்பட்டதாக இந்தியாவிற்கான இலங்கை உயர்ஸ்தானிகராலயம் அறிவித்துள்ளது.

குறித்த நபர் இலங்கைக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

காணாமல்போன ஏனைய இருவரைத் தேடும் பணிகள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வருவதாகக் குறிப்பிடப்படுகின்றது. (ஸ்ரீ-2)



பாடசாலைகளுக்கிடையிலான தமிழ்த்தினப் போட்டியில் தேசிய மட்டத்தில் சமூக நாடக திறந்த பிரிவில் முதலிடம் பெற்ற வவுனியா பண்டாரிக்குளம் விபுலானந்தாக் கல்லூரி நாடகக் குழுவினரையும் நாடக ஆசிரியர் நெறியாளரான கந்தையா ஸ்ரீகந்தவேள், பாடசாலை அதிபர் இந்திரன் ஆகியோரையும் படத்தில் காணலாம்.

# மற்றொரு கோணம்



## தியானத்தின் போது மனதின் இயல்பு புரியும்

மாயை என்று தெரிந்தும் சில விடயங்களிலிருந்து விடுபட முடியாமல் தவிப்பதற்கு என்ன காரணம்?

அப்படியானால் அதை நீங்கள் விரும்பத் தொடங்கி விட்டீர்கள் என்று அர்த்தம். இல்லையென்றால் அதிலிருந்து விடுபட முடியாமல் தவிப்பதற்கு அவசியமே இல்லை. ஒரு விடயம் உண்மையிலேயே மாயை என்று தெரிந்தும் அது உங்களுக்குப் பிடித்திருக்கிறது என்றால் மன நோய்க்கு நீங்கள் மெல்ல

**ஆன்மீகம் 26**

மெல்ல ஆட்பட்டுக்கொண்டிருக்கிறீர்கள் என்று அர்த்தம்.

உண்மையில்லாத ஒன்று இன்று உங்களுக்கு மகிழ்ச்சி தந்தாலும் நாளை வேதனையைத்தான் தரும். எனவே, ஒன்று உண்மையில்லை என்று தெரிந்தால் அதிலிருந்து எவ்வளவு விரைவாக முடியுமோ அவ்வளவு விரைவாக மீண்டு வாருங்கள். அந்த சுழ்நிலையிலிருந்து வெளியேறுங்கள். இல்லையென்றால் உங்கள் ஸ்திரத் தன்மையை இழப்பீர்கள்.

மனத்தை அடக்க நினைத்தால் திமிருகிறது, கிட சனியனே என்று விட்டுவிட்டால் அமைதியாகி விடுகிறதே ஏன்?

ஒன்றை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும். இதுதான் மனதின் இயல்பு. ஒன்றை வேண்டாம் என்று நீங்கள் விலக்கினால், மனம் அதையேதான் நாடிச்செல்லும். மனதின் இயல்பை தெரிந்து கொள்ளாமல் தற்செயலாக அமைதியையும் மகிழ்ச்சியையும் அனுபவித்து வந்திருக்கிறீர்கள். மனதின் தன்மையை நீங்கள் தெரிந்து கொள்வதற்குத்தான் தியானம் அவசியமாகிறது. தியானத்தின் போது மனதின் இயல்பு உங்களுக்குப் புரிகிறது. மனதை எப்படிக் கையாள வேண்டும் என்று தெரிகிறது.

எந்த ஒரு பிறவியாக இருந்தாலும் உங்கள் விருப்பத்திற்கேற்ப அதனை இயக்க முடிகிறபோதுதான் அது உங்களுக்குப் பயன்படுகிறது. உடல், மனம் ஆகிய கருவிகளுக்கும் இதே நிலைதான். முழுமையான மனிதராக நீங்கள் வாழ விரும்பினால் உடலும் மனமும் உங்கள் கட்டுப்பாட்டில் இருக்கவேண்டியது மிக மிக அவசியம்.

ஒரே விடயத்தில் மனம் இன்று ஒரு முடிவும், இரண்டு நாட்கள் கழித்தால் வேறொரு முடிவும் இன்னும் சிறிது நாட்கள் கழித்து முன்னர் எடுத்த முடிவையே தீர்மானிக்கிறதே? காலம் ஏன் மனதைக் குழப்புகிறது?

ஒரு விடயத்தில்தீர்க்கமாக முடிவெடுக்காமல் அது சரியா, இல்லையா என்று தொடர்ந்து யோசித்துக் கொண்டே இருந்தால் பைத்தியம் தான் பிடிக்கும். நீங்கள் தெளிவான மன நிலையில் இருக்கும் போது எது நல்லது என்று யோசித்து மன உறுதியோடு அதனை நடைமுறைப்படுத்த வேண்டும். எது உயர்ந்தது என்று யோசித்து நீங்கள் நினைத்ததை மாற்றிக் கொண்டே போவீர்கள் என்றால் அதற்கு முடிவே கிடையாது.

உயர்ந்தது தாழ்ந்தது என்று பார்ப்பதை விட முழு விருப்பத்தோடு உங்களால் எதனை ஆனந்தமாக செய்ய முடிகிறதோ அதையே மன உறுதியோடு செய்யுங்கள்.

தீர்க்கதரிசனம் சாதியமான ஒன்றா? அப்படியென்றால் உலகில் நடப்பவையெல்லாம் முன்னரே தீர்மானிக்கப்பட்டவையா?

மாமர விதையொன்றைப் பார்க்கும்போது அது மாமரமாக வளரும் என்று சொல்லிவிட முடியும். இதற்கென்று பெரிதாக தீர்க்க தரிசனம் எதுவும் தேவையில்லை. ஆனால், அந்த மாமரம் முழுவளர்ச்சியைப் பெறுவது நடைமுறை விடயங்களைச் சார்ந்தது.

அந்த விதை முளைத்து செடியாகும் வேளையில் கால் நடைகள் ஏதாவது அதனைச் சாப்பிட்டுவிடக்கூடும். யாராவது மிதித்து அழித்துவிடக்கூடும் அல்லது போதிய வளர்ச்சி இல்லாமல் மிகவும் பலவீனமானதாக வளரக்கூடும். ஒரு விதைக்குள்ளேயே எதிர்காலத்தில் உருவாகப் போகின்ற விருட்சம் இருக்கிறது என்பது உண்மைதான். ஆனால், வாழ்க்கையின் சூழ்நிலைகளுக்கு ஏற்ப அந்த வளர்ச்சி முழுமையாகவோ அரைகுறையாகவோ நிகழ்ந்தேறுகிறது. அதேபோல ஒரு மனிதனுக்குள் இருக்கக் கூடிய வள்ர்ச்சிக்கான சாத்தியங்களை கணித்துச் சொல்லமுடியும். அவற்றை நோக்கி முழுமையாக வளர்வது அந்த மனிதனின் ஆற்றலையும் புறச் சூழ்நிலைகளையும் பொறுத்திருக்கிறது.

அதே நேரம் மாவிதைக்கும் மனிதனுக்கும் ஒரு முக்கியமான வித்தியாசம் இருக்கிறது. மாவிதை தன்னுடைய வளர்ச்சிக்கென்று தானாக எதையும் செய்து கொள்ள முடியாது. ஆனால், மனிதன் எவ்வளவுக்கெவ்வளவு வளர்ச்சிக்கான சாத்தியங்களைக் கொண்டிருக்கிறானோ அந்த அளவு அவற்றை மேம்படுத்துவதற்காகவும் தன்னுடைய உச்சபட்ச வளர்ச்சியை தொடுவதற்காகவும் அவனால் முயற்சியெடுக்க முடியும். எனவே உங்கள் எதிர்காலத்தை யாராவது கணித்துச் சொல்ல வேண்டுமென்று காத்திருக்காதீர்கள். உங்களுக்கிருக்கிற சக்தியின் உச்சம் தொடுவதற்கு வேண்டிய அத்தனை முயற்சிகளையும் மேற்கொள்ளுங்கள்.

(தொடரும்)

**சத்குரு ஜக்கி வாசு தேவ்**

# புதுமைப்பித்தன்

## எதிரொலிச்சான் கோவில்களை தகர்க்கப் புறப்பட்ட கலகக்காரன்

**03**

"பொன்னகரமும், கவந்தனும், காமனும் தொட்ட சமுதாய, பொருளாதாரப் பிரச்சினைகள் புதுமைப்பித்தனை சிறுகதை ஆசிரியனாக ஏற்றுக்கொள்ளச் செய்தன கயிற்றரவும் சிற்பியின் நரகமும் அல்ல." (வெங்கட் சாமிநாதன்- பாலையும் வாழையும்-பக்க எண்:82) எனவும் "புதுமைப்பித்தனின் மறைவு உண்மையான இலக்கிய விழிப்பின் மறைவு." எனவும் வெ.சா. எழுதியுள்ளதை ஒரு இலக்கிய விமர்சகனின் பதிவு என எடுத்துக் கொண்டாலும் புதுமைப்பித்தனின் உடல் மறைவு, இலக்கிய விழிப்பின் மறைவு எனக் கொள்வது சரியான மரபில்லை. சொ. விருத்தாசலம், புதுமைப்பித்தனாக கிளர்ந்தெழுந்தது என்பது, பாலையில் வாழையென்பது போல எடுத்துக் கொண்டாலும் தனக்கு முந்தைய ஐம்பது ஆண்டுகால வசன மரபை நொந்து நூலாகிப்போயிருந்த கடந்த இரண்டு மூன்று நூற்றாண்டு காலக் கலை, இலக்கிய வெளிப்பாட்டு வீழ்ச்சி மரபைக் கவனமாகப்பார்த்து கட்டுடைக்க வெளிவந்த நவீன எழுத்து புதுமைப்பித்தன் மரபு. மணிக்கொடி மரபு என்றும் கூறலாம், ஒரு வரலாற்றுப்பதிவுக்காக.

1948 இல் 42 ஆவது வயதில் புதுமைப்பித்தன் என்னும் 'கோட்டிக்காரன்' தன் வாழ்க்கைப் போராட்ட மூச்சை நிறுத்திய பின்பு, 60 ஆண்டுகளுக்கு மேல் கழிந்த நிலையில், இந்த 60 ஆண்டுகள் புதுமைப்பித்தனுக்கு முன்பிருந்த 40-50 ஆண்டுகள் என, உரை நடை அல்லது வசனமரபை, எழுத்து வெளிப்பாடுகளைப் பார்த்தால்- அதுவும் குறிப்பாக கடந்த 40 ஆண்டு கால தமிழ் நாட்டு இலக்கிய சிறுபத்திரிகைகளில் வெளிப்பட்டி

> "கொழும்பில் நடைபெற்ற சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக்கட்டுரை"

ருப்பன- திமிரான அற்பமான தேடல்களாகத்தான் உள்ளனவே தவிர கட்டுடைப்புப் பணி தொடரவில்லை என்று கூறலாமா?

வாழ்க்கையில் சநாதனிகளாகவும் எழுத்தில் நவீன படைப்பாளிகளாகவும் தலைப்பிரட்டைகளானதின் மூலம் சிந்தனை அல்லது கருத்து அளவில் துண்டித்துக் கொண்டவர்கள் என நிலைகெட்டு அற்பவாதங்கள் புரிந்து அனுபவம் அற்ற மன வெளிகளுக்கு புலம் பெயர்ந்து போன தமிழ் நாட்டு இலக்கிய சிறு பத்திரிகைக்காரர் 'இலக்கியத்தினால்' உயிர் வாழ்கிறார்கள் என்றால் அது உண்மையாகுமா? 'உயிர்வாழ்கிறோம்' என்றால், எதன்பொருட்டு என்று கேட்கலாமா? இலக்கிய கருத்துருவாக்க இஸங்களைப்பற்றிப் பேசுகிறோமே ஒழிய உருவாக்கப் புறச்சூழல் என்ன என்பது பற்றிமறந்தும் பேசுவதில்லை. தீவிரமான புற அகப் போராட்டத்திற்கும் தீவிரமான கலை இலக்கிய வெளிப்பாட்டிற்கும் கோட்பாடு அளிப்பிற்கும் உருவாக்கத்திற்கும் ஒட்டுறவு வேண்டியதில்லை என நவீன எழுத்துக்காரரை கருத வைக்கும், நமது அகக்குரலுக்கு புறச் செயற்பாடு, நாம் புதுமைப்பித்தனிலிருந்து கற்கவில்லை; கற்கத்தயாராயில்லை என்பதையே காட்டுகிறது.

புதுமைப்பித்தனின் நவீன சிறுகதைகள் மற்றும் எள்ளல் கவிதைகள் பெரும்பாலும் வாசக அனுபவத்துக்குட்பட்டுவிட்டன. கட்டுரைகளும் விமர்சனங்களும் விவாதங்களும் தொகுப்புகளாக படிக்கக் கிடைக்கும் நிலையில் புதுமைப்பித்தன் என்ற ஆளுமையின் கலகக்குரல் எடுத்த முடிவில் நின்று 'ரணசஸ்திரம்' தேவையெனச்செய்த அறுவைச் சிகிச்சை மேற்பூச்சுகளிநின்று வெளிப்பட்டதன் காரண காரியத்தை நாம் உணராமற் போய்விடக்கூடாது.

பாரதியாகட்டும் புதுமைப்பித்தன் ஆகட்டும் அல்லது நாமறிந்த அவர்கள் கால நவீன படைப்பாளிகளாகட்டும்- அனைவருமே 'வசனம்' என்பதை வளப்படுத்த வேண்டும் என்பதை நோக்கமாகவே கொண்டுள்ளோம் என்பதை வெளிப்படையாக அறிவித்திருக்கிறார்கள்.

**பாரவி-தமிழ்நாடு**


ஓலை நறுக்குகளில் எழுதப்பட வசனம் இடமளிக்காத நிலையில் கவிதைகளே எழுதப்பட்டவைகளாக, கடிதங்கள் எழுதுவதுகூட சீட்டுக்கவியாக நேர்ந்ததை புதுமைப்பித்தன் குறிப்பிட்டு தலையில் குத்திக்கொள்ளாமல் இல்லை.

(தொடரும்)

# நீரிழிவு நோயின் வகைகள்

நீரிழிவு நோய் மிகப் பெரிய நோயாக மாறியுள்ள போதிலும் கூட இதைப் பற்றிய விழிப்புணர்வு பெரிய அளவில் மக்களிடம் இல்லை என்று தான் கூற வேண் டும்.

காரணம் என்னவென்றால்,நீரிழிவு நோய் வயதான காலத்தில்தான்வரும்




என்ற அசைக்க முடியாத நம்பிக்கை பலருக்கு இருக்கிறது.

இது பணக்காரர்களுக்கு மட்டுமே வரக் கூடிய நோய் என்ற எண்ணமும் மக்கள் மனதில் வேரூன்றியிருக்கிறது.

உண்மை என்னவென்றால் வயது வித்தியாசமில்லாமல் குழந்தைகளுக்கும் நீரிழிவு நோய் வரும் என்பது தான்.

நம்புவதற்கு கடினமாக இருக்கிறதா?

ஆரோக்கியமாக இருக்கும் உங்கள் குழந்தை திடீரென உடல் மெலிய ஆரம்பித்திருக்கிறானா?எலும்பு எலும்பாக இருப்பதாகச் சொல்கிறார்களே அப்படியிருக்கிறானா?

அவனால் இயல்பான வேலைகளைச் செய்ய முடியாமல் சோர்ந்து போகிறானா? அதிகமான தண்ணீர் தாகம், அளவுக்கு அதிகமாக சிறுநீர் கழித்தல், அளவுக்கு அதிகமான பசி, அதிகமாக சாப்பிட்டாலும் உடல் எடை குறைவு, கண் பார்வை மங்குதல் போன்றவற்றால் பாதிக்கப்பட்டிருக்கிறானா?

ஊட்டச்சத்து குறைபாடு என்றோ, பில்லி சூனியத்தால் வந்த வினைகள் என்றோ நினைக்கிறீர்களா?

என்னனென்ன சிகிச்சை செய்தாலும்சரியாகவில்லையா?

குழந்தைக்கு நீரிழிவு நோய் இருக்கிறதா என்பதை ஆராய்ந்து பார்த்துக் கொள்ளுங்கள்.

பிறவியிலிருந்தே வரக் கூடிய நீரிழிவு நோயை ஜுவைனல் டயபிடிஸ் என்பார்கள். இது இன்சுலின் சார்ந்த நீரிழிவு நோய் அல்லது டைப்-1 எனப்படுகிறது. இதைப் பற்றி தெரிந்து கொள்ளுங்கள்.

**1.இன்சுலின் சார்ந்த நிலை(டைப் 1)**

சிறுவர்கள் மற்றும் இள வயதினருக்கு வரும் நீரிழிவு நோயே டைப்-1 வகை.


இந்த நோய்க்கான அறிகுறிகள் திடீரென தோன்றும் .

பரிசோதனைகளை மேற்கொண்டு இந்தப் பிரச்சினை இருப்பதைத் தெரிவித்தால் நோயாளியும் அவருடைய பெற்றோரும் அதிர்ச்சிக்குள்ளாகி விடுவார்கள்.

பெரியவர்களுக்கு வரும் நீரிழிவு நோய்க்கும், சிறுவர்களுக்கு வரும் ளநீரிழிவு நோய்க்கும் வித்தியாசம் உண்டு.


கணையத்திலுள்ள இன்சுலின் சுரக்கும் பாகங்கள் ஏதோ ஒரு காரணத்தால் அழிக்கப்படுவதால் உடலுக்குத் தேவையான இன்சுலினை உடலால் உற்பத்தி செய்து கொள்ள முடியாத நிலை ஏற்பட்டு இந்தப் பிரச்சினை தோன்றுகிறது.

இதை ஆட்டோ இம்யூன் டிசீஸ் என்றும் சொல்கிறார்கள்.நம் உடம்பில் நோய்க் கிருமிகளை அழிப்பதற்கு நோய் எதிர்ப்பு சக்தி இருக்கிறது. சுற்றுச்சூழல் காரணிகள், பாரம்பரியம் போன்றவற்றில் எதிர்மாறான தாக்கத்தால் நமது உடம்புக்குள் இருக்கும் கணை




யச் சுரப்பியிலுள்ள பீட்டா உடம்புக்குள் இருக்கும் கணையச் சுரப்பியிலுள்ள பீட்டாசெல்களை பாதுகாப்பு அணுக்கள் எதிரியாக நினைத்து சில பல

**01**



காரணங்களால் அழிந்து விடுவதால், உடம்பில் இன்சுலின் சத்து இல்லாமல் போய் விடுகிறது.

அதேபோல, பல காரணங்களால் கணையத்திலுள்ள இன்சுலின் சுரக்கும் பீட்டா செல்களில் கோளாறு ஏற்படுதல் அல்லது கணையத்தில் இன்சுலின் சுரக்கும் பாகங்கள் அழிந்துவிடுவதால் இது தோன்றுகிறது. இதை டைப்-1 வகை நீரிழிவு நோய் எனக் கூறுகிறார்கள்.

பேராசிரியர்
டாக்டர் டி.காமராஜ்,
M.D.,P.G.D.C.G.,D.M.R.,
சென்னை.

நீரிழிவு நோயாளிகளில் சுமார் ஐந்து விழுக்காட்டினர் மட்டுமே இந்நோயினால் பாதிக்கப்படுகிறார்கள்.மனிதன் உயிர் வாழ்வதற்கு இன்சுலின் சத்து குறைந்த அளவிலாவது இருக்க வேண்டும்.


ஆனால் இளவயது நீரிழிவு நோயாளிகளின் இன்சுலின் சுரப்பு முற்றிலுமாக பாதிக்கப்பட்டு உடலால் சீனியை உருவாக்க இயலாத நிலை உண்டாக்கிவிடுவதால், இன்சுலின் மருந்தை ஊசியாகப் போட்டுக் கொண்டால் மட்டுமே அன்றாட வாழ்க்கை நகர முடியும் என்ற அவலநிலை உண்டாக்கிவிடும்.

முதல்வகை நீரிழிவு நோய்க்கு காரணமான பல்வேறு ஜீன்கள் மற்றும் எண்ணற்ற வைரஸ்களை ஆய்வாளர்கள் அடையாளம் கண்டிருக்கிறார்கள். ஆனால் நீரிழிவுநோயை எந்தப் பொருள் குறிப்பாக உருவாக்குகிறது என்ற விடயம் மட்டும் இன்னும் ஆய்வு நிலையிலேயே இருக்கிறது. (தொடரும்)

Health Care
மருத்துவ உலகம்
உங்கள் நலம் உங்கள் கைகளில்

# இரத்த அழுத்த நோய்

இரத்தக் கொதிப்பு நோய் உள்ளவர்களுக்குப் புகைப்பழக்கம் இருந்தாலோ நீரிழிவுநோய் அல்லது இரத்தத்தில் கொழுப்புச் சத்து அதிகமிருந்தாலோ கேட்கவே வேண்டாம். இரத்தக் கொதிப்புடன் இவை சேரும் பொழுது உடலுக்கு ஏற்படக்கூடிய தீங்கு பல மடங்காகும். உலகம் முழுவதும் ஹார்ட்அட்டாக் எனப்படும் மாரடைப்பு நோய்க்கும் எனப்படும் பக்கவாத நோய்க்கும் Stroke மிக முக்கியமான எளிதில் தவிர்க்கக்கூடிய காரணமாக இரத்தக் கொதிப்பு நோய் கருதப்படுகிறது.




***இரத்தக் கொதிப்பு உள்ளவர்கள் கடைப் பிடிக்க வேண்டிய வாழ்க்கைமுறை மாற்றங்கள் என்னென்ன?***

வாழ்க்கைமுறை மாற்றங்கள் மூலம் ஓரளவுக்கு இரத்த அழுத்தத்தைக் குறைக்கலாம். ஆரம்பநிலை நோயாளிகளுக்கு மருந்துகள் இல்லாமல் இத்தகைய வாழ்க்கைமுறை மாற்றங்கள் இரத்த அழுத்தத்தைக் கட்டுப்படுத்த உதவும். இரத்த அழுத்தம் கட்டுக்கடங்காமல் அதிக அளவில் இருப்பவர்களுக்குக்கூட வாழ்க்கை முறை மாற்றங்கள் மேலும் மருந்துகளின் தேவையை ஓரளவு குறைக்கலாம்.

***இரத்தக் கொதிப்பு உள்ளவர்கள் கடைப்பிடிக்க வேண்டிய வாழ்க்கை முறை மாற்றங்கள்***

1. உடல் எடை அதிகமாக இருப்பவர்கள் கண்டிப்பாக உடல் எடையைக் குறைக்க வேண்டும். அதற்கு உணவுக் கட்டுப்பாடும் உடற் பயிற்சியும் முக்கியம்.

2. உணவில் உப்பின் அளவைக் குறைக்க வேண்டும்.

ஊறுகாய் டப்பாவில் அடைக்கப்பட்ட உணவுகள், சீஸ் மற்றும் சிப்ஸ் போன்ற அதிக உப்புள்ள பொருட்களைத் தவிர்க்க வேண்டும்.

3.மதுப்பழக்கத்தை விட வேண்டும்.

4.புகைப்பிடிப்பவர்களும் புகையிலை மெல்லுபவர்களும் இப்பழக்கங்களை விட்டுவிடுங்கள்.


5.உடல் உழைப்பு அதிகமில்லாதவர்கள் நிச்சயமாக ஏதாவது ஓர் உடற்பயிற்சியை ஆரம்பியுங்கள். நடப்பது, மிதமான ஓட்டம், நீந்துவது, படியேறுவது, விளையாடுவது, சைக்கிள் ஓட்டுவது போன்றவை உடலுக்கு நன்மையளிக்கும்.

***இரத்தக் கொதிப்பு நோய்க்கு மருந்துகள் உள்ளனவா?***

இரத்தக் கொதிப்பு நோய்க்கு அருமையான மருந்துகள் உள்ளன. மருந்துகளை ஒருவேளை மட்டும் உட்கொண்டால் போதும்.

***இரத்தக் கொதிப்பு நோய்க்கு மருந்து சாப்பிடுபவர்கள் கவனத்தில் கொள்ள வேண்டியவை என்ன?***

1.இரத்தக் கொதிப்பை மருந்துகளினால் நிச்சயம் கட்டுப்படுத்த முடியும்.



**02**



ஆனால், முழுமையாகக் குணப்படுத்த இயலாது.

எனவே, மருந்துகள் வாழ்நாள் முழுவதும் தேவைப்படும்.

2.மருந்துகளை அதிகாலையில் எழுந்தவுடன் சீக்கிரமாக எடுத்துக் கொள்வது நல்லது.

3.சிலவகையான மருந்துகளை மருத்துவ ஆலோசனையின்றி நாமாகவே திடீரென்று நிறுத்தக்கூடாது.

இதயநோய் நிபுணர்
டாக்டர் எம்.ஜெயராஜா, MD.,DM.,
சூர்யா மருத்துவ மனை, சென்னை-93

4.இரண்டு அல்லது மூன்று மாதத்திற்கு ஒருமுறை மருத்துவக் கண்காணிப்பு தேவைப்படும்.

5.இரத்த அழுத்த நோய்க்கு மருந்து மட்டும் தீர்வாகாது. வாழ்க்கைமுறை மாற்றங்கள் மூலம் மருந்துகளின் அளவை மிகவும் குறைத்துவிட முடியும். மருந்து இல்லாமலேகூட இரத்த அழுத்தத்தைக் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்க முடியும்.

(முற்றும்)

# 1880 அதிபர், ஆசிரியர்களுக்கு தேசிய கௌரவம் வழங்கப்படும்

(கொழும்பு)

இவ்வாண்டு நடைபெறவுள்ள உலக ஆசிரியர் தினக் கொண்டாட்டங்களை முன்னிட்டு தேசிய மட்டத்தில் கல்வி அமைச்சினால் 1880 அதிபர், ஆசிரியர்கள் கௌரவிக்கப்படவுள்ளதாக கல்வி அமைச்சின் செயலாளர் எச்.எம்.குணசேரக அறிவித்துள்ளார்.

நாட்டின் மாணவர் பரம்பரை மீது மிகுந்த கருணையுடனும் அர்ப்பணிப்புடனும் செயற்படும் ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களை இனங்கண்டு அவர்களுக்கு தேசத்தின் கௌரவத்தை செலுத்துவதே இக் கௌரவிப்பின் நோக்கமாகும் என கல்வி அமைச்சின் செயலாளர் குறிப்பிட்டுள்ளார்.

தேசிய மட்டத்தில் 94 கல்வி வலயங்களில் இருந்து 1410 ஆசிரியர்களும் 47 அதிபர்களும் இக்கௌரவத்தை பெறவுள்ளனர். வலய ரீதியாக தலா 15 ஆசிரியர்களும் 05 அதிபர்களும் இதனை பெறுவர்.

இத்தேசிய மட்டத் தெரிவுகளுக்கு முன்னோடியாக பாடசாலை மட்டம், கோட்ட மட்டம், வலயமட்டம், மாவட்ட மட்டத்தில் தெரிவுகள் இடம்பெறவேண்டுமென கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

தேசிய மட்டத்தில் தெரிவு செய்யப்படும் ஆசிரியர், அதிபர்களுக்கு ஒக்டோபர் 06 ஆம் திகதி கொண்டாடப்படும் ஆசிரியர் தின தேசிய வைபவங்களின் போது ஜனாதிபதியினால் விருதுகளும் கௌரவமும் வழங்கப்படுமென கல்வி அமைச்சின் செயலாளர் எச்.எம்.குணசேகர மேலும் தெரிவித்தார். (ந-5)

# கிளிநொச்சியில் கடந்த 2 வாரங்களில் 15 சிறுமிகள் மீது பாலியல் துஷ்பிரயோகம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த இரண்டு வாரத்திற்குள் 15 சிறுமிகள் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாகியுள்ளதாக யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டத்திற்கான பிரதி பொலிஸ் மா அதிபர் என்.டி. தளுவத்த ஞாயிற்றுக்கிழமை தெரிவித்தார்.

நேற்று முன்தினம் இந்த துஷ்பிரயோகங்களின் பின்னணியில் தந்தை, பெரியதந்தை, சிறிய தந்தை, மாமன் என நெருங்கிய உறவினர்கள் இருப்பதாக அவர் குறிப்பிட்டார்.

இதனை தடுப்பதற்காக சிறுவர் துஷ்பிர்யோகம் தொடர்பாக சிறுவர்கள் மத்தியில் விழிப்புணவர்வை ஏற்படுத்துவதுடன் இத்தகையவற்றிலிருந்து சிறுவர்கள் தப்புவது தொடர்பிலும் தெளிவுபடுத்த வேண்டும் என பிரதி பொலிஸ் மா அதிபர் தளுவத்த கூறினார்.

இதற்கு சமூகத்தின் பொறுப்புணர்வு மிகவும் முக்கியமானதாகும். இதற்காக நாம் அனைவரும் கூடிய கவனம் செலுத்த வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (ந-5)

# தனது சகோதரரின் புதல்வியின் மரணச்சடங்கில் சரத் பொன்சேகா கலந்து கொண்டார்

(கொழும்பு)

சிறைத்தண்டனை அனுபவித்து வரும் முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா நேற்று முன்தினம் மாலை மரணச் சடங்கு ஒன்றில் கலந்து கொள்ள அனுமதிக்கப்பட்டிருந்தார். தனது சகோதரரின் புதல்வியின் மரணச் சடங்கிலேயே அவர் கலந்து கொண்டார்.

களனியிலுள்ள அவரது சகோதரரின் வீட்டுக்குச் சென்ற அவர் சுமார் அரைமணி நேரம் அங்கிருந்தார். தனது உறவினர்களைச் சந்தித்து உரையாடுவதற்கும் அவருக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டது. சிறைச்சாலை காவலர்களின் பாதுகாப்புக்கு மேலதிகமாக அவருக்குப் பொலிஸ் பாதுகாப்பும் வழங்கப்பட்டிருந்தது.

அவரது பாரியாரான அனோமா பொன்சேகா மற்றும் மக்கள் விடுதலை முன்னணியைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் உட்பட முக்கியஸ்தர்களும் அங்கு வருகை தந்திருந்தனர்.

மரணச் சடங்கில் கலந்து கொள்வதற்கான அனுமதியை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வழங்கியிருந்தார் என சிறைச்சாலை ஆணையாளர் நாயகம் 'தெரிவித்துள்ளார். (ந-5)

# அரசியல் பேதங்களை மறந்து நாட்டின் அபிவிருத்திக்காக ஒன்றுபட வேண்டும்

## ஐ.தே.க.பிரதித்தலைவர் தெரிவிப்பு

நாட்டின் முன்னேற்றத்திற்காக அரசியல் பேதங்களை மறந்து ஒன்றுபட வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் கரு ஜயசூரிய குறிப்பிடுகின்றார்.

எல்பிட்டியவில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இந்தக் கருத்தினை கூறினார்.

எல்பிட்டிய, தல்கஸ்வல ஹொரங்கல்ல ஸ்ரீ சுதர்சனாராம் விஹாரையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

இலங்கையை மீண்டும் உலகின் சிறந்த நாடாக மாற்ற முடியும் எனவும் தார்மீக இயற்கையானது நாட்டிற்கு அனைத்து வளங்களையும் அளித்துள்ளது என்றும் கரு ஜயசூரிய இதன் போது குறிப்பிட்டார்.

எந்தவொரு சந்தர்ப்பத்திலும் எவரும் நாட்டில் பட்டினியால் இறந்ததில்லை எனக் குறிப்பிட்ட ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் இந்த நாட்டில் விதை, நிலத்தில் விழுந்தவுடன் அவ்விடத்தில் செடி அல்லது மரமொன்று முளைத்து விடும் என்று தெரிவித்தார்.

அந்தளவிற்கு அதிர்ஷ்டகரமான இலங்கையில் பருவ மாற்றங்கள் எதுவும் இல்லை எனவும் அனைத்து விடயங்களும் இந்த நாட்டில் காணப்படுவதாகவும் அவர் கூறினார்.

தேசிய ஒற்றுமையே நாட்டிற்கு மிக அவசியமானதாகும் எனத் தெரிவித்த கரு ஜயசூரிய அரசியல் பேதங்களை மறந்து நாட்டின் அபிவிருத்திக்காக அனைவரும் ஒன்றுபட வேண்டும் என வலியுறுத்தினார்.

அத்துடன் நாட்டின் சந்ததியினருக்கு சிறந்த எதிர்காலத்தை உறுவாக்கிக் கொடுக்க வேண்டும் என அவர் மேலும் குறிப்பிட்டார். (ஸ்ரீ-2)

# சரத் என் சில்வாவிற்கு ஜனகபண்டார சவால்

(கொழும்பு)

முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என் சில்வாவிற்கு ஆளும் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் ஜனக பண்டார சவால் விடுத்துள்ளார்.

சரத் பொன்சேகாவிற்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் பொய்யானவை என்பதனை பாராளுமன்றத் தெரிவுக் குழுவில் முடிந்தால் நிரூபிக்க வேண்டுமென அவர் சவால் விடுத்துள்ளார்.

பிரதம நீதியரசராக பதவி வகித்த காலத்தில் சரத் என் சில்வா அதிகார துஷ்பிரயோகத்தில் ஈடுபட்டதாகவும் தம் போன்ற நீதிவான்களுக்கு கட்டாய ஓய்வு வழங்கியதாகவும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

ஓய்வு பெற்றவர்களாக இருந்தாலும் பாராளுமன்றத் தெரிவுக்குழு முன்னிலையில் ஆஜராக தமது பக்க நியாயங்களை முன்வைக்க முடியும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். முன்னாள் பிரதம நீதியரசரின் நடவடிக்கைகளினால் நீதிமன்றக் கட்டமைப்பின் மீதான மக்களின் நம்பிக்கை வலுவிழந்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ-2)




★ 1574-குருராம்தாஸ் நான்காவது சீக்கிய குருவாகினார்.

★ 1791-இங்கிலாந்தின் பண்டோரா என்ற கடற்படைக் கப்பல் அவுஸ்திரேலியாவில் மூழ்கியதில் 4 கைதிகள் உட்பட 35 பேர் கொல்லப்பட்டனர்.

★ 1813-பிரெஞ்சுப் படைகள் ஆஸ்திரியா- புருசியா- ரஷ்யக் கூட்டுப் படைகளினால் தோற்கடிக்கப்பட்டன.

★ 1813-அமெரிக்கப் பழங்குடி கிறீக் இனத்தவர் அலபாமாவில் ஆங்கிலக் குடியேறிகள் நூற்றுக்கணக்கானோரைக் கொன்றனர்.

★ 1835-அவுஸ்திரேலியாவில் மெல்பேர்ன் நகரம் அமைக்கப்பட்டது.

★ 1897-மடகஸ்காரில் அம்பிக்கி நகரை பிரான்ஸ் கைப்பற்றியது.

★ 1918-விளாடிமிர் லெனின் ஃபான்ய கப்லான் என்பவனால் சுடப்பட்டு படுகாயம் அடைந்தார்.

★ 1941-இரண்டாம் உலகப் போர்: லெனின் கிராட் மீதான தாக்குதல் ஆரம்பமாகிற்று.

★ 1945-பிரித்தானியரிடம் இருந்து ஹொங்கொங்கை ஜப்பான் விடுவித்தது.

★ 1984-டிஸ்கவரி விண்ணோடம் தனது முதலாவது பயணத்தை ஆரம்பித்தது.

★ 1990-தத்தர்ஸ்தான் ரஷ்ய சோவியத் சோசலிசக் குடியரசிடம் இருந்து விடுதலையை அறிவித்தது.

★ 1991-அசர்பைஜான் சோவியத் ஒன்றியத்திடம் இருந்து விடுதலையை அறிவித்தது.

★ 1999-கிழக்குத் தீமோர் மக்கள் விடுதலைக்கு ஆதரவாக வாக்களித்தனர்.

**பிறப்புக்கள்**

★ 1748-ஜாக் லூயிஸ் டேவிட், பிரெஞ்சு ஓவியர் (இ.1825)

★ 1871-எர்ணஸ்ட் ரதர் ஃவோர்டு, நியூசிலாந்து அணு இயற்பியல் அறிஞர் (இ.1937)

★ 1875-சுவாமி ஞானப்பிரகாசர், ஈழத்தின் தமிழறிஞர், பன்மொழிப் புலவர் (இ.1947)

★ 1913-எஸ். தொண்டமான், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் ஸ்தாபகர் (இ.1999)

★ 1930-வாரன் பபெட், அமெரிக்கத் தொழிலதிபர்

★ 1980-ரிச்சா பலோட், இந்திய திரைப்பட நடிகை

★ 1980-சுப்ரமணியம் பத்ரிநாத், இந்தியக் கிரிக்கெட் வீரர்

**இறப்புக்கள்**

★ 1928-வில்ஹெம் வியென், ஜேர்மனியின் இயற்பியலாளர், நோபல் பரிசு பெற்றவர் (பி.1864)

★ 1940-ஜெ.ஜெ.தாம்சன், ஆங்கிலேய இயற்பியலாளர், நோபல் பரிசு பெற்றவர் (பி.1856)

★ 1957-என்.எஸ்.கிருஷ்ணன், நகைச்சுவை நடிகர், பாடகர் (பி.1908)

★ 1995-எஸ்.எஸ். கணேசபிள்ளை, ஈழத்து வானொலி, மேடை நடிகர் (பி.1937)


★ 2006-நகிப் மஹ்ஃபூஸ், நோபல் பரிசு பெற்ற எகிப்தியப் புதின எழுத்தாளர் (பி.1911)

★ 2008-கே.கே.பிர்லா, இந்தியத் தொழிலதிபர் (பி.1918)

**சிறப்பு நாள்**

★ அனைத்துலக காணாமற் போனோர் தினம்.

# நவீன எண் சோதிடம்



## தேசபக்தி மிகவும் கொண்டவர்கள்

32

## உடல் எண் 4 உயிர் எண் 3

4,13,22,31 போன்ற தேதியில் பிறந்து, பிறந்த தேதி,மாதம், வருடம் ஆகிய மூன்றையும், கூட்டி வருகின்ற கூட்டு எண்ணாகிய உயிர் எண் 3 வருமேயானால் ராகு, குரு ஆதிக்கத்தில் பிறந்தவர்களாவர். பொதுஜனங்களின் உபகாரியான இவர்கள், அறிவாலும் ஆற்றல் மிக்க செயலாலும் உயர்ந்த இடத்தை வகிப்பர்.

சொன்ன வாக்குறுதியை நிறைவேற்றப்பாடுபடுவர். இதனால் மற்றவர்கள் இவரை மதிப்பர். தான் கண்ட காட்சிகளை விளக்கிக் கூறுவதில் கைதேர்ந்தவர்கள். தன்னால் முடிந்த உதவிகளைப் பிறருக்குச் செய்வர். தன்னுடன் இருக்கும் நண்பர்கள் தவறு செய்துவிட்டால் உடனே கடுமையாகக் கண்டிப்பர். இவர்களுக்கு ஆரம்ப வாழ்க்கை போராட்டமாக இருந்தாலும், படிப்படியாக முன்னேற்றம் உண்டாகும். வாகனம், தொழில், உத்தியோகம், நல்ல குடும்பம், நல்ல செல்வம் போன்ற பாக்கியம் கிடைக்கும். ஆனால் பெயர் பொருத்தமாக அமையாவிட்டால், சில இடர்பாடுகள் வருவதோடு,கஷ்டமான சூழ்நிலை அமையும்.

பொருத்தமானதாக அமைந்துவிட்டால், தான் வாழும் வாழ்க்கையும், தான் வகிக்கும் பதவி

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
|---|---|---|---|---|---|---|---|
| A | B | C | D | E | U | O | F |
| I | K | G | M | H | V | Z | P |
| J | R | L | T | N | W | | |
| Q | | S | | X | | | |
| Y | | | | | | | |

யும் செய்யும் தொழிலும், படிப்படியாக முன்னேற்றமடையும். பிறருக்குப் போதிக்கும் ஆற்றல் பெற்ற இவர்கள் எப்பொழுதும் எதையாவது செய்து கொண்டிருப்பர்.

பார்ப்பதற்கு ஓரளவு உயரமாகவும், அலைபோன்ற முடியும் கொண்ட இவர்கள் தன் உடல் நிலையைப் பேணிக்காத்துக் கொள்வர். சிறு கோளாறு வந்தால் கூட அதைக் கவனித்து சரி செய்து கொள்வர். நீண்ட அழகான புருவ அமைப்பும் கவர்ச்சியான கண்களும் அழகான பல்வரிசையும் கொண்ட இவர்கள் சிரிக்கின்ற போது முன் பற்கள் இரண்டும் பெரிதாகத் தெரியும். மெழுகி விட்டாற் போன்ற சதைப்பற்றும் கொண்ட இவர்கள் எப்பொழுதும் சுறுசுறுப்பாக இருப்பதால் உடல் உஷ்ணமாகி தலைமுடி உதிர ஆரம்பிக்கும். சிலருக்கு வழுக்கை விழும்.

ஒரு காரியத்தில் இறங்கும் போது சிந்தனை செய்து செயற்படுவர். அமைதியாக வாழ ஆசைப்படும் இவர்கள் தன் தகுதிக்கு மீறிய வண்ணம் நடக்கமாட்டார்கள். அரசாங்க உத்தியோகத்தில் இருப்பவர்கள் தனக்கு மேலுள்ள அதிகாரிகளுக்கு மரியாதை கொடுத்து நடப்பதாலும் அவர்கள் கூறும் வேலைகளை செவ்வனவே செய்து முடிப்பதாலும். விரைவில் உயர்ந்த நிலையை அடைவர். அப்படி உயர்ந்த நிலையை அடைய முடியவில்லையென்றால் பெயர் பொருத்தமானதாக அமைய வில்லை என்று கருத வேண்டும்.

இந்த ஆதிக்கத்தில் பிறந்த பலர் ஊக்கமான உழைப்பால் உயர்ந்த நிலையை அடைவதோடு மட்டுமல்லாமல் பலரை உயர்த்தும் மனிதராகவும் விளங்குகின்றனர். சிலர் அரசியலிலும் பலர் தொழிலிலும் இன்னும் சிலர் உத்தியோகத்தில் இருந்தாலும் தன்னால் முடிந்தவரை பிறருக்கு உபகாரம் செய்யும் மனப்பான்மை கொண்டு விளங்குகின்றனர். தேச பக்தி கொண்ட இவர்கள் தன் நாடு வளர வேண்டும் சமுதாயம் சீர்திருந்தி உயர வேண்டும் என்ற எண்ணத்தோடு உழைக்கும் குணத்தினர். இவர்களில் பலர் தொழில் செய்து உயர்ந்த நிலையை அடைகின்றனர். ஆனால், பெயர் பொருத்தமின்றி இருப்பவர்கள் கஷ்டத்திற்கு உள்ளாகின்றனர்.

**தொழில்**

மருந்து சம்பந்தமான வியாபாரம், கடைகள், நான்கு கால் பொருட்கள், இரும்பு, வாகனம், சாப்பாட்டுப் பொருள் போன்றவற்றால் இலாபம் கிடைக்கும்.

**நோய்**

இந்த எண்ணிக்கைக்காரர்களுக்கு தோல்வியாதி, அரிப்பு, உஷ்ணம் சம்பந்தமான அனைத்து வியாதிகளும், மூட்டுவலி, வாயுக் கோளாறு போன்றவையும் வந்து நீங்கும்.

**பெயர் அமைக்கும் முறை**

ராகு, குரு ஆதிக்கம் கொண்ட இவர்களுக்கு சூரிய ஆதிக்கமான 10,19,37,46,64,72 போன்ற எண்களில் பெயரை அமைத்துக் கொள்வது சிறப்பாகும்.

**பின்பற்ற வேண்டியவை**

யோகமான எண்-1,3

யோகமான தேதிகள்-1, 10, 19, 28, 3, 12, 21, 30

யோகமான மோதிரக்கல்-கோமேதகம், வெளிர்நீலக்கல்


யோகமான நிறம்-வெளிர் நீலம், மஞ்சள், கத்திரிப்பூக்கலர், ரோஸ், ஒரேஞ்

ஆகாதநிறம்-கறுப்பு, சிவப்பு, பச்சை

ஆகாத தேதிகள்-8,17,26, 6,15,24

குறிப்பு;- ஆனால், 8,17,26 எதிர்பாராத நன்மை அளிக்கும்.

**எண் கணித நிபுணர்**
**கலாநிதி ஆர்.ஐ.துரைமுருகர் D.LIT**




## பெயர் எண்களின் பலன்

**105 எண் பலன்**

இந்த எண்ணை வியாபார விலாசமாக வைத்தாலும், பெயராக கொண்டாலும் ஏராளமான சொத்துக்களும், செல்வமும் சேர்க்கும் புத்திசாலியாவார். தொழில் நாளுக்கு நாள் விருத்தியாகும். புகழ் நான்கு திசையிலும் பரவும். ஆடம்பரமான வாழ்க்கை அமையும். ஆனால் 3,12,21,30 போன்ற தேதியில் பிறந்தவர்கள் இந்த எண்ணை பெயராகவோ, வியாபார விலாசமாகவோ பயன் படுத்த வேண்டும்.

**106 எண் பலன்**

இந்த எண்ணைப் பெயராகக் கொண்டால் ஆரம்ப வாழ்க்கையில் சில வெற்றியும், பின் பல தோல்வியும் வந்து சேரும். தொழிலாலும், குடும்பத்தாலும் மனம் கலங்குவர். ஆனால் 2,11, 20,29 தேதியில் பிறந்தவர்களுக்கு மட்டும் இந்த எண் ஓரளவு



நன்மையளிக்கும். மற்ற எண்ணிக்கைக்காரர்களுக்கு நன்மையளிக்காது என்பதால் இவ் எண் விரும்பத்தக்கதல்ல.

**107 எண் பலன்**

இந்த எண் பெயரில் அமைந்தால் இவர்களுக்கு குடும்ப வாழ்க்கையில் பல்வேறு குழப்பங்கள் ஏற்படும். பொது வாழ்க்கையில் முன்னேற்றமும் பொருளும் புகழும் பதவியும் கிடைக்கும். மன அமைதியின்றித் துன்பப் படுவர். ஆனால், 5,14,23 போன்ற தேதியில் பிறந்தவர்களுக்கு இந்த எண் பூரண நன்மையே அளிக்கும்.

**108 எண் பலன்**

இந்த எண்ணைப் பெயரில் உடையவர்களுக்கு உடல் பலம் மிகும். தன்னம்பிக்கை கொண்ட இவர்கள் வீர தீர செயல்களைச் செய்வர். உலக புகழ் கீர்த்தி உண்டாகும். தூரதேச பயணங்கள் உண்டாகும். பலருக்குத் தலைவனாகும் பாக்கியம் கிடைக்கும். எவரும் செய்ய முடியாத காரியங்களைச்செய்ய வேண்டும் என்று எண்ணுவர். 2,11,20,29; 7,16,25போன்ற தேதியில் பிறந்தவர்கள் இந்த எண்ணைப் பெயராக அமைத்துக் கொண்டால் பல்வேறு தோல்விகளைச் சந் திக்க நேரும்.

**109 எண் பலன்**

இந்தஎண் பெயராகவோ வியாபார விலாசமாகவோ வந்தால் தைரியமாக எதையும் செய்து சாதிப்பர். அரசாங்கத்தொடர்பால் முன்னேற்றம் ஏற்படும். எதிர்பாராத யோகத்தைக்கொடுக்கும். ஆனால், இந்த எண்ணின் சத்துரு பேராசைதான். இதனால் ஓரளவு தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு வாழ்ந்தால் நல்ல முன்னேற்றம் அடையலாம்.

(தொடரும்)

# மக்களை பீதிக்குள்ளாக்கும் இந்த மர்ம மனிதர்கள் யார்?

எந்தப் பத்திரிகையைப் பார்த்தாலும் அதில் கிறிஸ் பேய், கிறிஸ் பூதம், மர்மமனிதர் பற்றிய செய்திதான். பத்திரிகைகளில் மட்டும் என்றில்லை. வானொலி, தொலைக்காட்சி, இணையங்களிலும் அதேசெய்திதான்.

நாளாந்தம் காலையில் எழுந்ததும் இன்று எங்கே..? என்று கிறிஸ் பேய்களையோ மர்மமனிதர்களையோ தேடுகின்ற அளவுக்கு மனோநிலை மாறிக் கொண்டிருக்கிறது.

முன்னர் போர் நடந்த காலங்க ளில் கிரிக்கெட் ஸ்கோர் போன்று இழப்புக் கணக்குகளை கேட்டுப் பழகியிருந்தது போல இப்போது கிறிஸ்பேய் பற்றிய செய்திகள்மாற்ற மடைந்து வருகின்றன.

கிறிஸ் பேய் என்பது உண்மையில்லை. அது வெறும் புரளிதான் என்று அரசாங்கம் கூறிக் கொண்டிருந்தாலும், அதையெல்லாம் பலர் காதில் வாங்கிக் கொள்ள தயாராக இல்லை.

முன்னர் போரில் அரசாங்கம் கூறிய இழப்புக் கணக்குகளை மக்கள் எப்படி கணித்தார்களோ அதுபோலவே தான் இந்த விவகாரத்திலும் அரசாங்கத்தின் கூற்றை மக்களில் பலர் நம்பத்தயாராக இல்லை.

மர்மமனிதர்கள் விவகாரத்துக்குத் தீர்வு காணப்படுவதில் அரசாங்கத்தரப்பு உறுதியான நடவடிக்கை எடுக்கவில்லை என்ற

மர்ம மனிதர்கள் என்று கூறப்பட்டு துரத்திச் செல்லப்பட்டவர்களில் பலரும் படை முகாம்களுக்குள்ளேயே அல்லது பொலிஸ் நிலையங்களுக்குள்ளேயோதான் தஞ்சமடைந்துள்ளனர்.

அதைவிட பொது மக்களிடம் மர்ம மனிதர் என்ற சந்தேகத்தில் பிடிபட்டவர் க



இந்த நிலையில் தான் வழக்கம் போல் இதற்கும் புலிச்சாயம் பூசுகின்ற முயற்சிகளும் நடந்து கொண்டிருக்கின்றன.

அரசியல் பின்னணியில் தான் இவையெல்லாம் நடப்பதாகவும் அரசுக்கு எதிராக சதி என்றும் அரசாங்கம் கூறுவதை யாரும் கணக்கில் எடுப்பதாகவே தெரியவில்லை.

முன்னாக இது சில

நிலையில் இருப்பது தமிழர்களும் முஸ்லிம்களுமே அதிகம். பயங்கரவாதம் ஒழிக்கப்பட்டு விட்டது. இனி மக்கள் நிம்மதியாக வாழலாம் என்று கூறிய அரசாங்கத்தினால் மர்ம மனிதர்கள் பற்றிய அச்சத்தில் இருந்து மக்களை விடுவிக்க முடியாது போனதேன்? இது மற்றொரு கேள்வி.

வெறுமனே அப்படி ஒன்றும் இல்லை என்று கூறிக் கொள்வதால் மக்கள் நிம்மதியடையப் போவதில்லை. அதற்காக காலம் கடந்து விட்டது. தமது பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படுவதையே அவர்கள் எதிர்பார்க்கிறார்கள்.

மர்ம மனிதர்கள் விவகாரத்தில் அரச தரப்பு உறுதியான நடவடிக்கை எடுக்காமல் பொது மக்களின் மீது கோபத்தை வெளிப்படுத்துவது மக்களிடத்தில் இருந்து மேலும் மேலும் அந்நியப்படுத்திவிடும்.

தமிழ், முஸ்லிம் மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள நம்பிக்கையீனத்தைக் களைவதற்கு உருப்படியான நகர்வுகளை எடுக்காமல் அரசாங்கம் சப்பை நியாயங்களை கூறுவதாகவே அவர்கள் கருதுகிறார்கள்.

மக்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்குப் பதிலாக பொதுமக்கள் மீது தாக்குதல்கள் நடத்தப்படுவது பிளவுகளை மேலும் வலுப்படுத்தவே செய்கிறது. கிழக்கில் தொடங்கிய இந்த பயங்கரம் மலையகம், புத்தளம் என்று பரவி தற்போது வடக்கே வன்னி, யாழ்ப்பாணத்திலும் கூடப் பரவிவிட்டது.

அவசரகாலச் சட்டத்தை நீடிக்கவே படையினரை நிரந்தரமாக நிலை கொள்ளச் செய்வதற்கே அரசாங்கம் இதனை ஒரு ஆயுதமாக பயப்படுத்துவதாக பரவலான குற்றச்

## நிம்மதியிழந்து நித்திரை கொள்ளாதிருப்பது தமிழர்களும் முஸ்லிம்களுமே!




யாழ். நாவாந்துறையில் மர்ம மனிதன் விவகாரத்தையடுத்து படையினருடனான மோதலின்பின் கைது செய்யப்பட்டவர்கள் சிறைச்சாலை வாகனத்தில் ஏற்றப்படுகின்றனர்.

குற்றச்சாட்டு வலுப்பெற்று வருகிறது.

துட்டகெமுனுவின் வாளுக்காக, அவசரகாலச் சட்டத்தை நீடிப்பதற்காக, பன்றி இறைச்சி சாப்பிடாத பெண்களின் இரத்த பூஜைக்காகத் தான் மர்மமனிதர்கள் அலைவதாக பரவும் கதைகளை அடியோடு நிராகரித்துள்ளார் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ.

அத்துடன் விடுதலைப் புலிகளையே தோற்கடித்து இராணுவத்தினால் கிறிஸ் மனிதன் விவகாரத்தைக் கையாள்வது ஒன்றும் சிரமமான காரியமில்லை என்றும் ஆனாலும் பொறுமையுடன் இருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

கிறிஸ் மனிதன் விவகாரம் இந்தளவுக்கு பூதாகார வடிவெடுத்து மக்களை அச்சத்தில் உறைய வைத்துள்ள நிலையில் இராணுவத்தினால் அடக்க முடியும். ஆனால் பொறுமையாக இருக்கிறோம் என்றால் அர்த்தம் என்ன?

அரச படைகளுக்கும் இந்த விவகாரத்துக்கும் எந்த தொடர்பும் இல்லையென்று கூறப்படும் வாதங்களையெல்லாம் பொது மக்கள் பலர் நம்ப மறுக்கின்றார்கள். அதற்குப் பல காரணங்கள் உள்ளன.

ளில் பலரும் கூட பொலிஸாராக இருந் துள்ளனர்.

இவர்கள் மர்ம மனிதர்கள் தானா அல்லது வெறும் சந்தேகமாக என்பதெல்லாம் ஒரு புறத்தில் இருக்கலாம். ஆனால் பொதுமக்களிடம் சிக்கியவர்கள் அத்தகையவர்கள் அல்ல என்பதைபடைத்தரப்போ அல்லது பொலிஸாரோ மக்கள் நம்பும் வகையில் நிரூபிக்கவில்லை.

இன்னொரு பக்கத்தில் மர்ம மனிதர்கள் எனக்கூறப்படுபவர்களின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த அரசாங்கம் இன்றுவரை ஆக்கபூர்வமான எதையும் செய்யவில்லை. மர்ம மனிதர்களைத் துரத்திச் சென்ற பொது மக்களே படையினராலும் பொலிஸாராலும் தாக்கப்பட்டுள்ளனர்.

அரச படைகள் மீது பொதுமக்கள் நம்பிக்கையை இழப்பதற்கு இவை போன்ற வலுவான பல காரணங்கள் உள்ளன. போருக்குப் பின்னர் அரசாங்கம் நல்லிணக்கத்தை கட்டியெழுப்புவதாக கூறிக் கொண்டிருந்தாலும் இப்போது அது பின் நோக்கிப் பயணிப்பதையே காண முடிகிறது.

இரண்டு ஆண்டுகளில் அரச படைகளும் பொலிஸாரும் மக்கள் மத்தியில் கட்டியெழுப்பிய கொஞ்சநஞ்ச நம்பிக்கையைக் கூட மர்ம மனிதன் விவகாரம் சுத்தமாக துடைத்து விட்டதென்றே கூறலாம்.

பாலி

யல் நோயாளி களின் வேலை என்று கூறிய அரசாங்கம் இப்போது இதன்பின்னணியில் அரசியல் சதி உள்ளதென்று கூறுகின்றது.

இதைவிட அரசாங்கத் தரப்பிலுள்ள அமைச்சர்கள் பலரும் இப்போது ஊடகங்களையும் இதற்குப் பொறுப்புக் கூற வேண்டும் என்று குற்றம் சாட்டுகின்றார்கள்.

இது நவீனயுகம் என்ப்தையும் ஒரே நொடியில் எல்லாம் எல்லா இடங்களுக்கும் பரவி விடும் என்பதையும் மறந்து போய் ஊடகங்கள் மீது குற்றம் சாட்டப்படுகிறது.

இலங்கையின் சனத்தொகையை விடவும் தொலைபேசி பாவனையாளர் எண்ணிக்கை அதிகம் என்கிறது அரசாங்க புள்ளி விபரம் ஒன்று. இத்தகைய யுகத்தில் தகவல்கள் பற்றிப் பரவி விடுகின்றன.

மர்ம மனிதன் விவகாரம் ஒரே நெடியில் உலகெங்கும் சென்று விடுகிறது. இத்தகைய நிலையில் ஊடகங்களைப் பொறுப்புக் கூறச் சொல்வது பொறுப்புவாய்ந்த அமைச்சர்களுக்கு அழகல்ல. அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் ஊடகங்கள் அடக்கி வாசிக்க வேண்டும். எது நடந்தாலும் கண்டு கொள்ளக்கூடாது என்பதே அதன் கொள்கையாக உள்ளது. மர்ம மனிதன் விவகாரத்தில் நிறையவே மர்மங்கள் இருப்பதை யாரும் மறைக்க முடியாது.

இந்த விவகாரத்தினால் பாதிக்கப்பட்டு நிம்மதியிழந்து நித்திரை கொள்ள முடியாத

சாட்டுஎழுந்தது.

ஆனால் அரசாங்கமோ அவரசரகாலச் சட்டத்தை நீடிப்பதற்கெல்லாம் இது தேவையில்லை. தாம் நினைத்தால் எதையும் செய்வோம் என்று கூறுகிறது. ஆனாலும் இது போன்ற பேச்சுக்களின் மூலம் மக்களிடத்தில் நம்பிக்கை உருவாக்கப்படவில்லை.

நிலைமைகள் எல்லை கடந்து சென்றுவிட்ட நிலையில் பயங்கரவாதம், புலிகள் என்றெல்லாம் இப்போது காரணங்கள் முளைக்கத் தொடங்கியுள்ளன. இந்த விவகாரம் எப்படி முளைத்தது-எப்படி வளர்ந்தது என்றெல்லாம் ஆராய்வ தைவிட மக்களிடத்தில் ஏற்பட்டுள்ள பதற்றத் தையும் பீதியையும் தணிக்க வேண்டியதே அரசின் உடனடிப் பொறுப்பு.

இதன் பின்னணியில் யார் இருந்தாலும் சரி வெறும் மனப்பிரமையாகவோ மாயையாகவோ இருந்தாலும் சரி, அல்லது திட்டமிட்ட சதியாக் இருந்தாலும் சரி இதன் விளைவுகள் நிச்சயம் அரசாங்கத்தை பாதிப்பதாகவே அமையும்.

இப்போது இல்லாவிட்டாலும் என்றோ ஒருநாள் இந்த விவகாரம் அரசாங்கத்துக்கு ஒரு கரும்புள்ளியாகவே அமையப் போகிறது. இதேநிலை நீடிக்குமானால் தமிழ், முஸ்லிம் மக்களில் ஒரு பகுதியினரிடம் ஏற்படுத்தியிருந்த நம்பிக்கையைக் கூட அரசாங்கம் தொலைத்து விடும் நிலை ஏற்படலாம். வரப் போகும் மாகாணசபைத் தேர்தலில் இதன் தாக்கத்தை அரசாங்கம் உணரவும் கூடும்.

நன்றி-:தமிழ்மிரர்

# அமெரிக்காவில் சூறாவளியில் உயிரிழந்தோர் 21 ஆக உயர்வு

(வோஷிங்கடன்)

அமெரிக்காவில் இடம்பெற்ற சூறாவளியில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 21 ஆக உயர்வடைந்துள்ளது.

கிரேன் புயற்காற்றினால் அமெரிக்காவின் நியூயோர்க் உள்ளிட்ட சில மாநிலங்கள் பாரிய பாதிப்புக்களை எதிர்நோக்கியுள்ளது.

புயற்காற்று நியூயோர்க் நகரை கடந்த போதிலும் ஆபத்து இன்னமும் குறையவில்லை என ஜனாதிபதி பராக் ஒபாமா எச்சரிக்கை விடுத்துள்ளார்.

கிரேன் புயல் சீற்றத்தால் நியூயோர்க்கைச் சேர்ந்த 3 இலட்சம் பேர் இடம்பெயர்ந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அமெரிக்காவின் கிழக்கு கரையோரப் பகுதியைச் சேர்ந்த 65 மில்லியன் மக்களுக்கு பாதிப்பு ஏற்படுத்தியுள்ளதாகவும் தனியொரு புயற்காற்றினால் அமெரிக்காவில் அதிகளவு மக்கள் பாதிக்கப்பட்ட முதல் சந்தர்ப்பமாக இதனைக் கருத முடியும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

நியூஜேர்சியை சேர்ந்த மூன்று மில்லியன் மக்கள் மின்சாரமின்றி பாதிப்புக்களை எதிர்நோக்கியதாக குறிப்பிடப்படுகின்றது.


அமெரிக்காவின் பல மாநிலங்களில் தொடர்ந்து வெள்ள மற்றும் மின்சாரத் துண்டிப்பு ஏற்படக்கூடிய அனர்த்தம் நிலவி வருவதாக அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா எச்சரிக்கை விடுத்துள்ளார்.

வளிமண்டலவியல் திணைக்கள அதிகாரிகளின் அறிவுறுத்தல்களுக்கு இணங்க மக்கள் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

இதேவேளை அமெரிக்காவில் மையம் கொண்டிருந்த புயல் கனடா நோக்கி நகர்ந்துள்ளதாக வானிலை ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். (ஸ்ரீ-2)

# நேபாளத்தின் பிரதமராக மாவோயிஸ்ட் தலைவர் பாபுராம் பட்டாராய் தெரிவு

(காத்மண்டு)



நேபாளத்தில் 10 ஆண்டு போராட்டத்துக்குப் பின்னர் கடந்த 2006 ஆண்டு மன்னர் ஆட்சி முடிவுக்கு வந்தது. அதை தொடர்ந்து 2008 ஆண்டு பாராளுமன்றத்துக்கு தேர்தல் நடந்து மக்களாட்சி ஏற்பட்டது.

ஆனால் தேர்தலில் எந்த கட்சிக்கும் பெரும்பான்மை கிடைக்காததால் மாவோயிஸ்ட்டுகள் தலைமையிலான கூட்டணி ஆட்சி ஏற்பட்டது.

அதனால் அரசியலில் ஸ்திரத்தன்மை இல்லாததால் நிலையான பிரதமரை தேர்ந்தெடுக்க முடியவில்லை. இந்த நிலையில் கடந்த 7 மாதங்களுக்கு முன்பு ஜலாநாத் கனால் கடந்த பெப்ரவரி மாதம் 3 ஆவது பிரதமராக பவி ஏற்றார்.




7 மாதங்களுக்கு பின்னர் சமீபத்தில் அவரும் பதவி விலகினார். அதைத் தொடர்ந்து புதிய பிரதமர் தேர்வு நடந்தது. அதில் மாவோயிஸ்ட் கட்சியின் துணை தலைவர் பாபுராம் பட்டாராய் (வயது57) போட்டியிட்டார். அவரை எதிர்த்து முன்னாள் துணை பிரதமர் ராம் சந்திர பாபு டெல் களம் இறங்கினார்.

இவர் நேபாளி காங்கிரஸை சேர்ந்தவர். இந்த நிலையில் நேற்று முன்தினம் புதிய பதிவு நடந்தது.

574 எம்.பி.க்கள் வாக்குப் போட்டனர். அதில் 340 வாக்குகள் பெற்று பாபுராம் பட்டாராய் வெற்றி பெற்றார். அதைத் தொடர்ந்து அவர் பிரதமராகக் தேர்ந்தெடுக்கப்பட்டதாக சபாநாயகர் சுபாஷ் சந்திர மெம்வாஸ் பாராளுமன்றத்தில் அறிவித்தார்.


பட்டாராய் சிறந்த கல்வியாளர் ஆவார். இவர் டில்லியில் உள்ள ஜவகர்லால் நேரு பல்கலைக்கழகத்தில் பயின்ற எ.பி.எச்.டி. பட்டம் பெற்றுள்ளார்.

மக்களாட்சி ஏற்பட்ட 3 ஆண்டுகளில் 4 ஆவது பிரதமராக இவர் தேர்ந்தெக்கப்பட்டுள்ளார்.

மாவோயிஸ்டுக்களில் இவர் 2 ஆவது பிரதமராவர். 2008-2009 ஆம் ஆண்டில் புஷ்யகமல் தலாக பிரசன்டா முதல் பிரதமராக பதவி வகித்தார். (ஸ்ரீ-4)

# முஷாரப்பின் சொத்துக்களை பறிமுதல் செய்ய உத்தரவு

(இஸ்லாமாபாத்)



பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் பெனாசீர் பூட்டோவின் கொலை வழக்கில் நேரில் ஆஜராவதற்கு முன்னாள் ஜனாதிபதி பர்வேஸ் முஷாரப் தொடர்ந்து மறுத்து வருவதால் அவரது சொத்துக்களைப் பறிமுதல் செய்யும்படி அதிகாரிகளுக்கு அந்நாட்டு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

பெனாசீர் கொலை வழக்கில் நேரில் ஆஜராகுவதற்கு முஷாரப் மறுத்து வருகிறார். அதனால் அவரை தேடப்படும் குற்றவாளியாக லாகூரில் இயங்கி வரும் பயங்கரவாதத் தடுப்பு நீதிமன்றம் ஏற்கனவே அறிவித்தது. பாகிஸ்தான் புலனாய்வு முகவர் அவரது சொத்துக்களைப் பறிமுதல் செய்யும் படி ஏற்கனவே நீதிமன்றில் கோரிக்கை விடுத்திருந்தது. நேற்று முன்தினம் நடந்த விசாரணையில்,

முஷாரப் விசாரணைக்கு ஒத்துழைப்பு அளிக்க மறுத்து வருவது குறித்த இறுதிக்கட்ட அறிக்கையை எப்.ஐ.ஏ நீதிமன்றில் சமர்ப்பித்து இதையடுத்து முஷாரப்பின் சொத்துக்கள் பறிமுதல் செய்யப்பட்டு அவரது வங்கிக் கணக்குகள் அனைத்தும் முடக்கப்பட வேண்டும் என நீதிமன்றம் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டது. (ஸ்ரீ-4)

# சிரியாவுடன் பேச்சுவார்த்தை நடத்த சிறப்புத் தூதரை அனுப்பியது ரஷ்யா

(டமாஸ்கஸ்)

சிரியாவில் ஏற்பட்டுள்ள பிரச்சினையைப் பேசித் தீர்ப்பதற்காக ரஷ்யா தனது சிறப்புத் தூதுவர் ஒருவரை நேற்று அந்நாட்டிற்கு அனுப்பி வைத்துள்ளது.

அரபு லீக்கின் பொதுச் செயலரும் பேச்சுவார்த்தைக்காக விரைவில் சிரியா செல்ல உள்ளார்.

சிரியாவில் ஜனாதிபதி அல் அசாத்திற்கு எதிரான போராட்டம் தீவிரம் அடைந்துள்ளது. தலைநகர் டமாஸ்கஸின் தென்பகுதியில் உள்ள கபார்சூசே மாவட்டத்தில் ஒரு மசூதியை இராணுவம் முற்றுகையிட்டதை எதிர்த்து கடந்த 27 ஆம் திகதி அந்த மசூதியிலும் மாவட்டத்தின் பிற பகுதிகளிலும் பெருமளவில் மக்கள் பங்கேற்ற ஆர்ப்பாட்டங்கள் நடந்தன.

இந்த ஆர்ப்பாட்டங்களின் போது இராணுவம் நடத்திய தடியடியில் ஒருவர் பலியானார்.பலர் காயம் அடைந்தனர். டமாஸ்கசின் மையப் பகுதி வழக்கம் போல் அமைதியாக இருக்கிறது. அதேநேரம் நாட்டின் வடபகுதியில் உள்ள டைர்அல் ஜோர் நகரைச் சுற்றியுள்ள கிராமங்களில் இராணுவம் தொடர்ந்து பீரங்கித் தாக்குதல் நடத்தி வருகிறது.

வீடு வீடாக தேடுதல் வேட்டை நடத்தப்பட்டு பலர் கைது செய்யப்பட்டு வருகின்றனர். இந்நிலையில் எகிப்து தலைநகர் கெய்ரோவில் நேற்று முன்தினம் அரபு லீக் அமைப்பின் வெளியுறவு அமைச்சர்கள் அவசரமாகக் கூடி லிபியா மற்றும் சிரியா விவகாரங்கள் குறித்து ஆலோசித்தனர். ஆலோசனை முடிவில் சிரிய ஜனாதிபதியுடன் பேச்சுவார்த்தை நடத்த அரபு லீக் பொதுச் செயலாளர் நபில் அல் அரபியை சிரியா அனுப்ப தீர்மானிக்கப்பட்டது.

சிரியாவின் அண்டை நாடும் நட்பு நாடுமான துருக்கி சிரியா மீதான தனது நம்பிக்கையை இழந்து விட்டதாக தெரிவித்துள்ளது. அதேபோல் ஈரானும் சிரியா தனது மக்களின் கோரிக்கைகளை செவிமடுக்க வேண்டும் எனக் கேட்டுக் கொண்டுள்ளது.

ஐ.நா.வில் சிரியா மீதான மேலும் பல பொருளாதாரத் தடைகளை விதிக்க முட்டுக்கட்டை போட்டுவரும் ரஷ்யா நேற்று தனது சிறப்புத் தூதர் ஒருவரை சிரியாவுக்கு அனுப்பி வைத்துள்ளது. (ஸ்ரீ-4)

# கொண்டலீசா மீது கடாபி காதல் புகைப்பட அல்பம் சிக்கியது

லிபிய ஜனாதிபதி முவம்மர் கடாபியின் வீட்டுக்குள் புகுந்து நடத்தப்பட்ட அதிரடி சோதனையின் போது சிக்கிய அல்பம் அனைவரையும் அதிர வைத்துள்ளது. காரணம் அந்த அல்பத்தில் அமெரிக்க முன்னாள் வெளியுறவு அமைச்சர் கொண்டலீசாரைஸின் புகைப்படங்களை தொகுத்து வைத்துள்ளார்.

கடாபி மேலும் கொண்டலீசாரைஸ் மீது இவர் காதல் கொண்டிருந்ததையும் அதன் மூலம் அவர் வெளிப்படுத்தியுள்ளார்.

கொண்டலீசாரைஸ் மீது காதல் கொண்டவர்கள் பட்டியலில் மிகப்பெரியது அவர் வெளியுறவுத்துறை அமைச்சராக இருந்த போது அவரைப் பிடித்திருப்பதாக இத்தாலி வெளியுறவு அமைச்சர் மஸிமோ டி அமீலா, இங்கிலாந்து வெளியுறவு அமைச்சர் ஜேக் ஸ்டிரா உள்ளிட்ட பலரும் வெளிப்படையாகவே கூறியிருந்தனர்.

அந்த வரிசையில் கடாபியும் ஒருவராக இருந்திருக்கிறார் என்பது இப்போது தெரிய வந்துள்ளது.

கடாபி ஏற்கனவே 2007 ஆம் ஆண்டே ரைஸ் மீதான காதலை பகிரங்கமாக வெளிப்படுத்தியவர்தான். அந்த ஆண்டில் அவர் அல் ஜசீரா தொலைக் காட்சிக்கு அளித்த பேட்டியில்,

லீஸா, லீஸா, லீஸா நான் அவரை பெரிதும் நேசிக்கிறேன். எனக்குப் பிடித்த அழகுப் பெண் அவர் என்று கூறியிருந்தார்.



அதற்கு அடுத்த ஆண்டே ரைஸ் டிரிபோ லிக்கு விஜயம் செய்து கடாபியை அவரது இல்லத்தில் சந்தித்தார். அப்போது அமெரிக்கா, லிபியா இடையிலான உறவில் இலேசான மாற்றம் தெரிந்த சமயம்.

இது மட்டும் ரைஸ் மீதான கடாபியின் பாசமாக இதுவரை வெளியுலகுக்குத் தெரிந்த ஒன்று. ஆனால் ரைஸின் விதம் விதமான புகைப்படங்களை அல்பம் போட்டு தனது இதயத்தில் புதைந்த காதலை பத்திரமாக பாதுகாத்து வந்துள்ளார் கடாபி என்பது தற்போது தெரிய வந்து அனைவரையும் ஆச்சரியப்பட வைத்துள்ளது.

அந்த அல்பத்தில் விதம் விதமான போஸ்களில் ரைஸ் காணப்படுகிறார். கடாபியுடனான சந்திப்பின் போது எடுக்கப்பட்ட புகைப்படமும் அதில் உள்ளது.

புரட்சிப் படையினர் டிரிபோலியை கைப்பற்றியதைத் தொடர்ந்து கடாபி தலைமறைவாகிவிட்டார். இதையடுத்து அவரது வீட்டை புரட்சிப் படையினர் கைப்பற்றி அங்குலம் அங்குலமாக சோதித்து வருகின்றனர். அப்போது தான் இந்த அல்பம் சிக்கியது எனத் தெரிவிக்கப்படுகின்றது. (ஸ்ரீ-4)

## தூக்குத்தண்டனை கைதிகளுக்கு மருத்துவப் பரிசோதனை

(வேலூர்)

வேலூர் சிறையில் அடைக்கப்பட்டுள்ள தூக்குத் தண்டன் கைதிகளுக்கு மருத்துவப் பரிசோதனை நடைபெற்றது. வேலூர் சிறையில் தனித்தனி சிறைகளில் அடைக்கப்பட்டுள்ள ராஜீவ் கொலையாளிகள் முருகன், சாந்தன், பேரறிவாளன் ஆகியோருக்கு நேற்று முன்தினம் காலை உணவு சாப்பிட்ட பின் சிறை மருத்துவ அதிகாரிகள் மருத்துவப் பரிசோதனை செய்தனர்.

மூன்று மணி நேரம் இந்த மருத்துவப் பரிசோதனை நடந்தது. மூவரும் நலமாக இருப்பதாக மருத்துவர்கள் தெரிவித்தனர். தூக்கு போடப்படும் நபர் உடல் நலத்துடன் இருந்தால் தான் தூக்கில் போட வேண்டு என்ற சிறை விதி இருப்பதால் இந்தப் பரிசோதனை நடத்தப்படுகிறது. 10 மருத்துவ அதிகாரிகள் இந்தப் பரிசோதனையைச் செய்தனர். (ஸ்ரீ-2)


## காஞ்சிபுரத்தில் தீக்குளித்த செங்கொடியின் உடலுக்கு வைகோ, திருமாவளவன் அஞ்சலி

முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி கொலை வழக்கில் தூக்குதண்டனை விதிக்கப்பட்ட பேரறிவாளர், சாந்தன், முருகன் ஆகியோரை தூக்கிலிடக் கூடாது என்று கோரி காஞ்சிபுரம் தாலூகா அலுவலகம் எதிரே செங்கொடி என்ற பெண் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை தீயிட்டு தற்கொலை செய்து கொண்டார்.

மருத்துவமனையில் உள்ள அவரது உடலுக்கு ம.தி.மு.க பொதுச் செயலர் வைகோ, விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் திருமாவளவன் ஆகியோர் அஞ்சலி செலுத்தினர்.

பேறிவாளன், சாந்தன், முருகன் ஆகியோரது தூக்குத் தண்டனையை இரத்துச் செய்ய வேண்டும் என்று அரசியல் கட்சிகள் மற்றும் பல்வேறு அமைப்புக்களின் சார்பில் தமிழகம் எங்கும் பல்வேறு போராட்டங்கள் நடந்து வருகின்றன. இதேபோன்று காஞ்சிபுரத்தில் நடந்த மனிதச் சங்கிலி போராட்டத்தில் மக்கள் மன்றம் அமைப்பின் சார்பில் செங்கொடி பங்கேற்றார். பின்னர் ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணிக்கு காஞ்சிபுரம் தாலுகா அலுவலகம் வந்தார். கைப்பையுடன் வந்த செங்கொடி, பையில் வைத்திருந்த பெற்றோல் கான்களை வெளியே எடுத்து தனது





உடலில் ஊற்றி தீ வைத்துக் கொண்டார்.

காஞ்சிபுரம் மாவட்ட எஸ்.பி.மனோகரன் சடலத்தைப் பார்வையிட்டு விசாரணை நடத்தினார். காஞ்சிபுரம் சிவகாஞ்சி பொலிஸார் உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைத்தனர். நேற்று செங்கொடியின் உடல் பொதுமக்கள் அஞ்சலி செலுத்துவதற்காக காஞ்சிபுரத்தில் பெரியார் தூண் அருகே வைக்கப்படுகிறது. பேறிவாளனின் தாய் அற் புதம்மாள், பழ.நெடுமாறன் உள்ளிட்டோர் அவரது உடலுக்கு அஞ்சலி செலுத்தவுள்ளனர்.

(ஸ்ரீ-4)

## மூவரையும் தூக்கிலிடுவது 12 கோடி தமிழர்களின் உணர்வுகளையும் தூக்கிலிடுவதற்கு சமம்

### சீமான் முழக்கம்



மூன்று பேரையும் தூக்கில் போடுவது 13 கோடி தமிழர்களின் உணர்வுகளையும் தூக்கில் போடுவதற்கு சமம் என நாம் தமிழர் கட்சித் தலைவர் சீமான் தெரிவித்துள்ளார்.

நாம் தமிழர் கட்சி சார்பில் பாளை மார்க்கெட் திடலில் நேற்று முன்தினம் இரவு பொதுக் கூட்டம் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பேறிவாளன், சாந்தன் , முருகன் ஆகியோரின் தூக்குத் தண்டனையை நிறுத்த வேண்டும். இது உலகம் முழுவதும் உள்ள 12 கோடி தமிழர்களின் குரல். 3 பேரையும் தூக்கில் போடுவது 12 கோடி தமிழர்களின் உணர்வுகளையும் தூக்கில் போடுவதற்கு சமம். இலங்கையில் நடந்த இனப்படுகொலையை கண்டித்து உலக நாடுகள் பொருளாதார தடையை விதித்து வருகின்றன.

ஆனால், இந்திய அரசு இதுபற்றி கவலை கொள்ளவில்லை. ராஜபக்ஷவை போர்க் குற்றவாளியாக அறிவிக்க வேண்டும். இலங்கை மீது பொருளாதார தடையை விதிக்க வேண்டும் என சட்டசபையில் தீர்மானம் கொண்டு வந்து உலக தமிழர்களின் நம்பிக்கையை முதல்வர் ஜெயலலிதா பெற்றுள்ளார். இந்த நம்பிக்கையை சீர்குலைப்பதற்கு மத்திய அரசு 3 தமிழர்களின் தூக்குத் தண்டனையை அறிவித்துள்ளது.

தூக்குத் தண்டனை அறிவிக்கப்பட்டு 11 ஆண்டுகளாக கருணை மனுவை கிடப்பில் போட்டுவிட்டு இப்போது 3 பேரின் தூக்குத் தண்டனையை மத்திய அரசு அறிவித்துள்ளது. நாங்கள் அறிவு ஆயுதத்தை எடுத்து போராடி வருகின்றோம். உலகத்திலேயே தூக்குத் தண்டனை வேண்டாம் என்று கூறி வருகிறோம்.

இந்திய அரசு சட்டத்தை தளர்த்தி மரண தண்டனையை இரத்துச் செய்ய வேண்டும். பேறிவாளன், சாந்தன், முருகன் ஆகிய 3 பேரையும் தூக்குத் தண்டனையில் இருந்து காப்பாற்ற வேண்டும். இதற்காக ஜனநாயக வழியில் முழு மூச்சுடன் போராடுவோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் சினிமா இயக்குநர் ஆர்.கே. செல்வமணி, அற்புதம்மாள், பேராசிரியர்கள் தீரன், அறிவாசன சாகுல் அமீது, அய்யநாதன், சட்டத்தரணி தடா சந்திரசேகர் ஆகியோர் உரையாற்றினர். (ஸ்ரீ-4)

## திருச்சியில் தீக்குளிக்க முயற்சித்த மூவர் கைது

ராஜீவ் கொலையில் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டுள்ள சாந்தன், முருகன் மற்றும் பேரறிவாளன் ஆகியோரின தூக்குத் தண்டனையை இரத்துச்செய்யக் கோரி, திருச்சி மாவட்ட செயலாளர் அலுவலகத்தில் புதிய தமிழகம் கட்சியைச் சேர்ந்த 30 இற்கும் மேற்பட்டோர் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

அப்போது அவர்களில் பாலு, புவனா மற்றும் கோபி ஆகியோர் திடீரென பெற் றோல் ஊற்றி தீக்குளிக்க முயன்றனர். இதையடுத்து அவர்கள் மூன்று பேர் உள் ளிட்ட 30 பேரை பொலிஸார் கைது செய்தனர். மாவட்ட ஆட்சியாளர் அலுவலகத்தில் மூன்று பேர் தீக்குளிக்க முயன்ற சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. (ஸ்ரீ-2)

## முருகன், சாந்தன், பேரறிவாளனின் தூக்கு தண்டனையை எதிர்த்து மேன்முறையீடு

### சென்னை உயர்நீதிமன்றில் இன்று விசாரணை

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் பேரறிவாளன், முருகன், சாந்தன் ஆகிய 3 பேரின் கருணை மனுக்களை கடந்த 12 ஆம் திகதி ஜனாதிபதி பிரதீபா பாட்டீல் நிராகரித்தார். இதைத் தொடர்ந்து அவர்கள் மூன்று பேரையும் தூக்கில் போட மத்திய அரசு உத்தரவிட்டது. கடந்த வாரம் இந்த உத்தரவு தமிழக சிறைத்துறையிடம் கொடுக்கப்பட்டது. அதன் பேரில் பேரறிவாளன், முருகன், சாந்தன் மூவரும் செப்டெம்பர் 9 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தூக்கிலிடப்படுவார்கள் என்று சிறை நிர்வாகம் அறிவித்தது.

இதற்கிடையே 3 பேர் உயிரைக் காப்பாற்ற தமிழ்நாடு முழுவதும் பல்வேறு கட்சிகள், அமைப்புக்கள் சார்பில் போராட்டங்கள் நடந்து வருகின்றன. செங்கொடி என்ற இளம் பெண் தீ குளித்து தன் உயிரையே தியாகம் செய்துள்ளார். இந்த போராட்டங்களுக்கிடையே சட்ட ரீதியிலான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

நேற்று முன்தினம் காலை வேலூர் சிறையில் பேரறிவாளன், முருகன், சாந்தன் மூவரையும் தடா சந்திரசேகரின் சிரேஷ்ட சட்டத்தரணியான ராஜீவ்காந்தி சந்தித்தார். அவர் மூவரிடமும் தூக்குத் தண்டனையை இரத்துச் செய்வதற்கான பிரமாணவாக்கு மூலப் பத்திரத்தில் கையெழுத்து பெற்றார்.

நேற்று திங்கட்கிழமை மூவர் சார்பிலும் சென்னை உயர் நீதிமன்றில் பிரமாண வாக்கு மூல மேன்முறையீட்டு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. சட்டத்தரணி சந்திரசேகர் இந்த மனுக்களை தாக்கல் செய்தார். இந்த மனுக்கள் மீது அவசரம் கருதி உடனே விசாரணை நடத்த வேண்டும் என்று சட்டத்தரணி சந்திரசேகர் கேட்டுக் கொண்டார். இதை நீதிபதி பால்.வசந்தகுமார் ஏற்றுக் கொண்டார். இன்று விசாரணை ஆரம்பமாகும் என்று நீதிபதி அறிவித்தார்.

இதையடுத்து இந்த மனுக்கள் மீதான விசாரணை இன்று செவ்வாய்க்கிழமை முதல் உயர் நீதிமன்றில் நடைபெறவுள்ளது. இதில் ஆஜராகி வாதாடுவதற்காக சட்டத் தரணிகள் ராம்ஜெத்மலானி உள்ளிட்டோர் நேற்றிரவு சென்னைக்கு வந்துள்ளனர். இவர்களின் ராம்ஜெத்மலானி மூத்த சட்டத்தரணியாவார். இந்திய அரசியலமைப்பு சட்டம் தொடர்பாக இவர் நன்கு நிபுணத்துவம் பெற்றவர்.

சட்டத்தரணி வாகித் சவுத்திரி மும்பையைச் சேர்ந்தவர். பல தூக்குத் தண்டனை வழக்குகளில் ஆஜராகி பலரது உயிரை காப்பாற்றியவர். அது போல சட்டத்தரணி காலின் கான் கிலோஸ் மனித உரிமை தொடர்பான வழக்குகளில் நிபுணத்துவம் பெற்றவர். இவர்களது வாதம் தூக்கு கயிறை எதிர்நோக்கியுள்ள மூவரை நிச்சயம் காப்பாற்றும் என்று நம்பிக்கையும் எதிர்பார்ப்பும் நிலவுகின்றது. (ஸ்ரீ-4)



அன்னா ஹசாரேயின் சொந்த கிராமமான மகாராஷ்டிரா, ரலேகான் சித்தியில் வெற்றியை ஆனந்தமாக கொண்டாடும் பெண்கள்.

## தமிழீழ ஆதரவு கைதிகள் தீவிர கண்காணிப்பில்

ராஜீவ் கொலை வழக்கில் தூக்குத் தண்டனை பெற்ற சாந்தன், பேரறிவாளன், முருகன் ஆகியோருக்கு ஆதரவாக சிறைக் கைதிகள் போராட திட்டமிட்டுள்ளார்களா என கண்காணிக்குமாறு அரசு உத்தரவிட்டுள்ளது.

சாந்தன் உட்பட 3 பேருக்கு வேலூர் சிறையில் செப்டெம்பர் 9 ஆம் திகதி தூக்கு நிறைவேற்றப்படவுள்ளது. இதை இரத்துச் செய்யக் கோரி பல்வேறு அமைப்புக்கள் சார்பில் தொடர் போராட்டங்கள் நடக்கின்றன. முன்னெச்சரிக்கையாக வேலூர் சிறையில் கமாண்டோ வீரர்கள் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர்.

தமிழீழ ஆதரவு கைதிகள் திருச்சி, கோவை, புழல் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் தூக்குத் தண்டனை கைதிகளுக்கு ஆதரவாக உண்ணாவிரதம், தற்கொலை முயற்சி போன்ற போராட்டங்களில் ஈடுபட வாய்ப்புள்ளதாக உளவுத்துறை எச்சரித்துள்ளது. இதனால் இவர்களை 24 மணி நேரமும் கண்காணிக்குமாறு சிறை நிர்வாகங்களுக்கு அரசு உத்தரவிட்டுள்ளது. (ஸ்ரீ-2)

# யாழ்ப்பாணத்தில் டெங்கு நோயின் பரம்பல் அதிகரிப்பு; இதுவரை 19 நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர்

## கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு அறிவுறுத்து

யாழ்.மாவட்டத்தில் இம் மாதத்தில் டெங்கு நோயின் பரம்பல் அதிகரித்துச் செல்வதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. இம் மாதத்தில் இதுவரை 19 நோயாளர்கள் டெங்கு நோயுடன் இனங்காணப்பட்டுள்ளனர். அத்துடன் யாழ். மாநகர பிரதேசத்தைச் சேர்ந்த ஒரு பாடசாலை மாணவன் டெங்கு நோயிற்கு பலியாகியுள்ளார்.

தற்போது விடுமுறைக்காலமாகையால் தென்பகுதியிலிருந்து யாழ். மாவட்டத்திற்கும் யாழ். மாவட்டத்திலிருந்து தென்பகுதிக்கும் ஏராளமான மக்கள் வந்து சென்ற வண்ணம் உள்ளனர்.

கொழும்பு மாவட்டத்தில் டெங்கு நோயின் பரம்பல் தற்போது தீவிரமாக உள்ளது. இந்நிலையில் யாழ். மாவட்டத்தில் வடகீழ் பருவமழை பெய்ய ஆரம்பித்துள்ளது.

இத்தகைய ஒரு சாதகமான சூழ்நிலையில் யாழ்.மாவட்டத்தில் டெங்கு நோய் மிகத் தீவிரமாகப் பரவி உயிரிழப்புகளை ஏற்படுத்த வாய்ப்புள்ளது.

எனவே அனைத்துத் தரப்பினரும் ஒன்றிணைந்து டெங்குக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளுக்கு தமது பங்களிப்பையும் ஒத்துழைப்பையும் வழங்க வேண்டும் என யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார்.

அத்துடன் பின்வரும் டெங்குக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு அவர் அறிவித்துள்ளார்.

✷ சகல அரச , தனியார் நிறுவனங்களும் வாரத்திற்கு ஒரு தடவை பணியாளர்களால் சிரமதான அடிப்படையில் துப்புரவு செய்யப்பட வேண்டும்.

✷ வர்த்தக நிலைய்ங்கள் உரிமையாளர்களால் கிரமமாக துப்புரவு செய்ய ஏற்பாடு செய்யப்பட வேண்டும்.

✷ பாடசாலைகள் மூன்றாம் தவணைக்காக ஆரம்பிக்கப்பட்டு முதல் மூன்று நாட்களுக்குள் மாணவர்களின் பங்களிப்புடன் சிரமதான அடிப்படையில் துப்புரவு செய்யப்பட வேண்டும்.

✷ தனியார் கல்வி நிலையங்கள் உரிமையாளர்களினால் துப்புரவு செய்ய ஏற்பாடு செய்யப்பட வேண்டும்.

✷ வைத்தியசாலைகள், வைத்தியசாலைப் பொறுப்பதிகாரிகளால் ஊழியர்களின் பங்களிப்புடன் துப்புரவு செய்யப்பட வேண்டும்.

✷ வணக்கஸ்தலங்கள் சம்பந்தப்பட்ட அறங்காவலர் சபையின் ஏற்பாட்டில் சிரமதான அடிப்படையில் துப்புரவு செய்யப்பட வேண்டும்.

✷ தனியார் விடுகள் உரிமையாளர்களால் /குடியிருப்பாளர்களால் துப்புரவு செய்யப்பட வேண்டும்.

✷ பராமரிப்பற்ற வீடுகள்,காணிகள் உரிமையாளர்கள்/பராமரிப்பாளர்களால் துப்புரவு செய்யப்பட வேண்டும்.

✷ பொதுச் சந்தைகள் , மயானங்கள் போன்ற பொது இடங்கள் உள்ளூராட்சி மன்றங்களால் துப்புரவு செய்யப்பட வேண்டும்.

✷ கழிவு நீர் வாய்க்கால்கள், உள்ளூராட்சி மன்றங்களால் துப்புரவு செய்யப்பட வேண்டும். தேங்கி நிற்கும் கழிவு நீர் வாய்க்கால்களில் கிருமிநாசினிகள் விசிறப்பட வேண்டும்.

✷ திண்மக்கழிவுகள் கிரமமாக துப்புரவு செய்ய ஏற்பாடு செய்யப்பட வேண்டும்.

✷ டெங்கு நுளம்புகள் உற்பத்தியாகக் கூடிய தண்ணீர் தேங்கி நிற்கும் இடங்களில் பற்றீரியா விசிற சுகாதார வைத்திய அதிகாரிகளால் நடவடிக்கை எடுக்கப்படும்.

✷ பிரதேச மட்டத்தில் டெங்கு கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை பிரதேச செயலாளர் தலைமையிலான பிரதேச டெங்கு கட்டுப்பாட்டு குழு ஒன்றிணைக்கும். இதற்கான ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் வாராந்தம் இடம்பெறும்.

எனவே அனைவரும் ஒன்றிணைந்து ஆட்கொல்லி நோயான டெங்கு நோயை கட்டப்படுத்த தமது பங்களிப்பை வழங்குமாறு அவர் கோரியுள்ளார். (ஸ்ரீ)

# மின் தடைபற்றிய அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

வீதி அகலிப்பு பணிகளுக்காக உயரழுத்த மின்விநியோக மார்க்கங்களிலுள்ள மின் தூண்களை இடமாற்றவேண்டியிருப்பதாலும் உயரழுத்த மின்விநியோக மார்க்கங்களில் பராமரிப்பு வேலைகள் செய்யும் பொருட்டு இன்று செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணிவரை தென்மராட்சிப் பிரதேசத்திலும்.

நாளை புதன்கிழமை மற்றும் எதிர்வரும் 4 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆகிய தினங்களில் இணுவில், உடுவில், மருதனார்மடம், தாவடி, கொக்குவில், நாச்சிமார் கோவிலடி, ஆனைக்கோட்டை, நவாலி, மானிப்பாய், சங்குவேலி, கோண்டர்வில், கொட்டடி, கோம்பயன்மணல் பிரதேசம், யாழ்.பட்டணப் பகுதி ஆகிய இடங்களிலும்.

எதிர்வரும் முதலாம் திகதி வியாழக்கிழமை, 3 ஆம் திகதி சனிக்கிழடை மற்றும் 4 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆகிய தினங்களில் கரந்தன், நீர்வேலி, சிறுப்பிட்டி, கோப்பாய், இருபாலை, கல்வியங்காடு, நல்லூர், அரியாலை, தென்மராட்சிப் பிரதேசம் ஆகிய இடங்களிலும் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என யாழ் .பிரதேச மின்பொறியியலாளர் அறிவித்துள்ளார். (ஸ்ரீ)

# த.தே.கூ உடனான பேச்சுகளை மீண்டும் ஆரம்பிக்க வேண்டும்

## ஐ.தே.க. வலியுறுத்து

தமிழர் விவகாரம் தொடர்பில் அரசாங்கத்திடம் காணப்பட்ட இதய சுத்தியற்ற போக்குகளே தமிழ்த்தேசியக் கூட்டமைப்புடனான பேச்சுவார்த்தை தளர்வு பெறுவதற்குக் காரணமாகிவிட்டது என்று பிரதான எதிர்க் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி குற்றம் சாட்டியுள்ளது.

தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் வகையில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கும் அரசாங்கத்துக்குமிடையில் இடம்பெற்று வந்த பேச்சுவார்த்தை தடைப்பட்டிருப்பது தொடர்பில் பிரதான எதிர்க்கட்சி என்ற வகையில் ஐக்கிய தேசியக் கட்சியின் நிலைப்பாடு குறித்து தெளிவு படுத்துகையிலேயே அதன் பிரதிப் பொதுச் செயலாளரும் எம்.பியுமான டாக்டர் ஜயலத் ஜயவர்த்தன மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாட்டின் எதிர்காலம் ஆரோக்கியமானதாக அமைய வேண்டும் என்று அரசாங்கம் நினைக்குமேயானால் சர்வதேச அழுத்தங்களில் இருந்து விடுபட வேண்டுமேயானால் உடனடியாக கூட்டமைப்பின் கோரிக்கைக்கு நியாயபூர்வமான பதிலை அளித்து பேச்சுக்களை மீண்டும் ஆரம்பித்து தீர்வுகளுக்கு வழிகாணுமாறும் அக்கட்சி வேண்டுகோள் விடுத்துள்ளது. (ஸ்ரீ-2)

# வவுனியாவில் புதிய பஸ் நிலையம் நிர்மாணம்

(வவுனியா)

தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் அனுசரணையுடனும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் நிதியுதவியுடனும் வவுனியாவிற்கான பஸ் நிலையம் புதிதாக நிர்மாணிக்கப்படவுள்ளது.

மேற்படி பஸ் நிலையத்தை அமைப்பதற்கான அடிக்கல் இன்று செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு போக்குவரத்து நெடுஞ்சாலை அமைச்சர் சி.பீ.ரத்நாயக்கவால் நாட்டப்படவுள்ளது.

இவ் பஸ் நிலையமானது ஏ9 வீதியில் அமைந்துள்ள விவசாயப் பண்ணைக்கு அருகாமையில் அமைக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-3)

# தனிமைச் சிறையில் அடைக்கப்பட்டிருப்பது மரண தண்டனையைவிட கொடுமையானது

## பேரறிவாளன் தெரிவிப்பு

தனிமைச் சிறையில் அடைக்கப்பட்டிருப்பது மரண தண்டனையை விட கொடுமையானது என்று பேரறிவாளன் தெரிவித்துள்ளதாக அவரை நேரில் சந்தித்து பேசிய சட்டத்தரணி ராஜீவ்காந்தி தெரிவித்தார்.

நேற்று முன்தினம் சென்னையைச் சேர்ந்த ராஜீவ் காந்தி உட்பட 3 சட்டத்தரணிகள் வேலூர் சிறையில் உள்ள சாந்தன், முருகன், பேரறிவாளன் ஆகியோரை சந்தித்து பேசினார்கள். பின்னர் சட்டத்தரணி ராஜீவ் காந்தி நிருபர்களிடம் கூறியதாவது,

3 பேரின் தூக்குத் தண்டனையை நிறுத்தக்கோரி உயர் நீதிமன்றில் மனுத்தாக்கல் செய்வதற்காக சிறையில் உள்ள 3 பேரிடமும் தனித்தனியாக பிரமாண பத்திரத்தில் கையெழுத்து வாங்கப்பட்டுள்ளது. 10 க்கு 10 அளவுள்ள தனிமை சிறையில் அவர்கள் அடைக்கப்பட்டுள்ளனர்.

இந்த தண்டனை மரண தண்டனையை விட கொடுமையானது என்று பேரறிவாளன் தெரிவித்தார்.

24 மணி நேரமும் அவர்களுடைய ஒவ்வொரு அசைவையும் பொலிஸார் தீவிரமாக கண்காணித்து வருகின்றனர். இதனால் அவர்களின் தனிப்பட்ட உரிமைகள் பாதிக்கப்படுகின்றன. இது குறித்து சிறைத்துறை தலைவருக்கு கடிதம் அனுப்பியுள்ளோம். சிறையில் அதிகாரிகள் தவிர உள்ளூர் பொலிஸார், மாநில மற்றும் உளவுத்துறை அதிகாரிகள் வந்து பார்த்துச் செல்கின்றனர். இதனால் அவர்கள் கடும் மன உளைச்சலில் உள்ளனர் என அவர் கூறினார்.

கோரிக்கையை நிராகரித்தாலும் முதல்வர் ஜெயலலிதா மீது நம்பிக்கை இழக்கவில்லை என்றும் தங்களது உயிர் போவதற்கு முன்பு முதல்வர் ஜெயலலிதாவால் உதவ முடியும் என்று சிறையில் தங்களை சந்தித்த வழக்கறிஞரிடம் பேரறிவாளன், சாந்தன், முருகன் ஆகியோர் கூறியுள்ளனர். (ஸ்ரீ-2)

# இந்திய சிறைகளில் 104 இலங்கை மீனவர்கள் தடுத்து வைப்பு

இந்திய சிறைகளில் இலங்கை மீனவர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே தடுத்து வைக்கப்பட்டிருந்த மீனவர்கள் விடுவிக்கப்பட்டுள்ள நிலையில் தற்போது 104 பேர் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை இலங்கையில் இவ்வாறு இந்திய மீனவர்களை தடுத்து வைக்கப்படவில்லை என்பதையும் எஸ்.எம்.கிருஷ்ணா சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்திய மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் தாக்கப்படுவது இந்திய கடற்படையினரால் இலங்கை மீனவர்கள் தாக்கப்படுவது தொடர்பில் இரு நாடுகளுக்கிடையே அவ்வப்போது பேச்சுவார்த்தைகள் இடம்பெற்று வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

> பயந்தவன் பத்து தைரியசாலிகளை பயந்தாங்கொள்ளிகளாக்கி விடுவான்.
> -ஓர் அறிஞர்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# அளவெட்டியில் நடந்ததை அமெரிக்கா கேட்டது கிறீஸ் பூதத்தை யார் கேட்பது?

கிறீஸ் பூதம், மர்ம மனிதன் என்ற பிரச்சினையால் மக்கள் நிம்மதி இழந்து போயுள்ளனர்.

குறிப்பாக கிராமங்களில் இந்தத் தொந்தரவு மிகமோசமாகி வருகிறது.

ஒவ்வொரு நாளும் பரவலாக நடந்தேறும் மர்ம மனிதன் பிரச்சினையால் மக்கள் நிம்மதியாக உறங்க முடியவில்லை.

அதேநேரம் இந்தச் செய்திகள் வெளிவராமல் அமுங்கிப் போவதும் பெரும் வேதனைக்குரியது.

உரியவர்கள் முறைப்பாடு செய்வதற்கு அஞ்சுகின்றனர்.

போதிய பாதுகாப்பு இன்மை காரணமாக தொந்தரவு வேண்டாம். அமைதியாக இருந்துவிடுவோம் என்பது மக்களின் முடிபு.

பொதுவில் கிராமங்களில் நடந்தேறும் இது போன்ற பிரச்சினைகள் வெளிக்கொண்டு வரப்படுவது மிகவும் மந்தமாகவே உள்ளது.

நகரங்களில் நடக்கும் பிரச்சினைகளுக்குக் கொடுக்கப்படும் முன்னுரிமை கிராமங்களுக்கு வழங்கப்படுவதில்லை என்ற குற்றச்சாட்டு,

ஊடகங்கள் உட்பட பொலிஸ் மற்றும் சட்டம் ஒழுங்கை நடைமுறைப்படுத்துகின்ற அமைப்புகள் ஈறாகச் சுமத்தப்படுகின்றது.

அதில் உண்மையும் இருக்கவே செய்கின்றது. இதற்கு மேலாக எந்தப் பிரச்சினையும் அரசியல் அல்லது அரசியல் கட்சி சார்ந்து நடைபெறுமாக இருந்தால், அதனை ஊதிப் பெருக்க வைத்து அலங்காரம் செய்து அரங்கேற்றும் வழமையும் உண்டு.

அதைவிடவும் பொதுமக்கள் சார்ந்ததாக இருந்தால், அது பற்றிய துலாம்பரப்படுத்தல்கள் மிகமிகக் குறைவு என்றே கூறவேண்டும்.

உதாரணத்திற்கு கடந்த உள்ளூராட்சித் தேர்தலின் போது அளவெட்டியில் நடந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரசாரக் கூட்டத்திற்குள் இராணுவம் நுழைந்து செய்த அட்டகாசம் குறித்து இலங்கை அரசிடம் அமெரிக்கா விளக்கம் கேட்கும் அளவிற்கு அந்தச் சம்பவம் இருந்தது.

அளவெட்டியில் நடந்த சம்பவத்தை அமெரிக்கா என்ன நடக்கிறது எனக் கேட்குமாக இருந்தால், நாவாந்துறை உள்ளிட்ட வலிகாமம், தீவகம், வடமராட்சி, தென்மராட்சி என யாழ். குடாநாடு முழுவதையும் கதி கலங்க வைக்கும் கிறீஸ் பூதம் பற்றி இதுவரை அமெரிக்கா இலங்கை அரசிடம் கேட்காதது ஏன்?

கிறீஸ் பூதம் பற்றி தமிழ் அரசியல் பிரதிநிதிகள் ஏதுவும் அலட்டிக் கொள்ளவில்லை. அதுபற்றி வெளிநாட்டுத் தூதுவர்களுக்கு அவர்கள் எடுத்துக் கூறவில்லை.

அளவெட்டிச் சம்பவம் தேர்தல் காலத்தோடு சம்பந்தப்பட்டது. நாவாந்துறை உட்பட யாழ். குடாநாடு முழுவதும் மக்கள் நிம்மதி இழந்து போயிருக்கும் சம்பவம் அப்படியல்ல. அதனால் தமிழ் அரசியல்வாதிகள் அதுபற்றிச் சிந்திக்காமல் இருக்கின்றனர் அவ்வளவுதான்.

# தமிழின உணர்வாளர்களின் போராட்டத்தால் மூன்று பேரும் உயிர் தப்புவார்கள்

## பேரறிவாளன் தாய் நம்பிக்கை

ராஜீவ்காந்தி கொலை வழக்கில் தூக்கு தண்டனை விதிக்கப்பட்டுள்ள பேரறிவாளன், சாந்தன், முருகன் ஆகியோரை காப்பாற்ற தமிழகம் முழுவதும் போராட்டம் வலுத்து வருகின்றது. காஞ்சிபுரத்தில் செங்கொடி என்ற 21 வயது இளம் பெண் தீக்குளித்து உயிரை மாய்த்துள்ளார். கடந்த 4 நாட்களாக கோயம்பேட்டில் உயர்நீதிமன்ற சட்டத் தரணிகள் பாலம்பாள், அங்கயற்கண்ணி, கவிதா ஆகியோர் கடந்த 4 நாட்களாக உண்ணாவிரதம் இருந்து வருகின்றார்கள். இவர்களுக்கு பேரறிவாளனின் தாய் அற்புதம் அம்மாளும் ஆதரவு தெரிவித்துள்ளார். இங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த 1991 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 11ஆம் திகதி எனது மகன் பேரறிவாளனை சி.பி.ஐ. அதிகாரிகளிடம் விசாரணைக்காக ஒப்படைத்தோம். எலக்ரோனிக் கம்யூனிகேசன் முடித்திருந்த பேரறிவாளன் மேல்படிப்பு படிக்க வேண்டும் என்ற ஆசையில் வேப்பேரி பெரியார் திடலில் தங்கியிருந்தார்.

அங்கிருந்துதான் அவனை அழைத்து சென்றனர். பின்னர் பல நாட்கள் கழித்து சி.பி.ஐ. நீதிமன்றில் அவனை ஆஜர்படுத்தினர். அப்போது அவனுடன் என்னால் பேச முடியவில்லை. சி.பி.ஐ. அதிகாரிகள் கைது செய்த பின்னர் 50 நாட்களுக்கு பின்னர்தான் அவனுடன் என்னால் பேச முடியாது.

கிரீம்ஸ் ரோட்டில் உள்ள சி.பி.ஐ. அலுவலகத்தில் வைத்து சிறிதுநேரம் அவனுடைய பேசிக் கொண்டிருந்தேன். அப்போது அவன் என்னைப் பார்த்து பயப்படாதீர்கள் அம்மா. விசாரித்து விட்டு அனுப்பி விடுவதாக கூறியுள்ளனர். விரைவில்நான்வெளியில்வந்துவிடுவேன் என கூறி தைரியப்படுத்தினான்.

சிறுவயதில் இருந்தே பேரறிவாளனுக்கு இரக்க குணம் அதிகம் உண்டு. யாரிடமும் அதிர்ந்து கூட பேசமாட்டான். எல்லோரையும்போல எனது மகனும் நன்றாக படித்து கார், பங்களா என வசதியுடன் வாழ வேண்டும் என்று ஆசைப்பட்டேன். ஆனால் அவனது வாழ்க்கை சிறையிலேயே கழிந்து வருகிறது.

பேரறிவாளன் சிறைக்கு சென்ற சில மாதங்கள் கழித்து எனது மகள் அன்புமணியின் திருமணம் நடைபெற்றது. பேரறிவாளன் விடுதலை ஆகும் வரை திருமணம் செய்து கொள்ள மாட்டேன் என்று இளையமகள் அருள்செல்வி பிடிவாதமாக இருந்தாள். அவன்தான் அருள்செல்வியை சமாதானப் படுத்தி திருமணத்துக்கு சம்மதிக்க வைத்தான்.

பேரறிவாளன், சாந்தன், முருகன் ஆகியோரின் தூக்கு தண்டனையை இரத்து செய்ய கோரி தற்போது தமிழகம் முழு வதும் போராட்டங்கள் நடத்தப்பட்டு வருவது நம்பிக்கையை ஏற்படுத்தி உள்ளது.

3 பேரும் காப்பாற்றப்படுவார்கள். தமிழக முதல் அமைச்சர் இதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் .3 பேரின் உயிரைக் காக்க அறப் போராட்டங்கள் நடந்துவரும் நிலையில் செங்கொடி தீக்குளித்து பலியானது வேதனை அளிக்கிறது. இது போன்ற செயல்களில் யாரும் ஈடுபட வேண்டாம். இவ்வாறு அற்புதம்மாள் கூறினார். (ஸ்ரீ-4)

# ஜப்பான் பிரதமராக நோடா நியமனம்!

ஜப்பானின் ஆளும் ஜனநாயகக்கட்சியின் புதிய தலைவராக நிதியமைச்சர் யோஷிஹிகோ நோடா தெரிவு செய்யப்பட்டுள்ளார். இதனால் ஜப்பானின் அடுத்த பிரதமராக அவர் பதவி ஏற்கும் நிலை ஏற்பட்டுள்ளது. கடந்த 5 வருட காலத்தில் 6- வது ஜப்பானிய பிரதமராக நோடா பதவியேற்கவுள்ளார்.

கடந்த மார்ச் மாதம் ஏற்பட்ட பூகம்பம், சுனாமியின் பின்னரான சூழ்நிலையை கையாண்ட விவகாரம் குறித்து ஏற்பட்ட சர்ச்சை காரணமாக ஜப்பானிய பிரதமர் நவவோட்டா கான் ராஜினாமா செய்திருந்தார். அதையடுத்து புதிய பிரதமரை தெரிவு செய்யும் நிர்ப்பந்தம் ஜப்பானிய ஆளும் ஜனநாயகக் கட்சிக்கு ஏற்பட்டது.

இதற்கான வாக்கெடுப்பில் வர்த்தக அமைச்சர் பென்ரி கயீடாவை நிதியமைச்சர் யோஷிஹிகோ நோடா தோற்கடித்தார். இன்று செவ்வாய்க்கிழமை இவர் பிரதமராக நாடாளுமன்றத்தினால் உறுதிப்படுத்தப்படுவார் என எதிர்பார்க்கப்படுகிறது. (ச-5)

# சுனாமி முன்னெச்சரிக்கை கருவிகள் கையளிப்பு

(கொழும்பு)

மண்முனை தென் எருவில் பற்று பிரதேச செயலகத்துக்குட்பட்ட சுமார் 25 கிராம சேவையாளர் பிரிவுக்கான சுனாமி முன்னெச்சரிக்கை கருவிகள் நேற்று திங்கட்கிழமை மட்டக்களப்பு மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினால் கிராமிய அனர்த்த முகாமைத்துவக் குழுவிடம் கையளிக்கப்பட்டன.

மண்முனை தென்எருவில் பற்று பிரதேச செயலாளர் சுதாகரன் தலைமையில் இடம் பெற்ற இந்நிகழ்வில் மீள்குடியேற்ற பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் இவற்றினைவழங்கிவைத்தார்.

இப்பகுதியில் அனர்த்தங்கள் ஏற்படும் போது அதனை தடுப்பதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கையின் ஒரு பகுதியாக இவை வழங்கிவைக்கப்பட்டுள்ளதாக மீள்குடியேற்ற பிரதியமைச்சர் விநாயமூர்த்தி முரளிதரன் தெரிவித்தார்.

பிரதேச அனர்த்த முகாமைத்துவ குழுக்களை திறம்பட இயங்க வைப்பதன் மூலமே இயற்கை அனர்த்தங்களின் போது அதில் இருந்து பொதுமக்களை காப்பாற்றமுடியும் எனவும் அவர் இங்கு தெரிவித்தார்.

இந்நிகழ்வில் உதவிப் பிரதேச செயலாளர் ரங்கநாதன், மீள்குடியேற்ற அமைச்சின் இணைப்புச் செயலாளர் பொன். ரவீந்திரன், மாவட்ட அனர்த்த முகாமைத்துவ இணைப் பாளர் ஹசீர் உட்பட அதிதிகள் பலர் கலந்து கொண்டனர். (ஸ்ரீ-2-4)

# ராஜீவ் உயிருடன் இருந்தால் மூவரையும் மன்னித்திருப்பார்

## கருணாநிதி அறிக்கை

ராஜீவ் காந்தி மட்டும் இந்நேரம் இருந்திருந்தால் தூக்குக் கயிற்றுக்கு முன்பு நிறுத்தபட்டுள்ள மூவரையும் மன்னித்து அவர்களின் உயிரையும் காப்பாற்றியிருப்பார் என தி.மு.க.தலைவர் கருணாநிதி மிகவும் உருக்கமாக கூறியுள்ளார்.

பேரறிவாளன், முருகன், சாந்தன் ஆகியோரை விடுவிக்க வேண்டும். அவர்கள் 20 ஆண்டுகளுக்கும் மேலாக தண்டனையைஅனுபவித்துவிட்டனர். எனவேஅவர்களை தூக்கில் போடக் கூடாது என்று சோனியா காந்திக்கும், மத்திய அரசுக்கும், தமிழக அரசுக்கும் ஏற்கனவே தி.மு.க.தலைவர் கோரிக்கை விடுத்திருந்தார்.

இந்த நிலையில் மீண்டும் ஒரு உருக்கமான கோரிக்கையை அவர் விடுத்துள்ளார். இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

மனித உரிமைக்கும் மனிதாபிமானத்திற்கும் எதிரான தூக்குத்தண்டனை தேவையில்லை. அதனை ரத்து செய்துவிடலாம் என சொல்லாத நாடுகளே இல்லையென கூறிவிடலாம்.

கொலைக் குற்றம் சாட்டப்பட்ட கைதி தமது வாழ்நாள் முழுவதும் அந்தக் குற்றத்தை எண்ணி வருந்துவதைவிட தூக்குத் தண்டனையால் பெரிய பயன் விளைந்துவிடப் போவதில்லை.

நம் உள்ளத்தை உருக்கும் பிரச்சினையாக உருவெடுத்துள்ள மூன்று தமிழ் வாலிபர்களின் உயிர் ஊசல் ஆடுவதை தடுத்து நிறுத்தி உதவிடும் பணி நம்கண் முன் பேருரு எடுத்திருக்கிறது.

ராஜீவ் காந்தி உயிருடன் இருந்தால் கூட அவர்களை மன்னித்திருப்பார். தூக்குத்தண்டனை விதிக்கப்பட்டுள்ள மூவரையும் மரணத்தின் பிடியிலிருந்து காப்பாற்ற வேண்டும்.

தூக்குமேடையிலிருந்து விடுவிக்கப்பட்டவர்கள் அதன் பிறகு எத்தகைய தூய வாழ்க்கையை தொடருகிறார்கள் என்பதை அறிந்தவன் நான்.

தூக்குத் தண்டனையை ரத்து செய்யுமாறு மத்திய மாநில அரசுகளை கேட்டுக் கொள்கிறேன்.

இக்கடிதத்தை கருணை மனுவாக கருதி தூக்குத் தண்டனையை ரத்து செய்ய வேண்டும் என்று அவர் கூறியுள்ளார். (ச-5)

# சுவாமி விவேகானந்தரின் அறிவுரைகள்

## எழுமின்! விழிமின்



இளைஞர்களே! என்னுடைய நம்பிக்கை உங்களிடந்தான் உள்ளது. தாய்த்திரு நாட்டின் அறை கூவலுக்குச் செவி சாய்ப்பீர்களா? உங்களுக்கு என்னிடம் நம்பிக்கை இருக்குமானால் என்னை நம்பு வதற்குரிய தைரியம் இருக்குமானால் ஒளிமயமான எதிர்காலம் உங்களுக்காகக் காத்து நிற்கிறது என்பேன். எதற்கும் கலங்காத நம்பிக்கை, எதற்கும் தளராத எதற்கும் தளராத தன்னம்பிக்கை வேண்டும். சிறுவனாக இருந்த போது என்னிடம் அத்தகைய தன்னம்பிக்கை இருந்தது.

உங்கள் ஒவ்வொருவருக்கும் உங்களிடத்தில் நம்பிக்கை வேண்டும். அளப்பரிய ஆற்றல் உங்கள் ஒவ்வொருவருடைய ஆன்மாவிலும் அடங்கிக்கிடக்கிறது என்பதில், உங்கள் முயற்சியால் இந்தியா மறுமலர்ச்சி பெறும், புதிய இந்தியா உருவாகிவிடும் என்பதில், உங்களுக்கு அசையாத நம்பிக்கை எழ வேண்டும். அப்படி எழுந்து நீங்கள் செயற்படுவீர்களாயின்- அப்போது- ஆஹா! நினைத்துப்பாருங்கள்! உலக நாடுகளில் எல்லாம்- அதன் மூலை முடுக்குகளில் எல்லாம் நாம் சென்று உலவி வருவோம்.

# கிராமசேவையாளர் வெற்றிடங்களை துரிதகதியில் நிரப்ப நடவடிக்கை

## அரசாங்கம் தெரிவிப்பு

(கொழும்பு)

நாடு முழுவதிலும் ஏற்பட்டுள்ள கிராம சேவையாளர்களுக்கான வெற்றிடங்களை நிரப்புவற்கு துரித கதியிலான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக பொது நிர்வாக மற்றும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு பாராளுமன்றத்தில் தெரிவித்தது.

பாராளுமன்றத்தில் கடந்த வெள்ளிக்கிழமையன்று இடம்பெற்ற அமர்வின் போது சுனில் ஹந்துன்நெத்தி எம்.பி.யினால் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் பிரதியமைச்சர் விஜய தஹநாயக்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

முன்னதாக கேள்வியெழுப்பிய சுனில் ஹந்துன்நெத்தி எம்.பி.சிறுவர்களை முதலாம் தரத்தில் பாடசாலைகளில் இணைத்துக் கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதற்கு கிராம சேவையாளரின் அத்தாட்சிப்பத்திரம் முக்கிய இடத்தை வகிக்கின்றது. பல கிராம சேவகர் பிரிவுகளில் கிராம சேவையாளர்கள் இன்மையால் பெற்றோர் தமது பிள்ளைகளுக்கான அத்தாட்சிப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்வதில் பெரும் சிரமத்தை எதிர்நோக்குகின்றனர்.

இதனை கருத்திற்கொண்டு கிராம சேவகர்களுக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என கேள்வியெழுப்பினார்.

இதற்குப் பதிலளித்த பிரதியமைச்சர் தஹநாயக்க கூறுகையில்,

சில கிராமசேவகர் பிரிவுகளில் கிராம சேவை உத்தியோகத்தர்கள் ஓய்வுபெற்றுச் சென்றுள்ளனர். மேலும் சிலர் மரணமடைந்துள்ளனர்.

இதன் காரணமாக பல கிராம சேவை பிரிவுகளில் கிராம சேவையாளர்களுக்கான வெற்றிடங்கள் நிலவுகின்றன. இவ்வாறான வெற்றிடங்களை நிரப்புவதற்கு துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மேலும் வெற்றிடங்கள் நிலவுகின்ற பிரதேசங்கள் இனங்காணப்பட்டுள்ளன என்றார். (ஸ்ரீ-2)

# பெருமளவு சுற்றுலா பயணிகள் வருகை

இலங்கையின் உயிரியல் பல்வகைமையைக் காண்பதற்கு பெரும் எண்ணிக்கையிலான சுற்றுலாப் பயணிகள் இங்கு வர இருப்பதாக வெளிநாட்டு ஊடக அறிக்கைகள் தெரிவிக்கின்றன. இதுதொடர்பாக ஏசியா நியூஸ் வெப்தளம் தகவல் தருகையில், யால வன விலங்கு பூங்காவைக் காண்பதற்காகவென்று உகந்த காலம் அடுத்த செம்டெம்பர் மாதமாகும்.

இக்காலப் பகுதியில் நாட்டின் இயற்கை வனங்களில் யானைகள், புலிகள் உட்பட பல வித இனங்கள் காணக்கூடியதாக இருக்கும். இயற்கை வனப்பு மிகுந்த யானைகளின் பட்டியலில் இலங்கைக்கு உயர்ந்த இடமுள்ளது. இலங்கையின் காலநிலைகளில் காணப்படும் பன்முகத் தன்மை பற்றியும் வெப்தளம் விபரித்துள்ளது. (ஸ்ரீ-12)

# வயோதிபர்களின் எண்ணிக்கை 40 இலட்சமாக அதிகரிப்பு

(கொழும்பு)

கடந்த பத்து வருடங்களில் இலங்கையில் வயோதிபர்களின் எண்ணிக்கை 18 வீதத்தினை விடவும் அதிகரித்துள்ளதாக சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன குறிப்பிடுகிறார். தற்போது நாட்டின் வயோதிபர் எண்ணிக்கை 40 இலட்சம் எனக் குறிப்பிட்ட அமைச்சர் எதிர்வரும் 2031 ஆம் ஆண்டாகும் போது இந்த எண்ணிக்கை பத்து இலட்சத்தால் அதிகரிக்குமெனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

தற்போது நிலவும் நிலைமையின் கீழ் இளைஞர்களின் வீதம் குறைவடைந்து செல்வதாக குறிப்பிட்ட அமைச்சர் இதனால் சமூக மற்றும் பொருளாதார ரீதியில் பிரச்சினைகள் ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் நிலவுவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

இந்நிலையில் அரசாங்கம் என்ற ரீதியில் வெளிவிவகாரங்கள் தொடர்பில் திட்டமிட்டு செயற்பட வேண்டியது அவசியம் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ-2)

# ரஜரட்ட பல்கலைக்கழக பரீட்சைகளை வேறிடத்தில் நடத்த தீர்மானம்

(கொழும்பு)

ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் சில பரீட்சைகளை மிஹிந்தலை மகா வித்தியாலயத்தில் நடத்துவதற்கு பல்கலைக்கழக அதிகாரிகள் நடவடிக்கைஎடுத்துள்ளதாகபல்கலைக்கழகமுகாமைத்துவ மாணவர் சங்கம் தெரிவிக்கின்றது.

அதிகாரிகள் மேற்கொண்டுள்ள இந்த நடவடிக்கைக்கு தாம் எதிர்ப்பு தெரிவிப்பதாக பல்கலைக்கழக முகாமைத்துவ மாணவர் சங்கத்தின் உப தலைவர் குறிப்பிடுகிறார்.

ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ பீடம் ஆரம்பிக்கப்பட்டு 15 வருடங்கள் கடந்துள்ள நிலையில் குறித்த பீடத்திற்கென கட்டடமோ விரிவுரைகளுக்கான வசதிகளோ இல்லையென தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பில் ரஜரட்ட பல்கலைக் கழகத்தின் உப வேந்தர் பேராசிரியர் கே.ஏ.நந்தசேனவிடம் வினவியபோது, முகாமைத்துவ பீடத்தில் போதிய இடவசதி இல்லாத காரணத்தால் பரீட்சைகளை மிஹிந்தலை மகா வித்தியாலயத்தில் நடத்துவதற்கு தீர்மானித்ததாக தெரிவித்தார். (ஸ்ரீ-2)

# சட்டவிரோதமாக மின்சாரம் பெற்ற 80 பேர் கைது

(கொழும்பு)

வவுனியா நகரிலும் அதன் சுற்றுப் புறங்களிலும் சட்டவிரோதமாக மின்சாரம் பெற்ற சுமார் 80 பேர் கடந்த சனிக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர்.

மின்மானியில் திருட்டு வேலைகள் செய்தவர்களே கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸார் குறிப்பிட்டனர்.

கொழும்பிலிருந்து வந்த மின்சார சபையின் திடீர் பரிசோதகர்கள் கடந்த இரண்டு நாட்களாக மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின் போது வவுனியா நகரம், கூமாங்குளம், பண்டாரிக்குளம், சின்னப்புதுக்குளம், தேக்கம்காடு மற்றும் குட்செட் வீதி ஆகியவற்றை சேர்ந்தவர்களே கண்டுபிடிக்கப்பட்டதாக பொலிஸார் குறிப்பிட்டனர். கைதானவர்கள் வவுனியா மாவட்ட பதில் நீதிவான் எம்.சிற்றம்பலம் முன்னிலையில் நேற்று முன்தினம் ஆஜர்செய்யப்பட்டு சரீர பிணையில் விடுதலை செய்யப்பட்டனர். (ஸ்ரீ-2)

# குவைத்தில் மதுபானம் விற்பனை செய்த குற்றச்சாட்டில் இலங்கைப் பெண் கைது

(கொழும்பு)

குவைத்தில் மதுபானம் தயாரித்து விற்பனை செய்த குற்றச்சாட்டில் இலங்கையைச் சேர்ந்த பெண்ணொருவர் கைதுசெய்யப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த பெண்ணைத் தேடிக் கண்டுபிடித்து கைதுசெய்யுமாறு பிடியாணை உத்தரவு பிறப்பிக்கப்பட்ட நிலையில் அவர் கைது செய்யப்பட்டார்.

50 வயதான இப்பெண்ணின் மதுபான விற்பனைக்கு உதவியளித்ததாகத் தெரிவிக்கப்படும் இருவர் கைதுசெய்யப்பட்டு பொலிஸாரின் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளனர்.

விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த 25 மதுபான போத்தல்கள் உட்பட மதுபான உற்பத்திக்கு பயன்படுத்தப்படும் உபகரணங்களையும் கைப்பற்றியுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ஸ்ரீ-2)

# சட்டவிரோத வேலைவாய்ப்பு நிலையம் சுற்றிவளைப்பு

## சந்தேகநபர் கைது

மருதானை பகுதியில் சட்டவிரோதமாக செயற்பட்டு வந்த வெளிநாட்டு வேலை வாய்ப்பு முகவர் நிலையமொன்றினை இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியக விசாரணை பிரிவு அதிகாரிகள் சுற்றி வளைத்ததுடன் நபர் ஒருவரையும் கைது செய்துள்ளனர்.

மருதானை, மாளிகாவத்தை ஒழுங்கையில் தொலைத்தொடர்பு நிலையமொன்றிற்குள் மிகவும் சூட்சுமமாக செயற்பட்டு வந்த சட்டவிரோத முகவர் நிலையமே இவ்வாறு சுற்றிவளைக்கப்பட்டுள்ளது.

குறித்த முகவர் நிலையத்திலிருந்து 45 கடவுச் சீட்டுக்களும் மற்றும் பல ஆவணங்களும் மீட்கப்பட்டதாக இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தின் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

மருதானை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மாளிகாவத்தை ஒழுங்கை பகுதியில் சட்டவிரோதமாக வெளிநாட்டு வேலைவாய்பு முகவர் நிலையமொன்று செயற்பட்டு வருவதாக பணியகத்துக்கு தகவல் கிடைத்துள்ளது. அதனடிப்படையிலேயே கடந்த 27 ஆம் திகதி குறித்த முகவர் நிலையம் சுற்றி வளைக்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டபோது அவர் குற்றத்தை ஏற்றுக்கொண்டுள்ளார். இதனையடுத்து எதிர்வரும் செப்டெம்பர் 10ஆம் திகதிக்கு விசாரணை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

நாட்டின் பல பாகங்களிலும் இவ்வாறான சட்டவிரோத வெளிநாட்டு முகவர் நிலையங்கள் செயற்பட்டு வருகின்றன.

எனவே, அவை தொடர்பில் மக்கள் மிகுந்த அவதானமாக இருக்க வேண்டும். அத்தோடு அவ்வாறான சட்டவிரோத முகவர் நிலையங்கள் பற்றி தெரிந்தால் உடனடியாக இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்துக்கு தெரியப்படுத்த வேண்டும் என பணியகம் தெரிவித்துள்ளது. (ஸ்ரீ-2)

# ஜனநாயக மக்கள் முன்னணியின் சார்பில் லக்ஷ்மன் கதிர்காமரின் சகோதரர் போட்டி

(கொழும்பு)

முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமரின் ஒன்றுவிட்ட சகோதரரான சீலன் கதிர்காமர்,தெஹிவளை-கல்கிசை மாநகர சபைத் தேர்தலில் மனோகணேசன் தலைமையிலான ஜனநாயக மக்கள் முன்னணியின் சார்பில் போட்டியிடுகிறார்.

இது தொடர்பாக கொழும்பு ஊடகமொன்றுக்கு சீலன் கதிர்காமர் தெரிவிக்கையில், ஜனநாயக மக்கள் முன்னணியானது இலங்கையில் மூவின சமூகங்களையும் கொண்ட ஓர் கூட்டமைப்பாக விளங்குவதாகவும் நாட்டின் அனைத்து இன மக்களையும் ஐக்கியப்படுத்துவதற்கான நிகழ்ச்சித்திட்டங்களை கொண்டிருப்பதாகவும் கூறினார். இவர் யாழ். பல்கலைக்கழகத்தின் முன்னாள் சிரேஷ்ட விரிவுரையாளர் ஆவார்.

பிரதான அரசியல் கட்சிகள் அனைத்து சமூகங்களையும் சார்ந்த வேட்பாளர்களை களமிறக்கினாலும் இத்தகைய நிகழ்ச்சித் திட்டங்களை கொண்டிருக்கவில்லை என சீலன் கதிர்காமர் கூறினார். ஐ.தே.க,ஸ்ரீ.ல.சு.க ஆகியன இந்நாட்டை 60 வருடங்களுக்கு மேல்லாக ஆட்சி செய்த போதிலும் தேசிய பிரச்சினைக்கு தீர்வு காணத் தவறிவிட்டன என அவர் தெரிவித்தார்.

இதேவேளை, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி,ஐக்கிய தேசியக் கட்சி ஆகியவற்றுக்கு மாற்றான கட்சியாக ஜனநாயக மக்கள் முன்னணி தன்னை நிலை நிறுத்துவதாக அக்கட்சியின் தலைவர் மனோகணேசன் கூறியுள்ளார்.

நவசமசமாஜக் கட்சி, சமூக ஜனநாயக ஒற்றுமை அமைப்பு ஆகியன ஜ.ம.முன்னணியின் ஏணி சின்னத்தின்கீழ் கொழும்பு மாநகர சபைக்கும் தெஹிவளை-கல்கிஸை மாநகர சபைக்கும் கொலன்னாவை பிரதேச சபைக்கும் வேட்பாளர்களை களமிறக்கியுள்ளன.

கொழும்பு மாநகரசபைக்கான மேயர் வேட்பாளராக மனோகணேசனும் தெஹிவளை-கல்கிஸை மாநகர சபைக்கான மேயர் வேட்பாளராக விக்கிரமபாகு கருணாரட்னவும் போட்டியிடுகின்றனர்.

இந்நிலையில் ஐ.ம.சு.கூட்டமைப்பு, ஐ.தே. கட்சி ஆகியவற்றுக்கு தமிழர்கள் வாக்களிப்பதற்கு எந்தவொரு காரணமும் இல்லை என மனோகணேசன் கூறினார். நாம் ஐ.தே.க. வுடன் ஜ.தே.முன்னணி என்ற பெயரில் கூட்டணி அமைந்திருந்த போது தமிழர்கள் அக்கட்சிக்கு வாக்களித்தனர். இப்போது ஜ.தே.முன்னணி கடந்தகால வரலாறாகிவிட்டது.

யுத்தத்தின் பின்னர் தமிழ் மக்களின் மனங்களை வெல்வதற்கு இருந்த வாய்ப்பை ஐ.ம.சு கூட்டமைப்பு தவறவிட்டுவிட்டது. அத்துடன் கொழும்பு மற்றும் தெஹிவளை-கல்கிஸை மாநகர பகுதிகளிலும் பெரும் எண்ணிக்கையான இடதுசாரி மற்றும் சமூக ஜனநாயக நோக்குள்ள மக்கள் ஜனநாயக மக்கள் முன்னணியை ஓர் மாற்று சக்தியாக கருதுகின்றனர் என மனோகணேசன் கூறியுள்ளார். (ஸ்ரீ-2)

# எரிக் பிரதாப், சுஜீவன், டர்வின் ஜொலிப்பு

# பற்றீசியன் அரையிறுதிக்குள் நுழைவு

எரிக் பிரதாப்பின் இறுதி ஓவர் அதிரடி ஆட்டமும், சுஜீவன், அஜித் டர்வினின் துல்லிய மான பந்து வீச்சும் கைகொடுக்க பற்றீசியன் விளையாட்டுக் கழகம் அரையிறுதிப்போட்டிக்குள் நுழைந்தது.

யாழ்ப்பாணம் ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்ட கழகங்களுக்கிடையே குமாரசாமி ஞாபகார்த்த இருபது-20 கிரிக்கெட் சுற்றுப் போட்டியை யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி மைதானத்தில் நடத்தி வருகிறது.

மேற்படி சுற்றுப்போட்டியின் காலிறுதி ஆட்டங்கள் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது. முதலாவது காலிறுதி ஆட்டத்தில் பற்றீசியன் விளையாட்டுக் கழகத்தினை எதிர்த்து ஓல்ட்கோல்ட்ஸ் அணி விளையாடியது.

நாணயச்சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாட களமிறங்கிய பற்றீசியன் விளையாட்டுக் கழகம் ஆரம்பத்தில் மெதுவாக ஓட்டங்கள் சேர்த்தது.10 ஓவர்களில் 53 ஓட்டங்களை பெற்றிருந்தது. பற்றீசியன் விளையாட்டுக் கழகம் தொடர்ந்து அதிரடி ஆட்டத்தினை காட்டியது. அவ்வணியின் எரிக் பிரதாப் அதிரடியாக ஆடி ஓட்டங்களை சேர்த்தார்.

20 ஓவர்கள் நிறைவில் பற்றீசியன் விளையாட்டுக் கழகம் 9விக்கெட்டுக்களை இழந்து 146 ஓட்டங்களை பெற்றது. துடுப்பாட்டத்தில் எரிக் பிரதாப் ஆட்டமிழக்காமல்56 ஓட்டங்களையும், கிளிங்டன் 20 ஓட்டங்களையும், சஜீந்திரன், நவதீபன் முறையே16,15 ஓட்டங்களை பெற்றுக் கொடுத்தனர்.

பந்து வீச்சில் ஓல்ட்கோல்ட்ஸ் சார்பில் ஜெயசுதன், திலீபன், சிறிகஜன், குகன், சோபிநாத் தலா2 விக்கெட்டுக்களை கைப்பற்றினர்.

பதிலுக்கு 147 என்ற வெற்றி இலக்கினை நோக்கி துடுப்பெடுத்தாட களமிறங்கியது ஓல்ட்கோல்ட்ஸ் விளையாட்டுக்கழகம். தொடக்கத்தில் இருந்து அடுத்தடுத்து விக்கெட்டுக்களை இழந்து தோல்வியினை தழுவியது. ஓல்ட்கோல்ட்ஸ் விளையாட்டுக்கழகம் 14.2 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 82 ஓட்டங்களை மாத்திரம் எடுத்தது.

துடுப்பாட்டத்தில் குகன், நிரோசன், முறையே 17,12 ஓட்டங்களைப் பெற்று கொடுத்தனர். பந்து வீச்சில் பற்றீசியன் விளையாட்டுக்கழகம் சார்பாக சுஜீபன், அஜித் டார்வின், முறையே 4,3 விக்கெட்டுக்களை கைப்பற்றினார்.

## இலங்கை அணி வீரர்களுக்கு எச்சரிக்கை

இலங்கை கிரிக்கெட் அணி வீரர்கள் காயங்களுக்கு பாரம்பரிய மாந்திரீக ரீதியான சிகிச்சைகளை பெறுவதனால் இது குறித்து அணியின் மருத்துவ உத்தியோகஸ்தருக்கு முன்கூட்டியே அறிவிக்க வேண்டும் என உத்தரவிடப்பட்டுள்ளது.

இலங்கை அணியின் ஆரம்ப துடுப்பட்ட வீரர் உபுல் தரங்க தடைசெய்யப்பட்ட ஊக்க மருந்து குற்றச்சாட்டில் தடைவிதிக்கப்பட்டதை தொடர்ந்துஇவ்வறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளது.

உபுல் தரங்க உலகக்கிண்ண போட்டியின் போது தடைசெய்யப்பட்ட ஊக்கமருந்தை பயன்படுத்தியதாக குற்றம் சுமத்தப்பட்டு 3 மாத கால தடை விதிக்கப்பட்டிருந்தது. உபுல் தரங்க குற்றத்தை ஒப்புக்கொண்டாலும் தான் காயத்திற்காக மாந்திரீக மருத்துவர் ஒருவரால் அளிக்கப்பட்ட மூலிக மருந்தாகவே அதை பயன்படுத்தியதாக கூறியிருந்தார்.

இலங்கை கிரிக்கெட் அணியின் புதிய உடற்கூற்று மருத்துவரான அவுஸ்திரேலியாவை சேர்ந்த ஸ்டீவ் மௌன்ட் இது குறித்து அவுஸ்திரேலிய பத்திரிகை ஒன்றுக்கு தெரிவிக்கையில், அவுஸ்திரேலியாவுடனான டெஸ்ட் தொடரில் பங்குபற்றும்அனைத்து வீரர்களுக்கும் இந்த ஆபத்து குறித்து தெரிவிக்கப்பட்டுள்ளதாக கூறினார்.

## 20கி.மீ நடைப்பயணத்தில் ரஷ்ய வீரர் தங்கம் வென்றார்

உலக சம்பியன்ஷிப் தடகள போட்டிகள் தென்கொரியாவில் நடந்து வருகின்றன. இதில் நேற்று நடந்த 20 கி.மீ நடைப்பயணத்தில் ரஷ்ய



வீரர் வலாரிட்டி போர்ச்சின் முதலிடம் பிடித்தார். அவர் ஒரு மணி நேரம் 19 நிமிடம் 56 விநாடிகளில் இலக்கைக் கடந்தார். 2 வது இடமும் ரஷ்ய வீரர் விளாடிமிருக்கு கிடைத்தது. அவர் 1:20:27 மணியிலும் 3 வது இடத்தை பிடித்த கொலம்பியா வீரர் லூயிஸ் பெர்னாண்டோ 1:20:38 மணியிலும் இலக்கைக் கடந்து சாதித்தனர். பெண்கள் தட்டு எறிதலில் சீன வீராங்கனை யான்பெங்க் முதலிடத்தையும் ஜேர்மனி வீராங்கனை நந்தினி முல்லர் 2 வது இடத்தையும் பிடித்தனர். பெண்கள் நீளம் தாண்டுதலில் அமெரிக்க வீராங்கனை பிரிட்டினிரெஷ் முதல் இடத்தையும் ரஷ்ய வீராங்கனை வோல்கா 2 வது இடத்தையும் பிடித்தனர்.

## கலிஸ்ரன் அபார ஆட்டம் சென்றல் அணி வெற்றி

(யாழ்ப்பாணம்)

துடுப்பாட்டம் பந்துவீச்சு இரண்டிலும் பிரகாசித்து அரையிறுதிப் போட்டிக்குள் இலகுவாக நுழைந்தது சென்றல் விளையாட்டுக் கழக அணி.

யாழ்ப்பாணம் ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகம் யாழ் மாவட்ட கழகங்களுக்கிடையில் குமாரசாமி ஞாபகார்த்த இருபது-20 சுற்றுப்போட்டியை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடத்தி வருகின்றது.

மேற்படி சுற்றுப்போட்டியின் காலிறுதி ஆட்டங்கள் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது. இரண்டாவது காலிறுதி ஆட்டத்தில் சென்றல் விளையாட்டுக்கழகத்தினை எதிர்த்து கிறாஸ்கோப்பர் விளையாட்டுக்கழகம் மோதியது.

நாணயச் சுழற்சியில் வென்ற சென்றல் விளையாட்டுக்கழகம் முதலில் கிறாஸ்கோப்பர் விளையாட்டுக்கழகத்தினை துடுப்பெடுத்தாடப் பணித்தது. அதற்கிணங்க களமிறங்கிய கிறாஸ்கோப்பர் அணி தொடக்கம் முதலே விக்கெட்டுக்களை பறிகொடுத்து 37 ஓட்டங்களுக்கு 7 விக்கெட்டுக்களை இழந்தது.

தொடர்ந்து வந்த துடுப்பாட்ட வீரர்களின் துடுப்பாட்டத்தினால் 77 ஓட்டங்கள் என்ற இலக்கை அடைந்து சகல விக்கெட்டுக்களையும் இழந்தது துடுப்பாட்டத்தில் நிலோசன் மட்டும் இரட்டை இலக்க ஓட்டமாக 18 ஓட்டங்களைப் பெற்றார்.

பந்து வீச்சில் சென்றல் விளையாட்டுக் கழகம் சார்பாக ஜசிந் ,மயூரன் தலா 3 விக்கெட்டுக்களையும் கலிஸ்ரன் 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு 78 என்ற இலகுவான இலக்கினை விரட்டிய சென்றல் விளையாட் டுக் கழகம் கலிஸ்ரனின் அரைச்சதத்தினால் 11 ஓவர்களில் வெற்றியிலக்கினை அடைந்தது.

இதில் கலிஸ்ரன் 57 ஓட்டங்களையும், ஜெசிந்தன் 20 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் பெற்றுக்கொடுத்தனர்.

# ராஜீவ் கொலைக்குற்ற விவகாரம்...

ஆம் திகதி முன்னாள் பாரதப் பிரதமர் ராஜீவ் காந்தி சிறிபெரும்புதூரில் நடைபெற்ற தேர்தல் பிரசாரப் பொதுக் கூட்டத்தில் கலந்துகொள்ள வந்த போது படுகொலை செய்யப்பட்டார் என்பதை இந்த மாமன்ற உறுப்பினர்கள் நன்கு அறிவீர்கள். இது தொடர்பான வழக்கு பூந்தமல்லி தடா நீதிமன்றில் விசாரணை செய்யப்பட்டு குற்றம் சாட்டப்பட்ட 26 பேருக்கும் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டது.

அதனை எதிர்த்துக் குற்றம் சாட்டப்பட்டவர்கள் உச்ச நீதிமன்றம் வரை சென்று மேன் முறையீடு செய்ததில், உச்ச நீதிமன்றம் நளினி, சிறிஹரன் என்கிற முருகன், சுதேந்திர ராஜா என்கிற சாந்தன், பேரறிவாளன் என்கிற அறிவு ஆகிய 4 பேருக்கும் தூக்குத்தண்டனையை உறுதிசெய்தது.

அத்துடன் மூன்று பேருக்குத் தூக்குத்தண்டனையை ஆயுள் தண்டனையாகக் குறைத்தது. எஞ்சிய 19 பேரை விடுதலை செய்தது. உச்ச நீதிமன்றத்தின் இந்தத் தீர்ப்பை எதிர்த்து தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட நான்கு நபர்களும் மறு ஆய்வு மனுத் தாக்கல் செய்தனர். இதனை 08.10. 1999 அன்று உச்ச நீதிமன்றம் நிராகரித்து உத்தரவிட்டது.

17.10.1999 அன்று மேற்கண்ட தூக்குத் தண்டனைக் கைதிகள் மேதகு தமிழக ஆளுநருக்கு கருணை மனுக்களை சமர்ப்பித்தார்கள். 27.10. 1999 அன்று மேதகு தமிழக ஆளுநர், இவர்களின் கருணை மனுக்களை நிராகரித்து ஆணையிட்டார்.

தூக்குத் தண்டனைக் கைதிகள் சென்னை உயர் நீதிமன்றத்தில் இது தொடர்பாக வழக்குத் தொடுத்தனர். இந்த வழக்குகளை விசாரித்த சென்னை உயர் நீதிமன்றம் 25.11. 1999 அன்று வழங்கிய தீர்ப்பில் மனுதாரர்கள் தொடுத்த வழக்குகளை ஏற்று கருணை மனுக்களை நிராகரித்த ஆளுநரின் ஆணையைத் தள்ளுபடி செய்து, அமைச்சரவையின் ஆலோசனை யைப் பெற்று புதிய ஆணை வழங்குமாறு அறிவுறுத்தியது. இந்தப் பொருள் குறித்து 19.04.2000 அன்று அன்றைய முதலமைச்சர் கருணாநிதி தலைமையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் சில முடிபு எடுக்கப்பட்டது.

தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட நான்கு கைதிகளில் ஒருவரான நளினியின் பெண்குழந்தை அனாதை ஆகிவிடும் என்று முதலமைச்சர் தெரிவித்த கருத்திற்கிணங்க நளினி ஒருவருக்கு மட்டும் கருணை காட்டி மரண தண்டனையை ஆயுள் தண்டனையாக குறைக்கலாம் என்றும் மற்றவர்களைப் பொறுத்தவரையில் அவர்களது கருணை மனுக்களை நிராகரிக்கலாம் என்றும் ஆளுநருக்கு ஆலோசனை வழங்க அமைச்சரவை முடிபு எடுத்தது.

கருணாநிதி தலைமையிலான அமைச்சரவையின் முடிபினை ஏற்று ஆளுநர் 21.04.2000 அன்று ஒப்புதல் அளித்தார். அதன்படி தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட நான்கு நபர்களில் சாந்தன், முருகன், பேரறிவாளன் ஆகியோரது தூக்குத்தண்டனை உறுதி செய்யப்பட்டது. இந்த மூன்று நபர்களும் குடியரசுத் தலைவருக்கு அளித்த கருணை மனுக்களை தமிழ்நாடு அரசு 28.04.2000 நாளிட்ட கடிதத்தின்படி மத்திய அரசுக்கு அனுப்பி வைத்தது. இதன் மீது மத்திய அரசின் உள்துறை தனது 12.08. 2011 நாளிட்ட கடிதத்தில் இந்திய குடியரசுத் தலைவர் இந் தக்கருணை மனுக்களை நிராகரித்து உத்தரவிட்டுள்ளதாகத் தெரிவித்து இதனை மேற்கண்ட கைதிகளுக்கு தெரியப்படுத்துமாறு தெரிவித்துள்ளது. இந்தக் கடிதத்தின் விபரம் சம்பந்தப்பட்ட கைதிகளுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதில் எல்லோரும் கவனிக்க வேண்டிய உண்மை என்னவென்றால் பேரறிவாளன் உள்ளிட்ட மூவரை மரண தண்டனையிலிருந்து தமிழக முதலமைச்சராகிய நான் காப்பாற்ற வேண்டும் என்று முன்னாள் முதலமைச்சர் கருணாநிதியும் வேண்டுகோள் விடுத்திருக்கிறார்.

ஆனால் 2000 ஆம் ஆண்டில் முதலமைச்சராகவிருந்த இதே கருணாநிதிதான் தனது தலைமையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் பேரறிவாளன் உள்ளிட்ட மூவரின் கருணை மனுக்களையும் நிராகரிக்கலாம் என்றும் மூவருக்கும் விதிக்கப்பட்ட மரண தண்டனையை உறுதி செய்யலாம் என்றும் தீர்மானம் நிறைவேற்றி ஆளுநருக்கு அனுப்பியுள்ளார்.

அன்றைய முதலமைச்சர் கருணாநிதியின் இந்தப் பரிந்துரையை அன்றைய ஆளுநரும் ஏற்றுக் கொண்டார். இவ்வாறு பேரறிவாளன் உள்ளிட்ட மூவருக்கும் அளிக்கப்பட்ட மரண தண்டனையை உறுதி செய்து விட்டு, செய்வதை எல்லாம் செய்து விட்டு இன்று ஒன்றும் தெரியாதது போல் அவர்களைக் காப்பாற்ற வேண்டும் என்று கருணாநிதி அறிக்கை வெளியிடுகிறார் என்றால் இது இரட்டை வேடம் அல்லாமல், பித்தலாட்டம் அல்லாமல், கபட நாடகம் அல்லாமல், வேறு என்ன என்பதை தமிழ் மக்கள் சிந்திக்க வேண்டும்.

தமிழ் நாடு முதலமைச்சர் என்ற முறையில் பேரறிவாளன் உள்ளிட்ட மூவரின் தூக்குத் தண்டனையை ரத்துச் செய்யும் அதிகாரம் எனக்கு இருப்பது போலவும் அந்த அதிகாரத்தை நான் பயன்படுத்தி அவர்களைக் காப்பாற்ற முடியும் என்பது போலவும் பேசப்படுவது சட்டத்தின்படி சரியானது அல்ல.

பல்வேறு அரசியல் கட்சிகளைச் சார்ந்தவர்கள் சட்டங்களைத் தெரிந்து கொண்டு வேண்டும் என்றே இவ்வாறு எனக்கு அதிகாரம் இருப்பது போல சொல்லி வருகிறார்களா? அல்லது சட்டங்களைப் பற்றி எதுவுமே தெரியாமல் முதலமைச்சருக்கு இத்தகைய அதிகாரம் இருப்பதாகக் கூறுகிறார்களா? என்பது தெரியவில்லை.

எனவே சட்ட நிலைமை என்ன என்பதை இந்த மாமன்றத்தின் வாயிலாக பொதுமக்களுக்குத் தெரிவிப்பது எனது கடமை ஆகும் என கருதுகிறேன்.

பேரறிவாளன் உள்ளிட்ட மூன்று நபர்களின் கருணை மனு மேதகு குடியரசுத் தலைவர் அவர்களால் நிராகரிக்கப்பட்ட நிலையில் இதனை மாற்றுவதற்கு எந்தவித அதிகாரமும் மாநில முதலமைச்சர் என்ற முறையில் எனக்கு இல்லை என்பதை வலியுறுத்தித் தெரிவிக்க விரும்புகிறேன்.

இந் நிலையில் எனக்கு இதற்கான அதிகாரம் இருக்கிறது என்ற பிரசாரத்தை அரசியல் கட்சித்தலைவர்கள் எவரும் மேற்கொள்ள வேண்டாம் என்று இந்தப் பேரவையின் வாயிலாக கேட்டுக் கொள்கிறேன்.

குடியரசுத் தலைவர் அவர்களால் கருணை மனு நிராகரிக்கப்பட்ட நிலையில் இந்த மூவரின் உயிரைக் காப்பாற்ற தற்கொலை செய்து கொள்வதாக ஒரு கடிதம் எழுதி வைத்துவிட்டு மக்கள் மன்றம் என்ற அமைப்பைச் சேர்ந்த செங்கொடி என்ற இளம் பெண் தற்கொலை செய்து கொண்டதாக வந்துள்ள செய்தி எனக்கு மிகுந்த வருத்தத்தை ஏற்படுத்தியுள்ளது. உணர்ச்சி வயப்பட்டு இது போன்ற செயல்களில் யாரும் ஈடுபட வேண்டாம் என்றும் நான் கேட்டுக்கொண்டு அமைகிறேன் என முதலமைச்சர் ஜெயலலிதா தனதுரையில் தெரிவித்துள்ளார். (ச-5)

மஹாராஜா Food நிறுவனத்தின் மற்றும் ஒரு சேவை
G.T.V.யும் Aramex இணைந்து நடத்தும் உள் நாட்டு கடிதங்கள் பொதிகள் விநியோகம் செய்தல் கொழும்பு /யாழ்ப்பாணம் ஆகிய இடங்களுக்கு ஒப்படைத்த அடுத்த தினமே முகவரியில் ஒப்படைக்கப்படும்.
MAHARAJA FOOD PRODUCT
கொழும்புக்கான கட்டணம் ரூபா 200/= மட்டுமே
மேலதிக விபரங்களுக்கு:-
கொழும்பு
# 18/3 Dr.E.A coory Mawatha, Wellawathte.
T.P:-0112360926,0112259849
யாழ்ப்பாணம்
aramex delivery unlimited
No.225, Kasturiyar Road, Jaffna
T.P.: 021 222 4338
No.272, K.K.S. Road, Jaffna.
T.P.: 021 222 4825

உல்லாசம் உங்கள் கண்முன்னே...
TILKO JAFFNA CITY HOTEL
TILKO hotels
No.70/6, K.K.S Road, Jaffna.
Tel: 021 2225969
web:www.cityhoteljaffna.com
e-mail: info@cityhoteljaffna.com

# ஜெனீவா கூட்டத்திற்கு...

டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பிளேக்கின் பயணம் பிற்போடப் பட்டுள்ளதை கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகம் உறுதி செய்துள்ளது.

ஆனால் அவர் இலங்கைக்கு எப்போது வருவார் என்ற தகவலை அது வெளியிடவில்லை.

நேற்று தொடக்கம் புதன்கிழமை வரை இலங்கையில் பயணம் மேற்கொள்ளவிருந்த பிளேக், யாழ்ப்பாணத்துக்குச் செல்லவும் ஜனாதிபதி உள்ளிட்ட அரசாங்க தரப்பினரைச் சந்திக்கவும் அரசியல் மற்றும் சமூக பிரதிநிதிகளுடன் கலந்துரையாடவும் திட்டமிட்டிருந்தார்.

பிளேக்கின் வருகை இலங்கைக்கு அழுத்தங்களை அதிகரிக்கலாம் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில் அவரது பயணம் பிற்போடப்பட்டுள்ளது இலங்கை அரசுக்கு சற்று ஆறுதலைக் கொடுத்துள்ளதாக கொழும்பு அரசியல் வட்டாரங்கள் கருத்து வெளியிட்டுள்ளன.

எனினும் அவர் ஐ.நா.மனித உரிமைகள் பேரவைக் கூட்டத் தொடர் செப்ரெம்பர் 12-ம் திகதி ஆரம்பமாவதற்கு முன்னர் கொழும்புக்கு வருவதற்கு வாய்ப்புகள் அதிகம் இருப்பதாக தெரிவிக்கப் படுகிறது. (ச-5)

# இடம் பெயர்ந்தோர்...

கீழ் அரசு இதுவரை 2 லட்சத்து 73 ஆயிரத்து 88 பேரை மீள்குடியமர்த்தி மற்றும் விடுவித்தும் உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

வவுனியா, மன்னார், திருகோணமலை மற்றும் ஏனைய மாவட்டங்களில் 2 லட்சத்து 35 ஆயிரத்து 517 பேர் அவர்களது சொந்த இடத்தில் மீள்குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

27 ஆயிரத்து 720 பேர் மனிதாபிமான காரணங்களுக்காக அரசினால் விடுவிக்கப்பட்டவர்கள் ஆவர். வயது முதிர்ந்தோர், பல்கலைக் கழக மாணவர்கள், கைக்குழந்தைகளுடனான குடும்பம், கர்ப்பிணித்தாய்மார்கள் மற்றும் வெளிநாட்டு கடவுச் சீட்டு கொண்டோர்களே இவ்வாறு விடுவிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, யாழ். மாவட்டத்தில் 9 ஆயிரத்து 851 பேர் அவர்களது சொந்த இடங்களில் மீள்குடியமர்த்தப்பட்டுள்ளனர் எனவும் ஜனாதிபதி செயலகத்தின் கொள்கை ஆய்வு மற்றும் தகவல் பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-5)



திருக்கல்யாண பூசை இடம்பெற்று வள்ளி, தெய்வானை சமேதராய் திருவீதியுலா வரும் முருகப்பெருமான்.

# சிறுமியை காண...

வதாவது,

நேற்று முற்பகல் 11 மணியளவில் சமையல் பொருட்கள் வாங்குவதற்காக வீட்டின் அண்மையிலுள்ள கடையொன்றிற்கு சென்றுள்ளாள்.

கடைக்குச் சென்ற சிறுமி நீண்ட நேரமாகியும் வீடு திரும்பவில்லை. பின்னர் சிறுமியை உறவினர்கள் அப்பகுதியெங்கும் தேடியலைந்தும் இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை. இச்சம்பவத்தால் உடுப்பிட்டி பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. (ச-5)

# கைதான மாணவன்...

வுப் பிரிவு பொலிஸாரே நேற்று முன் தினம் 16 வயதுடைய கிருஸ்ணகுமார் மணிஹரன் மாணவனைக் கைது செய்தனர்.

எனினும் அம்மாணவர் குற்றம் எதுவும் செய்யவில்லை எனவும் அவரை விடுதலை செய்ய வேண்டுமெனவும் மக்கள் கோரியிருந்ததால் அவர் விடுதலை செய்யப்பட்டார். (ச-5)

# மர்ம மனிதன் என்ற பீதியை...

நிலையை அறிந்திருப்பார்.

அந்நேரத்தில் மக்களோடு மக்களாக இங்கு இல்லாமல் இப்போது அச்சமும், பீதியும், பயமும் தணிந்து வருகின்ற நேரத்தில் இங்கு வந்து மக்களுக்கு ஏதோ கூறவேண்டும் என்பதற்காக மக்கள் முன் வந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் மீது குற்றம் சுமத்தியிருப்பது அவரது அரசியல் நாகரிகமற்ற செயலாகும்.

மர்ம மனிதர்கள் என்று கூறப்படுபவர்களை நேரடியாக கண்டவர்கள் எவரும் இல்லை. எல்லாம் வதந்தியாகும். இவற்றையெல்லாம் பெரிதுபடுத்தி மக்களை தூண்டிவிட்டு வேடிக்கை பார்த்தவர்கள் மாவட்டத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் என பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் கூறியிருக்கிறார்.

அப்படியானால் மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள பெரும்பாலான மக்கள் மர்ம மனிதனின் அச்சுறுத்தல்கள் இருப்பதாகக் கூறியிருப்பது பொய்யா? மர்ம மனிதனை நேரடியாகக் கண்டு அவர்களை துரத்திச் செல்லும்போது அண்மையிலுள்ள பொலிஸ் நிலையங்களிலும், இராணுவமுகாம்களிலும் புகுந்திருப்பதாக மண்டூர், புதூர், களுவன்கேணி, திகிலிவெட்டை, தாண்டியடி, குறிஞ்சாமுனை, ஈச்சந்தீவு, ஊறணி, கொக்கட்டிச் சோலை, துறைநீலாவணை, செங்கலடி, காத்தான்குடி உட்பட இன்னும் சில கிராமங்களைச் சேர்ந்த தமிழ் மக்கள் கூறுவது வதந்தியா? அல்லது பிரதியமைச்சர் கூறுவது வதந்தியா? என்பதை மக்கள் நன்கு உணர்வார்கள்.

இக் காலப்பகுதியில் மக்கள் வீதிகளில் இறங்கி ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டமையினால் சில இடங்களில் இடம்பெற்ற வன்முறைகளின் போது தாண்டியடி, கொக்கட்டிச்சோலை, துறைநீலாவணை, ஊறணி போன்ற இடங்களில் ஆண்கள், பெண்கள் என ஐம்பதுக்கு மேற்பட்டோர் பாதுகாப்பு படையினராலும், பொலிஸாராலும் தாக்கப்பட்டார்கள். இவர்களில் இருபத்தைந்துக்கும் மேற்பட்டோர் மட்டக்களப்பு மற்றும் களுவாஞ்சிக்குடி வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்றும் வந்தனர். இவர்களை நாங்கள் நேரில் சென்று பார்வையிட்டு ஆறுதல் கூறி அவர்களது உடனடித் தேவைகளையும் நாம் நிறைவேற்றினோம். இதனை அவர் அறிவாரா?

முழுப் பூசணிக்காயை சோற்றுக்குள் புதைத்துவிட்டு எலும்பு இல்லாத நாக்கினால் எதையும் கதைக்கலாம் என்பதற்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களை அவதூறாக கதைப்பதற்கு இவருக்கு எந்த விதத்திலும் அருகதை இல்லை என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் நாம் தெட்டத் தெளிவாக கூற விரும்புகின்றோம். (ச-5)

# நடுக்கடலில் படகு கவிழ்...

ஒரு மணியளவில் மண்டை தீவில் இருந்து கடலுக்குச் சென்றுள்ளனர்.

மாலை 5 மணியாகியும் வீடு திரும்பாததன் காரணமாக கடலுக்குச் சென்றவர்களை உறவினர்கள் தேடும் முயற்சியில் ஈடுபட்டனர்.

இருப்பினும் அவர்களைக் கண்டு பிடிக்க முடியவில்லை. இந்நிலையில் நேற்று அதிகாலை 5 மணியளவில் 3 படகுகளில் சென்று அவர்களை தேடும் முயற்சியில் உறவினர்கள் ஈடுபட்டனர்.

அப்போது நெடுந்தீவுக்கும் மண்டை தீவுக்கும் இடைப்பட்ட பகுதியில் உள்ள கற்கடத் தீவுப் பகுதியில் நிக்ஷன் வலையில் சிக்குண்டு உயிரிழந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டார்.

அத்தோடு இவருடன் சென்ற லியூக்ஸ் ஆபத்தான நிலையில் நீரில் தத்தளித்துக் கொண்டு இருந்த போது மீட்கப்பட்டார்.

இவர் தற்போது யாழ்.போதனா வைத்தியசாலையில் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அத்தோடு நிக்ஷனின் சடலம் பிரேத பரிசோதனையின் பின்பு உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

சடலத்தை ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்ற நீதிபதி ஜோய் மகிழ் மகாதேவா யாழ்.போதனா வைத்தியசாலையில் வைத்து பார்வையிட்டார். (எ-6)

# ஆளுநரின்...

வடக்கு மாகாணக் கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளராகவும் எஸ். இளங்கோவன் நீடிப்பார் என அறிவிக்கப்பட்டுள்ளதாக வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகத் தகவல்கள் தெரிவித்தன. (ச-5)

## சாரதி தேவை

யாழ்ப்பாணத்தில் உள்ள எங்கள் நிறுவனத்திற்கு இம் மாவட்டத்தில் உள்ள இடங்களிற்கு பொருட்கள் ஏற்றி இறக்கும் லொறிக்கு சாரதி உடன் தேவை.
சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். நேரில் வரவும்.
NEW ASIAN CENTER
56/15 B ஸ்ரான்லி வீதி,
(சம்பத் வங்கி அருகாமை) யாழ்ப்பாணம்.
T.P:- 0718561654
(8018)

## வேலைக்கு ஆள் தேவை

புடைவை வியாபாரத்தில் நன்கு அனுபவமுள்ள ஆண்கள் மட்டும் தேவை. கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும். நேரில் தொடர்பு கொள்ளவும்.
சரவணா டெக்ஸ்
770, 772, கே.கே.எஸ் வீதி,
தட்டாதெருச் சந்தி, யாழ்ப்பாணம்.
(த-4252)

# வேலூர் சிறையில்...

**நிறை பார்த்து**

ஒத்திகை தண்டனை நிறைவேற்றுவதற்கான அதிகாரப்பூர்வ உத்தரவு வந்ததும் அடுத்த கட்ட நடவடிக்கை தொடங்கும். கைதிகள் ஒவ்வொருவரின் உடல் எடை, உயரம் பரிசோதிக்கப்படும். கைதியின் உயரம் மற்றும் எடைக்கு ஏற்ப தூக்குக் கயிறு தயார் செய்யப்படும். பின்னர் கைதியின் எடைக்கு நிகரான பொருளை கயிறுடன் இணைத்து தூக்கு மேடையில் தூக்கில் ஒத்திகை நடத்தப்படும். கயிறின் தாங்கும் திறன், தொங்கும் இழுவை நீளம் பரிசோதிக்கப்பட்ட பின்னர் அதே போன்ற உறுதி, நீளத்துடன் கயிறு தயார் நிலையில் வைக்கப்படும்.

**மருத்துவப் பரிசோதனை**

தூக்குத் தண்டனை பெரும்பாலும் அதிகாலை நேரத்திலேயே நிறைவேற்றப்படும். தண்டனை நிறைவேற்றப்படுவதற்கு முன்பாக கைதிகளின் உடல் ஆரோக்கியத்தை டாக்டர்கள் பரிசோதிப்பர். மனநிலையும், உடல் நிலையும் சரியாக இருப்பதாக டாக்டர்கள் சான்று அளித்ததும் அடுத்த நடவடிக்கை அமுல்படுத்தப்படும்.

**கடைசி ஆசை என்ன?**

தூக்குத் தண்டனை நிறைவேற்றப்படும் முன்பாக கைதியின் கடைசி ஆசை குறித்து சிறை அதிகாரிகள் வினவுவர். சம்பந்தப்பட்ட கைதி, தனது கடைசி ஆசை, எதிர்பார்ப்பை தெரிவிக்கலாம். அவை சட்டப்படியாக ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இருப்பின் ஆசையை நிறைவேற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**தூக்குக்கு அழைத்து வருதல்**

கைதியைத் தூக்கிலிடுவதற்கான நேரம் முன் கூட்டியே நிர்ணயிக்கப்பட்டிருக்கும். காவலர்களின் பாதுகாப்பில் தூக்கு மேடைக்கு அழைத்து வரப்படும் கைதி, இரு கைகளும் பின்புறம் கட்டப்பட்டு மேடையில் நிறுத்தப்படுவர். அவருக்குத் தண்டனை நிறைவேற்றுவதற்கான உத்தரவை சிறைக் கண்காணிப்பாளர் வாசிப்பார். உடன் டாக்டர்கள் இருப்பார்கள். அதன் பின் கைதியின் முகம், தலை கறுப்பு நிற துணியால் மறைக்கப்படும். தண்டனையை நிறைவேற்றுவதற்கான உத்தரவு பிறப்பிக்கப்பட்டதும் லிவர் இயக்கப்படும். தூக்கு மேடையின் கீழ் கைதியின் காலடியில் இருக்கும் விசை நகர்ந்ததும் உடல் தொங்கி தண்டனை நிறைவேறும்.

**13 நிமிடம் வரை தொங்கும்**

தூக்குத் தண்டனை நிறைவேற்றப்பட்டதும் கைதியின் உடல் மேடையின் மீது 13 நிமிடம் வரை தொங்கியவாறு இருக்கும். அதுவரை அருகில் யாரும் செல்லமாட்டார்கள். அதன் பின் டாக்டர்கள் பரிசோதித்து மரணம் சம்பவித்ததை அறிவிப்பர். பிறகு உடல் இறக்கப்பட்டு தனி அறைக்கு கொண்டு செல்லப்படும். தண்டனை நிறைவேற்றத்தின் போது சிறையிலுள்ள பிற கைதிகள் அவரவர் செல்லில் அடைக்கப்படுவர்.

**தனித்தனியாக நிறைவேற்றம்**

ஒன்றுக்கும் மேற்பட்ட கைதிகளை ஒரே நாளில் தூக்கிலிட வேண்டியிருந்தால் தனித்தனியாகவே தண்டனை நிறைவேற்றப்படும். ஒரு கைதியை தூக்கிலிடுவதற்கான நடைமுறை கால அவகாசம் முடிந்ததும் அடுத்தடுத்த கைதிகளுக்கு நிறைவேற்றப்படும். தண்டனை நிறைவேற்றப்பட்ட பின் உறவினர்களிடம் உடல்கள் ஒப்படைக்கப்படும். இவ்வாறு சிறை அதிகாரிகள் தெரிவித்தனர். (எ-5)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 30.08.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.